# MEDITATIONS FOR LENT.

# ஒருசந்தி நாள்

## தியானப் புத்தகம்.

மூன்றும் பதிப்பு.

ஞா. சாமுவேல்
ஐயரால் இயற்றப்பட்டது.

MADRAS.
Printed for the Ev. Lutheran Mission
Publishing House, Tranquebar.
1931.

*Price As 9.*] [விலை அணா 9.

# முகவுரை.

## முதற் பதிப்பு.

---

ஒருசந்தி நாட்கள் என்றும் தபசு நாட்கள் என்றும் பெயர் வழங்கும் நாற்பது நாட்கள் நாம் நமது இரட்சகரின் பரிசுத்த பாடுகளைக் கருத்தோடு தியானிக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கின்றன. அனேக கிறிஸ்தவர்கள் இந்த நாட்களின் முக்கிய நோக்கத்தை மறந்து, தங்கள் சரீரத்துக்கு அவசியமான போசன பானுதிகளை விலக்கி வைப்பதினுலே கர்த்தருக்குப் பெரிய ஊழியஞ் செய்து புண்ணியஞ் சம்பாதிக்கலாம் என்று நினைத்துத் தப்பிப் போகிறதைப் பார்க்கிருேம். நாமோ இயேசு கிறிஸ்துவாகிய ஒரே ஒருவரின் புண்ணியத்தை நம்பி, போசனத்திலும் அல்லது பானத்திலும் யாதொருவனுலும் குற்றமாய் நிர்ணயிக்கப்படக் கூடாமல் விடுதலை பெற்றவர்களாயிருக்கிருேம்(கொலோ. 2, 16). ஆகிலும், மெய்க் கிறிஸ்தவர்கள் தங்கள் சீவியத்தின் ஒவ்வொரு நாளிலும் செய்ய வேண்டியதுபோல், விசேஷமாய் ஒருசந்தி நாட்களிலும் தங்கள் லௌகீக சிந்தையையும், தற்பேணுதலையும் மட்டுக் கட்டுகிறதற்கும், இச்சைகளுக்கு இடமாய் உடலைப் பேணுதிருப்பதற்கும் அவசியமான சகல எத்தனங்களையும் உற்சாகமாய்க் கையாடுவதுடன் பராபரனுடைய திருவசனத்துக்கு ஒத்தபடி மெய்த்தவசாகிய குணப்படுதலை நடப்பிக்க மறவாதிருப்பார்கள்.

நமது அருமை இரட்சகரின் திருப்பாடுகள் மரணத்தின் தியானத்தைப் பார்க்கிலும் அதிகமாக நம்மை மெய்த்தவசுக்கு ஏவக்கூடியது வேறேதேனும் உண்டோ. இதன் நிமித்தமல்லவோ, பரி. அப்போஸ்தலன் : நான் இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையுண்ட அவரையே ஒழிய வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறிந்திருப்பதைக் காரியம் என்று எண்ணிக் கொண்டதில்லை (1 கொரி. 2, 2.) என்கிருர். நாம் கர்த்தருடைய பாடு

களைக் குறித்துத் தியானிப்பதில் பராபரனுடைய ஒப்பற்ற சிநேகத்தையும், நமது பாவத்தின் அளவில்லாக் கெடுதியையும் உணர்ந்து பார்த்து, கிறிஸ்துவையே நமது ஒன்றான மீட்பரும் இரட்சகருமாக நோக்குவது முக்கியம். இதற்கு உதவியாகவே இந்தச் சிறு தியானப் புத்தகம் சேர்க்கப்பட்டது. ஒருசந்தியின் நாட்களுக்குச் சரியாக இதில் நாற்பது தியானங்கள் உண்டு. ஞாயிற்றுக் கிழமைகள் இந்தக் கணக்கில் அடங்கியிராததால், அன்று நிருப சுவிசேஷ வாக்கியத்துக்கடுத்த ஒரு பிரசங்கத்தை வாசிக்கலாம்.

இப்புத்தகத்திலுள்ள கருத்துகளில் மிச்சமானவை பல கர்மானிய தியானப் புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டிருந்தும், எனது சொந்த வார்த்தைகளினாலே புனையப் பட்டிருப்பதால் உண்டாயிருக்கும் குறைவைப் பொறுத்துக் குணத்தைக் கிரகித்துக் கொள்வது பெரியோர் கடமை. குழந்தைகள் பாலகர் வாயினாலே துதியுண்டுபண்ணுகிற ஞானமுள்ள கர்த்தர் நான் வெளிப்படுத்தத் துணிந்த இந்தத் தியானப் புத்தகத்தாலும் தமது திருநாமத்துக்கு மகிமையும் அனேகம் ஆத்துமாக்களுக்கு நன்மையும் உண்டாகப் பண்ணுவாராக.

தாரங்கன்பாடி, 1883-ம் ௵ ஜனுவரி ௴ 8-ம் உ.

ஞா. சா.

---

## மூன்றாம் பதிப்பு.

இப்பதிப்பில் வேத வசனங்கள் புதிய ஏற்பாட்டின் பெப்ரீசியு புதிய திருப்புதலுக் கொத்தபடியும், ஞானப் பாட்டுகள் புதிய திருப்புதலுக் கொத்தபடியும் மாற்றப்பட்டிருக்கிறது. மற்றதெல்லாம் பழைய பதிப்பிலுள்ளதே.

12—1—1931.

# ஒருசந்தி நாள் தியானப் புத்தகம்.

## 1. ஒருசந்தியின் நாற்பது நாட்களில் முதல் நாளாகிய புதன்கிழமை.

### பெத்தானியா விருந்து.

பலியை அல்ல இரக்கத்தையும், தகன பலியைப் பார்க்கப் பராபரனின் அறிவையும் விரும்புகிறேன். ஓசே. 6, 6.

பஷா வர ஆறுநாளைக்கு முன்னே, இயேசுநாதர் தாம் மரித்தோரினின்று எழுப்பின மரித்தவனான லாசரு இருக்கும் பெத்தானியாவுக்கு வந்தார். அங்கே அவருக்குக் குஷ்டரோகியான சீமோன் வீட்டிலே இராவிருந்து பண்ணினார்கள். மார்த்தாள் பணிவிடை செய்தாள். லாசருவோ அவருடனே கூடப் பந்தியிருக்கிறவர்களில் ஒருவனாயிருந்தான். அப்போது மரியாள் விலையேறப்பெற்ற மெய்யான நற்து தைலத்தின் ஒரு ருத்தலை எடுத்து, இயேசுவின் கால்களைப் பூசி, தன் மயிர்களால் அவருடைய கால்களைத் துடைத்தாள். தைலத்தின் பரிமளத்தினால் வீடு நிறைந்தது. அப்போது அவரைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனும் அவருடைய சீஷரில் ஒருவனுமாகிய சீமோன் குமாரனான யூதா இஸ்காரியோத்து : இந்தத் தைலம் முந்நூறு பணத்துக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுக்கப்படாமல் போனதென்ன என்றான். ஆனால் இதை அவன் தரித்திரர்பேரிலே கவலையாய்ச் சொல்லாமல், அவன் திருடனாயிருந்து பணப்பையை வைத்துக்கொண்டு, போடப்பட்டதுகளைச் சுமக்கிறவனானபடியினாலே, இப்படிச் சொன்னான். மற்றச் சீஷர்களிலும் சிலர் தங்களுக்குள்ளே தாங்கலடைந்து : இந்த அழிம்பு எதுக்கு; இந்தத் தைலத்தை உயர்ந்த கிரயம் பண்ணி, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அவள் பேரிலே சினந்தார்கள். இயேசுவோ இதையறிந்து, அவர்களுக்குச் சொன்னதாவது : அவளை விடுங்

கள், ஏன் அவளை வருத்தப் படுத்துகிறீர்கள்; என்னில் நற்கிரியையைச் செய்தாள். ஏனெனில் உங்களிடத்தில் எப்போதும் தரித்திரர் இருக்கிறார்கள்; உங்களுக்கு மன துண்டானால், நீங்கள் அவர்களுக்கு நன்மை செய்யலாம்; நானோ உங்களிடத்தில் எப்போதும் இரேன். இவள் தனக்குள்ளபடி செய்தாள், பிரேத அலங்காரத்துக்காக என் சரீரத்தைத் தைலம் பூச முந்திக் கொண்டாள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்தச் சுவிசேஷம் லோகமெங்கும் எங்கே பிரசங்கிக்கப்படு மோ, அங்கே அவள் செய்ததும் அவளை நினைப்பதற் காகச் சொல்லப்படும் என்றார். மத். 26, 6-13; மாற். 14, 3-9; யோவா. 12, 1-8.

---

ஆத்துமாவே, நமது அருமை இரட்சகருக்கு அவர் சிநேகித்த அவருடையவர்கள் செய்த இந்த விருந்தைக் கவனித்துப்பார். இரட்சகரால் குஷ்ட ரோகம் நீங்கச் சுத்திகரிக்கப்பட்ட சீமோன் வீட் டில் விருந்து நடக்கிறது. மரித்தோரிலிருந்து எழுப் பப்பட்ட லாசருவோடு இயேசுநாதரும் அவர் சீஷரும் பந்தியிருக்கிறார்கள். உன் பாவக் குஷ்ட ரோகத்தைத் தீர்த்து, பாவத்திலும் அக்கிரமத்தி லும் மரித்திருந்த (எபே. 2, 1.) உன் ஆத்துமாவை உயிர்ப்பித்த உன் இரட்சகர் உன்னோடு பந்தியிருக் கச் சித்தமா யிருக்கிறார். அவர் உன்னை நோக்கி: இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறோம். ஒரு வன் நம்முடைய சத்தம் கேட்டுக் கதவைத் திறந்தால், அவனண்டைக்கு நாம் உட்பிரவேசித்து அவனோடு இராப்போசனம் பண்ணுவோம்; அவன் நம்மோடும் இராப்போசனம் பண்ணுவான் (அறி. 3, 20) என்று சொல்லுகிறார். அதற்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா.

மார்த்தாள் பணிவிடைசெய்ய, மரியாள் விலை யேறப்பெற்ற தைலத்தினால் அவர் திருக்கால்களைப்

பூசி, தன் மயிர்களால் துடைத்தாள். அப்படியே இராசா தமது பந்தியில் இருக்குந்தனிலும் என் நற்து தைலம் தன் வாசனையை வீசும் (உன். 1, 12). என்னைக்கொண்டு தம்முடைய அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற பராபரனுக்கு ஸ்தோத்திரம் (2 கொரி. 2, 14). முந்த இயேசு நாதருடைய திருப்பாதத்தண்டை உட்கார்ந்து, அவருடைய திருவாயின் வசனத்தைக் கேட்டு, தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்ட மரியாளின் விசுவாசம் இப்போது நற் கிரியையாகிய கனியைக் கொடுத்தது. உன்னிலுள்ள விசுவாசம் உயிருள்ளதோ, செத்ததோ. கிரியை யில்லாத விசுவாசம் செத்தது என்று அறிவாயே. (யாக். 2, 17).

இயேசுவின் சீஷரும், விசேஷமாய் யூதா இஸ் காரியோத்தும் மரியாள் செய்த நற்கிரியையை அழிம்பென்று சொல்லி இகழ்ந்தார்கள். அவளோ அதற்காகக் கோபமாகித் தன் வாயைத் திறக்க வில்லை, மறு வார்த்தை பேசவும் இல்லை. இரட்சகர் தாமே அவள் காரியக் கர்த்தராக எழுந்து, அவள் கிரியையைப் புகழ்ந்து பேசுகிறார். உலகத்தின் இகழ்ச்சி பெரிதோ, கர்த்தரின் புகழ்ச்சி பெரிதோ, சொல்லு.

இரட்சகர் மரித்தபின் அவர் திருமேனியைக் கந்தவர்க்கங்களால் அலங்கரிக்க வந்தவர்கள் நீக் கொதேமு, யோசேப்பு என்ற பெரிய மனுஷர். மரி யாளோ அவர்களுக்கு முந்தினவள் என்ற கீர்த்தி அவளுக்குக் கர்த்தரால் கிடைத்தது. இப்படியே கர்த்தர் தம்மைச் சிநேகிக்கிற தமது பிள்ளைகளுக்கு அவர்கள் எதிர்பாராத நன்மைகளையும் மேன்மை

யையும் கட்டளையிடுகிறார். ஆகையால் நீ உன் சுய புகழ்ச்சியைத் தேடாமல், கர்த்தருடைய திருச்சித் தத்துக்கு உன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்திருப் பாயாகில், நீ அவரால் பெரிதான நன்மைகளைக் காண்பாய்.

ஆத்துமாவே, மரியாளைப்போல் இரட்சகருக்கு அன்பு பாராட்ட உனக்கும் மனதிருக்குமென்று நம்புகிறேன். நீ அவரை விசுவாசிக்கிற சிறியருக்கும் ஏழைகளுக்கும் கபடில்லாத நல்மனதோடு என்ன செய்கிறாயோ, அதை அவர் தமக்குச் செய்ததாக அங்கிகரிக்கிறார் (மத். 25, 40.) என்பதை மறவாதே. அதற்காகவே நம்மோடுகூட எப்போதுந் தரித் திரரை வைத்திருக்கிறார். நீ அவர்களில் கிறிஸ்து வைச் சிநேகிக்கிறாயா.

இந்தத் தைல அபிஷேகத்தில் கர்த்தர் தமது மரணத்தைக் குறிப்பாய்க் கண்டு பேசுகிறார். கிறிஸ் தவனே, உன் மரணத்தை எப்போதும் நினை. உன் உற்றார், உறவோர் உன் பிரேதத்தை அலங்கரிக்கும் ஒருநாள் வரும் என்பதை நினைவுகூர்ந்து நல் முடி வுக்கு உன்னை ஆயத்தப்படுத்து.

இந்தச் சுவிசேஷம் லோகம் எங்கும் எங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கே அவள் செய்ததும் அவளை நினைப்பதற்காகச் சொல்லப்படும் என்றதால், கர்த்தர் மரியாளின் சிநேகக் கிரியையை மேன்மைப் படுத்துவதுமன்றி, பாவத்தின் கீழும் சாபத்தின் கீழும் தவிக்கிற லோகத்துக்குச் சுவிசேஷப் பிரசங் கத்தின் ஆறுதலை வாக்களிக்கிறார். அவர் தாம் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும் சத்திய வாசகர் என்பதற்கு நீயே சாட்சியல்லவோ. பிரிய முள்ள ஆத்துமாவே, உன் நாட்டிலும் வீட்டிலும்

அவரது இரட்சண்ய சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு வருகிறதும், மரியாளின் செய்கை அவளை நினைப்ப தற்காகச் சொல்லப்படுகிறதும் நிசந்தானே.

## செபம்.

என் அன்புள்ள இயேசு சுவாமி, தேவரீர் என்னைப் பாவங்களறக் கழுவின உமது கிருபைக்கு ஸ்தோத்திரம். நீர் அடியேனுக்குப் பாராட்டின அன்பை உணரும் நன்றியறிதலுள்ள இருதயத்தை எனக்குத் தந்தருளும். நான் எல்லாவற்றையும் பார்க்க உம்மையும், என்னைப்போல் பிறரையும் உண்மையாய்ச் சிநேகிக்கவும், எனக்கு உள்ளது உரியது யாவையும் உமது நாம மகிமைக்கென்றும், உமது பிள்ளைகளின் நன்மைக்கென்றும் ஒப்புக் கொடுக்கவும் எனக்குத் துணைசெய்தருளும். உமது நாமத்தின் நிமித்தம் எனக்குண்டாகும் சகல உபத்திரவங்களையும் நான் பொறுமையாய்ச் சகிக்க உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு என்னைப் பலப்படுத்தியருளும் சுவாமி, ஆமேன்.

நான் உம்மை முழுமனதாலும்
சிநேகிப்பேன், என் இயேசுவே;
நான் உம்மை நித்தம் வாஞ்சையாலே
பின்செல்லுவேன், என் சீவனே;
குலை துடிக்குமட்டும் நீர்
என் நெஞ்சில் தங்கிறீர்.

நான் உம்மை நேசிப்பேன், நீதாமே
என் உத்தம சிநேகிதர்;
நீர் தேவ ஆட்டுக்குட்டியாமே,
நீர் என் பத்தாவுமானவர்,
நான் என்றும் உம்மை நேசிப்பேன்,
தினமும் போற்றுவேன். (147, 1. 2.)

## 2. வியாழக்கிழமை.

### எருசலேம் நகரப் பிரவேசம்.

இதோ வருகிறேன். சங். 40, 7.

மறுநாளிலே பண்டிகைக்கு வந்த வெகு கும்பு இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று கேள்விப்பட்டுக் குருத்தோலைகளைப் பிடித்து, அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்டு: ஓசியன்னா, கர்த்தருடைய நாமத்திலே வருகிற இஸ்ரவேலின் இராசா ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று சத்தம் இட்டார்கள். சீயோன் குமாரத்தியே, பயப்படாதே; இதோ, உன் இராசா கழுதைக் குட்டியின்மேல் ஏறி வருகிறார் என்று எழுதியிருக்கிற பிரகாரமாக, இயேசு ஒரு கழுதைக் குட்டியைக் கண்டுபிடித்து, அதன்மேல் ஏறினார். அவர் இலாசருவைக் கல்லறையிலிருந்து வரவழைத்து, மரித்தோரை விட்டு எழுப்புகிறபோது, அவருடனே கூட இருந்த கும்பு அதற்குச் சாட்சிகொடுத்தது. ஆகையினாலே அவர் இந்த அடையாளத்தைச் செய்தார் என்று கும்பு கேட்டிருந்து, அவருக்கு எதிர்கொண்டு போயிற்று. அப்போது பரிசேயர் ஒருவரோடொருவர்: நீங்கள் செய்கிறது ஒரு பிரயோசனமும் அல்லவென்று பாருங்களேன்; இதோ, லோகம் அவன்பிறகே போயிற்று என்றார்கள். மத். 21, 1-9; மாற். 11, 1-10; லூக். 19, 29-44; யோவா. 12, 12-19.

---

ஆத்துமாவே, உனக்காகப் பாடுபட்டு, உன்னை மீட்க மனமுள்ளவராக எருசலேமுக்குள் பிரவேசிக்கிற உன் இரட்சகரை நோக்கிப்பார். அவர் உற்சாகமுள்ளவராகப் பிரவேசிக்கிறார். எருசலேம் பட்டணத்தில் நடக்கும் சதியோசனை அவருக்கு நன்றாய்த் தெரியும். மனிதரின் ஈரல் இருதயங்களை அறிகிற கர்த்தருக்கு மறைவானதென்ன. அவருக்கு யூதராலும் புறச்சாதியாராலும் உண்டாகப்போகிற நிந்தை

தூஷணங்களும், தாம் அவர்களால் அனுபவிக்கப் போகிற வாரடி முண்முடியின் வேதனையும், தாம் அறையப்படப் போகிற சாபமரமுமாகிய யாவும் அவர் கண்முன்னே நின்றது. ஆகிலும் அவர் உன் நிமித்தம் எருசலேமுக்குப் போக எவ்வளவு உற்சாக முள்ளவரா யிருக்கிறார். அவர் ஐயாயிரம்பேரைப் போஷித்தபோது கும்புகள் அவரை இராசாவாக்க மனதாயிருந்தும் அதற்குச் சம்மதியாமல் அவர்களை விட்டு அகன்றுபோனவர் தாம் பாடுபடப்போகிற இந்தச் சமயத்தில் இராச மகிமையை அங்கிகரிக்க வும், அதற்கான சங்கீத வாக்கியத்தைக் கேட்கவும் (சங். 118, 25. 26) பிரியசித்தமுள்ளவராயிருக்கிறார். இது என்ன ஆச்சரியம். இரத்தம் சிந்துதலினால் தமது இராச்சியத்தை ஸ்தாபித்து இரத்தக் கிரயத் தினாலே உன்னைத் தமது குடியாக்கப் போகிற அவ ரது உன்னத சிநேகமல்லவோ அவரை இதற்கு ஏவிற்று. உனக்காகப் பாடுபட உற்சாக மனமுள்ள உன் இரட்சகருக்கு நீ உற்சாகமான கீழ்க்குடியாக உனக்கு மனதுண்டா. நீ இப்போது அவருக்கு ஓசியன்னா பாடும் அவர் சீஷர் கூட்டத்தோடு இருக் கிறாயோ, அல்லது அவரை விரோதித்து முறுமுறுக் கும் பரிசேயர் கூட்டத்தோடு நிற்கிறாயோ என்று உன்னைத்தானே சோதித்துப்பார்.

அவர் தாழ்மையுள்ள இராசாவாகப் பிரவேசிக் கிறார். அவர் உலக இராசாக்களைப்போல் சதுரங்க சேனைகளோடு பிரவேசிக்கவில்லை. இராசாதி ராசா வும் கர்த்தாதி கர்த்தருமாகிய அவர்வாகனம் கழுதை யாகிய நீச வாகனம். அவர் பரிவாரம் ஏழைச் சீஷர். அவர்கள் தங்கள் தாழ்மையுள்ள இராசா வுக்கு உகந்தவண்ணம் தங்கள் வஸ்திரங்களை அவ ருக்குமுன் விரித்துப்போட்டார்கள். ஆ, இது என்ன

கோலம். மேட்டிமையினால் மகிமையை இழந்து போன உன்னைத் தாழ்மையான பாடுகளின் மூல மாய் இரட்சித்து மேக வாகனனாக்கி (1 தெச. 4, 18), பரமசேனைகளாகிய பரிவாரத்துடன் பரம எரு சலேம் நகரத்தில் சேர்க்கவேணும் என்கிற அவர் திருச்சித்தமல்லவோ இப்படி அவரை ஆக்கிற்று. இவ்விதமாகத் தம்மைத்தாழ்த்தின கிறிஸ்து இயேசு விலுள்ள சிந்தை உன்னில் இருக்கிறதா. மெய்மனத் தாழ்மையை வெறுத்தோர் மெய்யான தாழ்மை யைத் தரித்த பரம இராசாவின் குடிகளாயிருப்பது எப்படி.

இயேசு இரட்சகர் இந்தப் பிரவேசத்திலும் வேத எழுத்துகளை நிறைவேற்றுகிறவரா யிருக்கிறார் (எசா. 62, 11; சகரி. 9, 9). இயேசுநாதர் இருந் தாலும் நடந்தாலும், எதைப் பேசினாலும் செய்தா லும், பிழைத்தாலும் மரித்தாலும், என்ன பண்ணி னாலும், வேத எழுத்துக்களை நிறைவேற்றவேணும் என்பதே அவர் நோக்கமாயிருந்தது. ஏனெனில், நான் வேத எழுத்துக்களைக் குலைத்துபோட அல்ல, நிறைவேற்ற வந்தேன் என்று அவர் போதித்தவர். மேசியா எருசலேமுக்குள் பிரவேசிப்பதைப் பற்றிய தீர்க்கதரிசன வாக்கியம் இனி நிறைவேறும் என்று எண்ணும் அவிசுவாசிகளே, உங்கள் எண்ணம் நிறை வேறாது. ஏனென்றால் ஆகாய் தீர்க்கதரிசனப்படி சகல சாதிகளும் இச்சிக்கிற மேசியா உட்பிரவேசிக்க வேண்டிய இரண்டாந் தெய்வாலயம் அழிந்துபோ யிருக்கக் கொள்ள, இனி ஒரு மேசியா அதில் பிர வேசிப்பது எப்படி. ஆதலால், ஆத்துமாவே, உனக் கென்று சகல வேத எழுத்துகளையும் நிறைவேற்றின இந்த உன் இரட்சகரை நீ விசுவாசத்தால் பற்றிக்

கொண்டு அவர் திருவசனத்தை உனக்குப் பிரமாண மாக்கிக் கொள்ள நீ அசதியாயிருக்கலாமா.

இயேசுநாதர் மெய்ப்பஷா ஆடாயிருக்கிறுர் என்பதும் இதினுல் தெளிவாம். நீசான் மாதம் 10-ம் தேதியில் பஷா ஆடு பிடிபட்டுக் கர்த்தருக்குப் பரிசுத்தமாக வேண்டியது (2 மோ. 12, 3). இதற்கொத்தபடி இயேசுநாதர் அந்தத் தேதியாகிய ஞாயிற்றுக் கிழமையில் எருசலேமுக்குப் போய், தம்மைப் பிதாவுக்கு உகந்த பலியாக நிறுத்த தெய்வாலயத்திற்குள்ளும் பிரவேசித்தார். இதோ, கர்த்தருக்குப் பரிசுத்தமானதும் லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதுமான பராபரனுடைய ஆட்டுக்குட்டி. நீ அவரை உன் பஷா ஆட்டுக்குட்டியாகத் தெரிந்து கொண்டாயானுல் தாவிளே.

## செபம்.

இயேசுவே, தாவீதின் குமாரனே, தேவரீர் பிசாசின் அடிமையாகிய என்னை மீட்டுக்கொள்ளும்படி உமது திரு இரத்தத்தைச் சிந்த உற்சாகமாய் எருசலேமுக்குள் பிரவேசித்தீரே. உமக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்துவேன். நான் உம்மை என் இராசாவாக உற்சாகமுள்ள மனதோடு தாழ்மையாய் ஏற்றுக்கொண்டு உமக்கு எல்லாத்திலும் என்னைக் கீழ்ப்படுத்த எனக்குத் துணை செய்தருளும். அப்போது உலகமுழுவதும் உம்மை விரோதித்து உமக்கு எதிர்த்து நின்றுலும், நான் உம்மை விட்டு ஒருபோதும் பிரியேன். என் இராசாவும் என் பராபரனுமாகிய கர்த்தாவே, உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் படிப்பியும்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக சுவாமி, ஆமேன்.

என் இதயமே, விழி,
இயேசு தம்மை உனக்காக
தாற அன்பைக் கவனி,
அதையே தியானமாக
பார்; இதோ எக்கேடுந் தீங்கும்
அவர் மீட்பினாலே நீங்கும்.

இயேசுவே, நான் உமக்கே
முழுதும் ஆதீன மாவேன்;
உம்மைப் பற்றி, உம்மையே
நான் பின்செல்லுஞ் சீஷனாவேன்;
உம்மில் என்றும் நிலை நிற்பேன்.
உம்மில் சாவிலுந் தரிப்பேன். (45, 1. 9)

---

## 3. வெள்ளிக் கிழமை.

### சங்கத்தார் துர் ஆலோசனை.

*அவர்கள் ஏகமாய் எனக்கு விரோதமாக ஆலோசனை பண்ணுகிறதினாலே திகில் என்னைச் சூழ்ந்து கொண்டது. என் பிராணனை வாங்க நினைக்கிறார்கள். நானோவெனில் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்; தேவரீர் என் பராபரன் என்கிறேன். சங். 31, 13. 14.*

பஷா என்னப்பட்ட புளிப்பில்லா அப்பங்களின் பண்டிகை சமீபித்தது. அப்போது இயேசு தம்முடைய சீஷருடனே: இரண்டு நாளைக்குப் பிறகு பஷாவாயிருக்கிறதென்று அறிவீர்கள்; அப்போது மனுஷனுடைய குமாரன் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுக்கப்படுகிறார் என்றார். அப்போது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் சனத்தின் மூப்பரும் காயிபா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரண்மனையிலே

கூடிவந்து, இயேசுவைக் கபடமாய்ப் பிடித்து, கொலை செய்கிறதற்கு யோசனை பண்ணினார்கள். ஆகிலும் சனத்தில் கலகம் எழும்பாதபடி, பண்டிகையிலே வேண்டாம் என்றார்கள். மத். 26,4.5; மாற். 14,1.2; லூக். 22, 1. 2.

---

காயிபாவின் அரண்மனையில் சந்தடியாயிருக்கிறதே, அதென்ன. பஷாப் பண்டிகையாகிய பெருநாளை வேதவாசகப் பிரகாரமும், பிரயோசனமாகவும் கொண்டாடும்படிக்கு ஏற்பாடு செய்யப் பிரதான ஆசாரியரும் மற்ற உத்தியோகஸ்தரும் கூடி வந்திருக்கிறார்களோ. அல்லது தங்கள் ஆத்தும ஈடேற்றத்துக்காக வேதவசனத்தை வாசித்து, அதைச்குறித்து எழுப்புதலாகப் பேசிக்கொள்ளக் கூடியிருக்கிறார்களோ. இல்லை, இல்லை.

தீர்க்கதரிசி சொன்னபடி, கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் தலைவர் ஏகமாய் ஆலோசனை பண்ணுகிறார்கள் (சங். 2, 2). தங்களை மீட்கவந்த மேசியாவைக் கபடமாய்ப் பிடிக்கக் கருத்தாய் ஆலோசிக்கிறார்கள். கொலைசெய்து போடுவதற்குக் கூர்மையாய் ஆலோசிக்கிறார்கள். என் ஆத்துமா அவர்கள் இரகசிய ஆலோசனையில் வராதிருப்பதாக; என் மகிமை அவர்கள் கூட்டத்தோடே ஒன்றிப்போகாதிருப்பதாக (1 மோ. 49, 6 ). இவர்கள் கபட்டாலோசனையைக் கர்த்தர் அறிந்து, அது தமது அநாதி ஆலோசனையின் நிறைவேறுதலாகும்படி மாற்றினார். (1மோ. 50, 20).

இஸ்ரவேலின் தலைவர்களே, உங்கள் மாமிசமும் இரத்தமுமாகப் பிறந்து, உங்கள் குருடருக்குப் பார்வையளித்து, செவிடரைக் கேட்கப்பண்ணி, ஊமையரைப் பேசச்செய்து, குஷ்டரோகிகளைச் சுத்த

மாக்கி, மரித்தோரை எழுப்பிக் கொடுத்த உங்கள் உபகாரியைக் குறித்து நீங்கள் செய்யத்தக்க ஆலோசனை இதுதானோ. பிரதான ஆசாரியரே, நீங்கள் பேசவேண்டிய பேச்சென்ன. வேதபாரகரே, நீங்கள் செய்யவேண்டிய சம்பாஷணை என்ன. மூப்பரே, நீங்கள் சொல்லவேண்டிய யோசனை என்ன. நீங்கள் உங்கள் அழைப்பை மறந்து நிற்கிறீர்கள்போலத் தோன்றுகிறது. கிறிஸ்தவனே, நீ எத்தனைவிசை உன் அழைப்புக்கும் ஊழியத்துக்கும் அடாத ஆலோசனைகளைச் செய்திருக்கிறாய். பண்டிகை நாட்களும் திருநாட்களும் வரும்போது, நீ ஆலோசிக்க வேண்டிய ஆத்தும விஷயத்தை மறந்து, அதற்கடுத்திராத வீண்யோசனைகளையும், பாவயோசனைகளையும் நடப்பிக்கிறதில்லையா. நீ இதற்காகக் கர்த்தருக்குக் கணக்குக் கொடுக்கவேண்டியவன் என்பதை யறிந்து, எச்சரிக்கையாயிரு.

காயிபா முதலியவர்கள் சர்வத்துக்கும் வல்ல பராபரனுடைய கோபத்துக்கல்ல, சனங்களின் கலகத்துக்குப் பயப்பட்டார்கள். கர்த்தராகிய இயேசு அனைவருக்கும் நன்மைசெய்த அன்பரென்று அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தது. சர்வ சன உபகாரியைச் சதிகொலை செய்யப்பார்த்த சண்டாளர் பாவத்துக்குக் கணக்குண்டோ.

பண்டிகையிலே வேண்டாம் என்று அவர்கள் தீர்ப்பு செய்தாலும், அவர்கள் தீர்ப்பல்ல, தெய்வ தீர்ப்பே நிறைவேறிற்று. ஏனெனில் பண்டிகையில் தானே இயேசு சுவாமி தமது திரு இரத்தத்தைச் சிந்தி மரித்தார். அப்படியே லோகமக்களே, யோசனையை யோசியுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது. ஏனெனில் எங்களுடனே பராபரன் இருக்கிறார் (எசா. 8, 10).

## செபம்.

அன்புள்ள கர்த்தாவாகிய பராபரனே, நான் ஆகாதவர்களுடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், சரசக்காரர் உட்கார்ந்திருக்கிற இடத்தில் உட்காராமலும், உம்முடைய வேதத்தின்மேல் பிரியமாயிருந்து, உம்முடைய வேதத்தில் இரவும் பகலும் தியானிப்பாயிருக்கும் பாக்கியத்தை எனக்குத் தந்தருளும். கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கப்பண்ணும். என் நாவைப் பொல்லாப்புக்கும் என் உதட்டைக் கபட்டு வசனிப்புக்கும் விலக்கமாய்க் காத்தருளும் சுவாமி, ஆமேன்.

பாதகரின் தீவினைக்கும்
பாவிகளின் பாதைக்கும்
துர்ச்சனரின் தோழமைக்கும்
மார்க்கத்துக்கும் மிகவும்
தூரமாகி, கர்த்தரை
தேடி, தன் இதயத்தை
அவருக்கொப்புக் கொடுத்தோன்
என்றும் பாக்கியம் பெருத்தோன். (111, 1.)

## 4. சனிக் கிழமை.

### யூதாவின் துரோக ஒப்பந்தம்.

உங்கள் பார்வைக்கு நன்ருய்க் கண்டால் நம்முடைய கூலியைத் தாருங்கள். இல்லாவிட்டால், இருக்கட்டும் என்று அவர்களோடே சொன்ஞேம். அப்போது நம்முடைய கூலியாக முப்பது வெள்ளிக் காசை நிறுத்தார்கள். இது நாம் அவர்களால் மதிக்கப்பட்ட மேன்மையான மதிப்பு. சகரி. 11, 12. 13.

சாத்தாஞே பன்னிருவர்தொகைக்குள்ளான இஸ்காரியோத்து என்று மறுபேர் கொண்ட யூதாவுக்குள் புகுந்தது. அவன் பிரதான ஆசாரியர்களண்டைக்குப் போய்: எனக்கு என்ன தர மனதாயிருக்கிறீர்கள். நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேன் என்ருன். அவர்கள் முப்பது வெள்ளிக்காசை அவனுக்கு நிர்ணயம் பண்ணிஞர்கள். அதுமுதல் அவரைக் காட்டிக் கொடுப்பதற்குச் சமயந் தேடிஞன். மத். 26, 14-16; மாற். 14, 10. 11; லூக். 22, 3-6.

---

யூதாவே, இயேசுநாதர் உன்னைத் தமது சீஷனும் அப்போஸ்தலனுமாகத் தெரிந்து கொண்டு, உனக்குக் காண்பித்த அன்புக்கும் உனக்குச் செய்த நன்மைகளுக்கும் இது தாஞே கூலி. அநித்திய லோகப்பொருளை நாடி., நித்திய பரம பொக்கிஷத்தை விற்றுப்போடத் துணிந்தாயோ, பாவி. ஐயோ, உன் நிலைமை பரிதாபமே.

யூதாவைப்பற்றி வாசிக்கும் ஆத்துமாவே, சகல பாவங்களுக்கும் கேட்டுக்கும் காரணனும் தகப்பனும் ஆர் என்று உனக்குத் தெரியுமா. சபிக்கப்பட்ட பிசாசுதானே. அந்தக் கொலைபாதகனுக்கு எச்சரிக்கையாயிரு. கர்த்தருடைய சிறு மந்தையாகிய

பன்னிருவரில் ஒருவனைக் கெடுத்தவன் உனக்குத் தூரமாயிருக்கிறான் என்று எண்ணாதே.

பொருளாசை எல்லாத்தீமைக்கும் வேர் என்று திருவாக்கு உரைத்தது பொய்யாமோ. இந்தப் பாவமல்லவோ யூதாவை முந்தத் திருட்டுக்கும், பிறகு தூஷணைக்கும், பிற்பாடு குருத்துரோகத்துக்கும், கடைசியாய்த் தற்கொலைக்கும் நடத்திற்று. ஆத்துமாவே, விக்கிரகாராதனைக் காரணாகிய பொருளாசைக்காரன் ஒருவனுக்கும் பராபரனுடைய இராச்சியமாகிய கிறிஸ்துவின் இராச்சியத்திலே சுதந்தரம் இல்லை என்று அறிந்து, இந்தக் கொடிய பாவத்துக்கு உன்னை விலக்கிக் காக்கப் பரிசுத்த ஆவியின் ஒத்தாசையைத் தேடு.

மூவுலகமும் ஈடாகாத முதல்வராகிய என் இரட்சகர் முப்பது வெள்ளிக்காசு தானோ பெறுவார். துரோகியாகிய யூதா இஸ்காரியோத்தே, மரியாள் அபிஷேகித்த தைலத்தை முந்நூறு பணமாக விலைமதித்த உனக்கு அவ்வபிஷேகம் பெற்ற மகிமையின் கர்த்தர் முப்பது வெள்ளிக்காசு தான் பெறுவார் என்று காணப்பட்டது என்ன. ஆ, சாத்தான் உன் கண்களையும் புத்தியையும் பொருளாசையால் குருடாக்கிற்று அல்லவோ. இஸ்ரவேலின் தலைவர்களே, உங்களைத் தமது சொந்த சனமாக்கி ஆதரித்தவரை நீங்கள் மதித்த மதிப்பு இதுதானோ. நீங்கள் உங்களுக்கே தெரியாமல் (சகரி. 11, 12. 13-ல் உள்ள) தீர்க்கதரிசன வாக்கியத்தை நிறைவேற்றுகிறீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

என் அருமை இரட்சகரே, இந்த ஏழை அடிமையை விடுதலைசெய்து உயர் விலையாக்குவதற்கோ நீர் அடிமையைப்போல விலையானீர் (2 மோ. 21, 32). நான் உம்மையே என் பொன்னும் செல்வமும்

கதியும் பொக்கிஷமும் பேறுமாகத் தெரிந்துகொள்ளுவேன்.

யூதா, தான் யூதரோடு செய்த துரோக ஒப்பந்தத்தை நிறைவேற்றப் பிரயாசப்பட்டு அதற்குச் சமயந் தேடினான். ஆத்துமாவே, நீ அதற்கு மாறாகப் பராபரனோடு செய்த நல் உடன்படிக்கையை எல்லாச் சமயங்களிலும் இடங்களிலும் நிறைவேற்றப் பார்.

## செபம்.

விலைமதிக்கக் கூடாத பொக்கிஷமாகிய இயேசுசுவாமி, எல்லாத் தீமைக்கும் வேராகிய பொருளாசைக்கு என்னை விலக்கமாய்க் காத்தருளும். நான் உலக மக்களைப்போல் பொன்னை நாடி உமக்குத் துரோகியாகாதபடி நான் உயர்விலையாய்க் கொள்ளப்பட்டதை எப்போதும் நினைக்கவும், உமது உண்மையுள்ள சீஷனாயிருக்கவும் தேவரீர் தாமே எனக்குத் துணை செய்தருளும். நன்றிகேடும் துரோக சிந்தையும் உமக்கு அருவருப்பான பாவங்கள் என்பதை நான் அறிந்து, அவைகளை முழுப்பகையாய்ப் பகைக்க எனக்குத் துணைபுரியும். தேவரீர் எனக்காக விற்கப்பட்டீர் என்பதை நான் எப்போதும் தியானித்து, என்னை உலகத்துக்குவிற்காமல் உமக்கே என்னை முற்றிலும் ஒப்படைக்கக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

பரமண்டலத்திலுள்ள
மகிமையின் ரம்மியம்,
இயேசு என்கிற அன்புள்ள
ரட்சகரின் பொக்கிஷம்.
பரலோக நன்மைகள்
என்னுடைய ஆறுதல்.

வேறேபேர் மண்ணுஸ்தியாலே
தங்களைத் தேற்றட்டுமேன்;
நான் என் நெஞ்சை இயேசுவாலே
தேற்றி விண்ணை நோக்குவேன்.
மண் அழியும், இயேசுவோ
என்றும் நிற்கிறாரல்லோ.

எனக்கவரில் மிகுந்த
ஆஸ்தி அகப்பட்டது,
விக்கினங்களால் சூழுண்ட
லோக ஆஸ்தி எதுக்கு,
இயேசுதான் என் ஆத்துமம்
தேடிய நற்பொக்கிஷம். (ப. ஞா.238, 1-3.)

---

## ஒருசந்தியின் முதல் ஞாயிறு.

நிரு. 2 கொரி. 6, 1-10. சுவி. மத். 4, 1-11.

---

## 5. திங்கள் கிழமை.

### பஷா விருந்து.

நம்முடைய பஷா நமக்காக அடிக்கப்பட்டதே. அது கிறிஸ்து தானே. 1 கொரி. 5, 7.

பஷாவைப் பலியிடவேண்டிய புளிப்பில்லா அப்பங்களின் நாள் வந்தது. அப்போது சீஷர்கள் இயேசுவண்டை வந்து, அவருடனே: பஷாவைப் புசிப்பதற்கு உமக்கு நாங்கள் எங்கே ஆயத்தம் பண்ணச் சித்தமாயிருக்கிறீர் என்றார்கள். அப்போது அவர் தம்முடைய சீஷரில் இருவராகிய பேதுருவையும் யோவானையும் அனுப்பி, அவர்களுக்குச் சொன்னதாவது: பட்டணத்தில் போங்கள். அங்கே தண்ணீர்க் குடஞ் சுமந்துபோகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான். அவனைப் பின்செல்லுங்கள். அவன் எங்கே உட்பிரவேசிக்கிறானோ, அந்த வீட்டுக்கு எசமானுடனே: நான் என் சீஷருடனே பஷாவைப் புசிக்கத் தங்குமிடம் எங்கே என்கிறதைப்

போதகர் கேட்கிருர் என்று சொல்லுங்கள். அவன் கம்பளம் விரித்த ஆயத்தமான பெரிய மேல் வீட்டை உங்களுக்குக் காண்பிப்பான், அங்கே நமக்கு ஆயத்தம் பண்ணுங்கள் என்ருர். அப்போது அவருடைய சீஷர் புறப்பட்டுப் பட்டணத்தில் வந்து, அவர் தங்களுக்குச் சொன்னபடியே கண்டுபிடித்துப் பஷாவை ஆயத்தம் பண்ணினுர்கள். சாயங்காலமானபோது அவரும் அவருடனே கூடப் பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியமர்ந்தார்கள். அப்போது அவர் இவர்களுடனே: நான் பாடுபடுகிறதற்கு முன்னே இந்தப் பஷாவை உங்களுடனே புசிக்க மிகவும் வாஞ்சைப் பட்டேன். ஏனென்ருல் அது பராபரனுடைய இராச்சியத்திலே நிறைவேறுமட்டாக இனி அதிலே புசியேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்ருர். மத். 26, 17-29; மாற். 14, 12-25; லூக். 22, 9-18.

---

நமது இரட்சகர் எத்தனே உண்மையுள்ள இஸ்ரவேலனுக விளங்குகிருர். அவர் இஸ்ரவேலர் எல்லாரும் செய்ய வேண்டியதுபோல தாமும் நியாயப் பிரமாணங் கற்பித்தபடியே பஷாப் பண்டிகையை ஆசரிக்கிருர். அவர் நியாயப் பிரமாணத்தைக் குலேத்துப்போட அல்ல, அதை நிறைவேற்ற வந்தவராகையால், பண்டிகை யாசரிப்பிலும் அவர் தவறுகிறதில்லே.

ஆத்துமாவே, அவர் எல்லாவற்றையும் அறிந்து எல்லாரையும் ஆண்டு நடத்தும் ஆண்டவர் என்கிறதை இச்சமயத்திலும் வெளிப்படுத்துகிறதைக் கவனி. அவர் உனக்குக் காண்பிக்கிற வழிகளில் நீ நடந்து, அவர் சித்தப்படியே செய்வாயானுல், அவர் உனக்குச் சொல்லியவைகள் மெய்யாகவே உன்னில் நிறைவேறுகிறதை உன் சுய கண்களால் கண்டு களிகூருவாய்.

போதகர் கேட்கிறார் என்ற உடனே, அந்த வீட்டுக்காரன் ஆயத்தமான மேல்வீட்டைக் கர்த்தருக்கும் அவருடைய சீஷருக்கும் ஒப்புக்கொடுத்தானே. இந்தச் சற்குணனைப்போலவும், இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்ற உடனே (லூக். 18, 5) அதற்குச் சந்தோஷத்தோடு சம்மதித்த சகேயுவைப் போலவும், சபையனைத்துக்கும் வீட்டில் இடங்கொடுத்த காயுவைப் போலவும், (ரோ. 16, 23), நீ உன் வீட்டைக் கர்த்தருக்கு மகிமையாகவும் அவர் பிள்ளைகளுக்குப் பிரயோசனமாகவும் ஒப்புக் கொடுக்கிறாயா. எல்லாவற்றிலும் முக்கியமாய் உன் இருதயத்தைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடு (வாக். 23, 26).

சாயங்காலமானபோது கர்த்தர் தமது பன்னிரண்டு சீஷருடனே கூடப் பந்தியமர்ந்து, மிகுந்த வாஞ்சையோடே கடைசிப் பஷாவைப் புசிக்கலானார். மறுநாளில் அவர் மரிக்கப்போகிறதின் நிமித்த மாத்திரமல்ல, அவரே மெய்ப் பஷாவாக வெளிப்பட்டு அதைப் பராபரனுடைய இராச்சியத்தில் நிறைவேற்றப் போகிறபடியாலும் பெரிய வியாழன் அன்று ஆசரித்த பஷாவே கடைசிப்பஷா ஆயிற்று. அத்தோடு யூதருடைய பஷா ஒழிந்தது.

நம்முடைய பஷா நமக்காக அடிக்கப்பட்டதே; அது கிறிஸ்துதானே. ஏனெனில் முதற்பஷா ஆட்டின் இரத்தத்தைக் கண்டவுடனே சங்காரன் கடந்துபோனதுபோல் கிறிஸ்துவின் இரத்தத்தைக் காணும்போது சங்காரன் விலகிப்போவான். முதற்பஷா பார்வோனின் அடிமைத் தனத்துக்கு இஸ்ரவேலர் நீங்கலானதை நினைப்பூட்டுவது போல், மெய்ப்பஷா நாம் நரக பார்வோனைவிட்டு விடுதலை பெற்றதை நினைப்பூட்டுகிறதல்லவோ. நமது இரட்சகர் (ஒரு வய

துள்ளதும் பழுதற்றதுமான பஷா ஆட்டைப் போல்) புருஷ பிராயமுள்ள மாசற்ற பரிசுத்தவஸ்து வல்லவோ. அவர் அன்பின் தீயால் உயர மரத்தில் சுடப்பட்டாரே.

பஷா கொண்டாட்டத்தில் புளித்தமாவை எல்லாம் புறம்பாக்குவதுபோல் நாமும் துர்க்குணமும் பொல்லாப்பும் என்ற புளித்தமாவை விலக்கி, துப்புரவும் உண்மையும் என்ற புளிப்பில்லா அப்பங்களோடும் (1 கொரி. 5, 8) மெய் மனஸ்தாபம் என்ற கசப்பான கீரைகளோடும் பண்டிகையை ஆசரிப்போமாக.

## செபம்.

அன்புள்ள இயேசு சுவாமி, தேவரீர் எனக்காக அடிக்கப்பட்ட மாசற்ற பஷா ஆட்டுக்குட்டி என்பதற்காக உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். உம்மால் நான் நரக பார்வோனின் அடிமைத் தனத்துக்கும் பாவச்சிறை யிருப்புக்கும் நீங்கலானேன். சங்கரிப்பின் தூதன் என்னைத் தொடாதபடிக்கு உமது திரு இரத்தம் என்னை எக்காலத்திலும் காப்பாற்றுவதாக. உமது கிருபையால் மெய் இஸ்ரவேலனுக்கப்பட்ட நான் வருஷந்தோறும் மாத்திரமல்ல, தினந்தோறும் மெய்ப்பஷாவாகிய உம்மை ஞானப்பிரகாரமாய் உட்கொள்ள என்னை உமது உடன்படிக்கையின் வசனத்தில் காப்பாற்றியருளும். நான் தேவரீரோடும் சகல பரிசுத்தவான்களோடும் நித்திய மோட்ச விருந்தில் எப்போது புசிப்பேன்என்று வாஞ்சையாய்க் காத்திருக்கிறேன். என் வாஞ்சையை நிறைவேற்றியருளும் சுவாமி, ஆமேன்.

தேவாட்டுக் குட்டியாகிய
மெய்ப்பஷா கிறிஸ்துவாமே;

தெய்வன்பின் தீயால் உயர
மரத்தில் சுட்டதாமே;
அதின் ரத்தம் முத்திரை
அடைந்த விசுவாசியை
சங்காரன் தொடமாட்டான். அல்லேலூயா.

புதிய மா வாகாரமாய்
பஷாவை ஆசரிப்போம்;
அருளின் வார்த்தைக் காசையாய்
புளித்ததைக் கழிப்போம்.
கிறிஸ்து தாமே போசனம்.
வேறெதினாலும் ஆத்துமம்
பிழைக்கவே மாட்டாது. அல்லேலூயா. (67,5.7.)

---

## 6. செவ்வாய்க் கிழமை.

### சீஷரின் கால் கழுவுதல்.

அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து அவர்கள் கர்த்தருடையவர்களாய் இருக்கும்படிக்கும் நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும் அவர்களைப் பொன்னைப்போலேயும். வெள்ளியைப் போலேயும் உருக்குவார். மல். 3, 3.

இராப்போசனம் பண்ணிக் கொண்டிருக்கையில், பிசாசு அப்போதே சீமோன் குமாரனாகிய யூதா இஸ்காரியோத்தின் இருதயத்திலே அவரைக் காட்டிக் கொடுக்க வேண்டும் என்கிறதைப் போட்டிருக்கக்கொள்ள, இயேசு பிதாஎல்லாவற்றையும் தம்முடைய கைகளில் அளித்தார் என்கிறதையும், தாம் பராபரனிடத்திலிருந்து வந்ததையும், பராபரனண்டைக்குப் போகிறதையும் அறிந்திருந்து, இராப்போசனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி வைத்து, ஒரு சீலையை எடுத்துச் சுற்றிக் கட்டிக் கொண்டார். பிற்பாடு கழுவுகிற பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும் தாம் கட்டிக் கொண்டிருந்த சீலையினால் துடைக்கவுந்

தொடங்கினர். அப்போது சீமோன்பேதுருவண்டை வந்தார். அவன் அவருடனே: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவுகிறீரோ என்றான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: நான் செய்கிறது இன்னதென்று நீ இப்போது அறியாய்; இனிமேலோ அறிவாய் என்றார். பேதுரு அவருடனே: நீர் என்றைக்கும் என் கால்களைக் கழுவவேண்டாம் என்றான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: உன்னை நான் கழுவாதே போனால், என்னுடனே உனக்குப் பங்கில்லை என்றார். சீமோன்பேதுரு அவருடனே: ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, கைகளையும் தலையையுங் கூட என்றான். இயேசு அவனுடனே: முழுகினவனுக்குக் கால்களை மாத்திரம் கழுவத் தேவையாம்; நீங்கள் சுத்தமா யிருக்கிறீர்கள்,எல்லாருமோ அல்ல என்றார். ஏனெனில் தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அறிந்திருந்தார். அதனால் நீங்கள் எல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார். அவர்களுடைய கால்களைக் கழுவின பிற்பாடு, அவர் தம்முடைய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து அவர்களுக்குச் சொன்னதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களோ. நீங்கள் என்னைப் போதகர் என்றும், ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள், நிதானமுமாய்ச் சொல்லுகிறீர்கள்; ஏனெனில் நான் அவர் தான். இப்போதும் ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருக்கொருவர் கால்களைக் கழுவக் கடவீர்கள். ஏனெனில் நான் உங்களுக்குச் செய்ததுபோல் நீங்களுஞ் செய்வதற்கு உங்களுக்கு மாதிரியைக் கொடுத்தேன். மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எசமானிலும் பெரியவன் அல்ல, அப்போஸ்தலன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனுமல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கக்கொள்ள இவைகளைச் செய்தீர்களானால் பாக்கியவான்களா யிருக்கிறீர்கள் என்றார். யோவா. 13, 1-5.

---

ஓகோ, இதென்ன காட்சி. வானத்தை விரித்த கை, அண்ட சராசரங்களைத் தாங்கும் கை, வியாதிகளையும் நோக்காடுகளையும் பறக்கடிக்கும் கை, கடல் கொந்தளிப்பை அமர்த்தும் கை, பிதாவினால் யாவும் அளிக்கப்பெற்ற கை, பாவிகளாகிய சீஷரின் அசுத்த கால்களைக் கழுவுகிறது. மனுஷனுடைய குமாரன் ஊழியஞ் செய்வித்துக்கொள்ள வராமல் ஊழியஞ் செய்ய வந்தார் என்று (மத். 20, 28) என் ஆண்டவர் சொல்லியதை நிறைவேற்ற மனங் கொண்டாரோ.

ஆத்துமாவே, இந்தக் காட்சியைக் கண்ட உன்னிடத்தில், நான் என்கிற எண்ணமும் மேட்டிமைக் குணமும் பெரியவனாக வேண்டும் என்கிற பேராசையும் காணலாமோ. உன் கர்த்தருக்கு முன்பாகவும் மற்றவர்களுக்கு மேலாகவும் உன்னை உயர்த்தவும், மேன்மை பாராட்டவும் உனக்கு என்ன நியாயம் இருக்கிறது. உன் அகந்தைக்குக் காரணமாகும் அறிவு ஆஸ்தி அழகு முதலிய யாவும் கர்த்தரால் உனக்கு அருளப்பட்ட அநித்திய நன்மைகள் அல்லவோ. உன் ஆண்டவரும் போதகருமானவர் போதிக்கும் தாழ்மையின் பாடத்தை மறவாதே. பராபரன் அகந்தையுள்ளவர்களோடே எதிர்த்து நின்று தாழ்மையானவர்களுக்கோ கிருபையளிக்கிறார் (1 பேது. 5, 5) என்ற வாக்கு பொய்யல்லவே.

உன் இரட்சகர் உன்னைக் கழுவாதே போனால் அவரோடு உனக்குப் பங்கில்லை. பரிசுத்தமாகுதல் இல்லாமல் ஒருவனும் பராபரனைத் தரிசிப்பதில்லை. ஆகையால், அவர் கழுவுதலுக்கு உன்னைத் தினந்தோறும் ஒப்புக்கொடு. பரிசுத்த ஞானஸ்நானத்தால் கழுவப்பட்ட கிறிஸ்தவனே, நீ தினந்தோறுஞ் செய்யும் பாவங்கள் கொஞ்சமா. அவைகளை நீயே கழுவிக்

கொள்ள உன்னால் தானே முடியாதென்று உனக்கு நன்றாய்த் தெரியுமே. உன் இரட்சகர் உன்னைக் கழுவுவதற்கான நற்சமயமாகிய இப்போது நீ தாமதிக்காமலும் தடைசெய்யாமலும் அவருக்கு இடங் கொடு. கிருபையின் எத்தனங்களைக் கவலையோடு கையாடு.

பரிசுத்தராகிய கர்த்தர் பாவியாகிய உன்னுடைய சகல அசுத்தங்களையுங் கழுவி, உன் பாவங்களைக் கிருபையாய் மன்னிக்கிறாரே. நீ உன் சகோதரனுடைய தப்பிதங்களை மன்னிக்க முன்பின் யோசிப்பது நியாயமா. பரம இராசா பதினாயிரந் தாலந்தாகிய உன் கடனை மன்னிக்கக்கொள்ள நூறு வெள்ளிக்காசாகிய உன் சகோதரனின் கடனை நீ மன்னிப்பது பெரிய காரியமா (மத். 18, 21-35).

7. இப்படி நீ ஞானப்பிரகாரமாக உன் சகோதரனின் கால்களைக் கழுவுகிறதுமன்றி, புறம்பான வண்ணமும் அதைச் செய்ய ஆயத்தமாயிரு. பரதேசிகளாய் வருவோரின் கால்களைக் கழுவி, அவர்களுக்குப் பணிவிடை செய்யவும், விருத்தாப்பியத்தினாலும் வியாதியினாலும் வருந்தும் உன் சகோதரருக்கு ஊழியஞ் செய்யவும் என் நேசரின் உள்ளன்பு உன்னை ஏவுவதாக.

## செபம்.

நேசமுள்ள கர்த்தராகிய இயேசுவே, தேவரீர் பராபரனுடைய ரூபாயிருந்தும் உம்மையே வெறுமையாக்கி, ஊழியக்காரன் ரூபெடுத்து, நீசப்பாவிகளுக்குப் பணிவிடை செய்யலானீரே. ஆ, உமது தாழ்மை என் மனதினால் கிரகிக்கக்கூடாததும், வாக்கினால் சொல்லி முடியாததுமாயிருக்கிறது. மேட்டிமையும் பெருமையும் நிறைந்த என் இருதயத்தைத் தேவரீர் தாமே மெய்த்தாழ்மையினால் நிரப்பி, என்னை

உமக்குச் சாயலாக்கியருளும். நான் சுத்தமாவதற்கு நீர் ஈசோப்பால் என்னைப் பாவமறப் பண்ணி, நான் உறைந்த மழையிலும் வெண்மையாவதற்கு என்னைக் கழுவுவீராக. கர்த்தாவே, என்னை உமது சத்தியத்திலே பரிசுத்தமாக்கியருளும், உமது வசனமே சத்தியம். தேவரீர் என்னைச் சிநேகிக்கிறதுபோல நான் என் சகோதரரையும் நேசித்து, அவர்கள் குறைவுகளைப் பொறுத்துக் கொண்டு, அவர்கள் குற்றங்களை மன்னித்து, அவர்களுக்கு அன்புபாராட்ட என்னை மெய்ச்சிநேகத்தினால் நிரப்பியருளும்சுவாமி, ஆமேன்.

சுயமேன்மையைத் தேடாமல்
ஓர் மேட்டிமையையும் காட்டாமல்,
மா தாழ்மையானீர், இயேசுவே.
வேலைக்காரன்போல் திரிந்தீர்;
எல்லாரிலும் நீரே பணிந்தீர்;
மகா பெரிய கர்த்தரே,
ஆ, என்னை உம்முட
அடிகளில் வர, படிப்பியும்,
என் இயேசுவே, நான் உமக்கே
ஒப்பாகத் தாழ்மையாகவும். (193, 6.)

---

## 7. புதன் கிழமை.

### பரிசுத்த இராப்போசனம்.

தம்முடைய அதிசயங்களின் நினைவுகூருதலை உண்டுபண்ணினார். கர்த்தர் இரக்கமும் மன உருக்கமுமானவர். தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரங் கொடுத்தார். தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைக்கிறார். சங். 111,4. 5.

அவர்கள் அசனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்துக்கொண்டு ஆசீர்வதித்து, அதைப் பிட்டுச்

சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. இதை என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்றார். அந்தப்படியே இராப்போசனம் பண்ணினபிற்பாடு அவர் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்துச் சொன்னதாவது: இதிலே எல்லாருங் குடியுங்கள், ஏனென்றால் இது பாவ மன்னிப்புக்கென்று அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கையினுடைய என் இரத்தமாயிருக்கிறது. இதை நீங்கள் குடிக்கிறபோதெல்லாம் என்னை நினைக்கிறதற்காகச் செய்யுங்கள் என்றார். மத். 26, 26-28; மாற். 14, 22-24; லூக். 22, 19. 20.

---

சத்துருக்கள் என் அருமை மீட்பருக்கு விரோதமாகச் சதியோசனை செய்து அவரைக் கொலை புரிவதற்கான வழிவகைகளைப் பிணைத்து ஏற்பாடு பண்ணுகிறார்கள். அவரோ, இச்சமயத்தில், மனித ஆத்துமாக்களுக்காகக் கவலைப்படுகிறவராய் அவர்களுக்குத் திருப்போசன ஏற்பாடு செய்கிறார். தமது மந்தையை விட்டுப் பிரியப்போகிறார் என்று எண்ணத்தக்க வேளையில், அவர் பிரியாமல் தமது மந்தையோடு இருக்கிறார் என்று நம்புவதற்கான ஏற்பாட்டைச் செய்கிறார். ஆ, கிறிஸ்துவின் சிநேகத்தை விட்டு என்னைப் பிரிப்பவன் ஆர் (ரோம. 8, 35). கர்த்தர் என் ஆத்துமத்துக்குப் போசனமாகத் தமது சொந்த சரீரத்தையும், பானமாகத் தமது சொந்த இரத்தத்தையும் கொடுக்கச் சித்தமானது எத்தனை பெரிய நேசம். நான் ஆவியில் பரமண்டலத்துக்கு ஏறி, அங்கே அவரை ஞானப்பிரகாரமாய் அருந்த அசக்தன் என்று கண்டதினால், அவர்தாமே தமது சகல ஆசீர்வாதங்களோடும் என்னண்டைக்கு இறங்கி வந்து, காணப்படும் பதார்த்தங்களாகிய அப்பத்துக்

குள் தமது திருச்சரீரத்தையும் இரசத்துக்குள் தமது திரு இரத்தத்தையும் நான் மெய்யாகவே புசித்துக் குடிக்க இடம் பண்ணினரே. இதில் அவர் ஒப்பற்ற அன்புக்காக ஆச்சரியப்படுவேனே, அற்புத வல்லமைக்காக அதிசயிப்பேனே, அறியேன்.

இது என் சரீரம், இது என் இரத்தம் என்று மொழிந்தருளிய சத்திய வாசகரின் திருமொழியைக் குறித்து அடியேன் சற்றாகிலும் சந்தேகப்பட நியாயமுண்டோ. நான் நம்பினாலும் நம்பாவிட்டாலும், அவரைப்போல் அவர் மொழியும் மாறாமல் நிலைநிற்கிறதல்லவோ. ஆத்துமாவே, நீ இதைக் குறித்துச் சந்தேகப்படுவதினால் சத்தியவாசகரின் கோபத்துக்குப் பங்காளியாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

குறிப்பும் நிழலுமான பழைய உடன்படிக்கையின் காலம் ஒழிந்தது. மெய்யான பொருளை எனக்குக் கொடுக்கும் புது உடன்படிக்கையின் காலம் வந்துவிட்டது. ஆரோன் முதலிய பிரதான ஆசாரியர் யாவருக்கும் மேலான பரிசுத்தரும், அவர்களால் முன்குறிக்கப்பட்ட உத்தம பிரதான ஆசாரியருமாகிய இயேசுவே, நீர் சர்வலோகத்தின் பாவத்தையும், விசேஷமாய் என் பாவத்தையுஞ் சுமந்து தீர்க்கிற தெய்வ ஆட்டுக்குட்டியாக உம்மையே பிதாவுக்குப் பலியிட்டு, ஒரேவிசை பரிசுத்த ஸ்தலத்தில் நித்திய மீட்குதலை உண்டுபண்ணி உட்பிரவேசித்து (எபி. 9, 12), எனக்காக ஈடுசெலுத்தின திரவியங்களாகிய உமது திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் நான் வாங்கிப் புசித்துக் குடிப்பதால் பாவமன்னிப்பைப் பெறக் கிருபை செய்கிற உமக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்துவேன்.

சீவனுள்ளோருக்குக் கர்த்தர் கொடுத்ததாகிய இந்தத் திருப்போசனத்தை நான் மரித்தோருக்

கென்று கையாடச் சம்மதியேன். நான் அடிக்கடி கர்த்தருடைய பந்தியில் புசித்துக் குடிப்பதால் அவருடைய திருப்பாடுகளை நினைத்து, அவருடைய சொல்லிமுடியாத கிருபையைத் துதித்து, அவருடைய மரணத்தை அவர் வருமட்டும் அறிவிப்பேன். (1 கொரி. 11, 26).

கிறிஸ்தவனே, நீ ஒருபோதும் உனக்குத்தானே நியாயத் தீர்ப்பைப் புசித்துக் குடிக்காதபடிக்கு (1 கொரி. 11, 28) நீ கர்த்தருடைய பந்திக்குச் சேரும்போதெல்லாம் நீ உன்னைத்தானே சோதித்து, உன் பாவத்துக்காகப் படுகிற மெய்மனஸ்தாபத்தோடும், உன் கர்த்தருடைய வார்த்தையை உறுதியாய் நம்பிப் பற்றிக்கொள்ளும் மெய் விசுவாசத்தோடும், ஆத்தும பசிதாகத்தோடும் அந்த ஞான திரவியத்தை உட்கொள்ளக் கருத்துள்ளவனாயிரு.

## செபம்.

அன்புள்ள இயேசுநாதரே, தேவரீர் பரிசுத்த இராப்போசனத்தை ஏற்படுத்தினதற்காக உம்மைச் சரியாய் ஸ்தோத்திரிக்கத் தக்கவன் ஆர். தேவரீர் சிலுவையில் பலியிட்ட உம்முடைய திருச் சரீரத்தையும் திரு இரத்தத்தையும் எனக்குத் தின்கவுங் குடிக்கவுங் கொடுத்து, எனக்குப் பாவமன்னிப்பின் நிச்சயத்தை அருளச் சித்தமாயிருக்கிற உமது மட்டில்லாத சிநேகத்துக்காக உமக்கு அநேகந் தோத்திரம். ஆ, இயேசு சுவாமி, நான் உமது திரு இராப்போசனத்தை வாங்கத் தினந்தோறும் ஆயத்தமுள்ளவனாயிருக்கும்படி தேவரீர் எனக்கு உமது பரிசுத்த ஆவியைக்கொண்டு ஒத்தாசை செய்தருளும். நான் உமது பந்திக்குச் சேரும்போதெல்லாம், நான் என்னைச் சரியாய்ச் சோதித்து என் பாவக்குற்றத்தை உணர்ந்

தறியவும், தேவரீர் வாக்குத்தத்தம் பண்ணுகிற பாவ மன்னிப்பைத் திட விசுவாசமாய் ஏற்றுக்கொள்ள வும் எனக்குக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

ஆ, இப்போசனத்தின்மேலே
வாஞ்சை உண்டிம்மானுவேலே,
நீர் சஞ்சீவியாய்க் கொடுக்கும்
ஊணின்மேல் பசியிருக்கும்;
இந்தச் சீவ பானத்தாலே
தாகந்தீர்க்க ஆசையாலே
ஏங்கிறேன், அத்தால் நன்றாக
நான் உம்மோடே ஐக்யமாக. (117, 4.)

---

## 8. வியாழக் கிழமை.

### துரோகிக் குறிப்பு.

என்னோடே சமாதானமா யிருந்தவனும், நான் நம்பினவனும், என்னுடைய அப்பத்தைப் புசித்தவனுமாகிய மனுஷன் என்மேலே தன் குதிகாலை மிகுதியும் எடுத்தான். சங். 41, 9.

இயேசு இவைகளை வசனித்த பிறகு ஆவியிலே கலங்கி: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என்று சாட்சியிட்டுச் சொன்னார். அப்போது சீஷர், ஆரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று ஐயப்பட்டு ஒருவரையொருவர் பார்த்தார்கள். அவர்கள் மிகவுந் துக்கப்பட்டு, அவருடனே ஒவ்வொருவராக: ஆண்டவரே, நானோ என்று சொல்லத் துவக்கினார்கள். ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக: என்னோடே கூடத் தாலத்தில் கை தோய்க்கிறவனே என்னைக் காட்டிக்கொடுப்பான் என்றார். ஆனால் அவருடைய சீஷரில் இயேசு சிநேகித்த ஒருவன் இயேசுவின் மடியருகே பந்தியிருந்தான். இவனுக்குச் சீமோன் பேதுரு, அவர் ஆரைக்குறித்துச் சொல்லுகிறார் என்று

விசாரிக்கச் சைகை காட்டினன். அப்போது இவன் இயேசுவின் மார்பிலே சார்ந்துகொண்டு அவருடனே: ஆண்டவரே, அவன் ஆர் என்றான். இயேசு மறுவுத்தரமாக: நான் துணிக்கையைத் தோய்த்து, ஆருக்குக் கொடுப்பேனே அவன்தான் என்று சொல்லித் துணிக்கையைத் தோய்த்து, சீமோன் குமாரனுகிய யூதா இஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அவர் சொன்னதாவது: மனுஷனுடைய குமாரனேவெனில் தம்மைக் குறித்து எழுதியிருக்கிறபடி போகிறார். ஆனுல் மனுஷனுடைய குமாரன் எவனுல் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கையோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானுல், அவனுக்கு நலமாயிருக்கும் என்றார். அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதா பிரத்தியுத்தாரமாக: ரபீ, நானே என்றான். அவனுடனே: நீ சொன்னபடி என்றார். துணிக்கையை அவன் வாங்கினபின்பு சாத்தான் அவனுக்கு உட்பட்டது. அப்போது இயேசு அவனுடனே: நீ செய்கிறதைச் சீக்கிரமாய்ச் செய் என்றார். மத். 26, 21-25; மாற். 14, 18-21; லூக். 22, 22.23, யோவா. 13, 23-29.

---

பதினெரு சீஷர் இயேசுவைப் பார்த்து: உம்மைக் காட்டிக்கொடுக்கிறவன் நானே, நானே என்று கேட்டது அவர்களுடைய கபடற்ற நல் இருதயத்தை வெளிப்படுத்திற்று. ஏனெனில் அவர்களில் ஒருவனுக்கும் இரட்சகரைக் காட்டிக் கொடுக்கவேணும் என்கிற எண்ணம் இல்லாதிருந்தும், அவர்கள் தங்கள் சுய இருதயத்தை நம்பாமல், கர்த்தருடைய விசாரணைக்கு அதை ஒப்புக் கொடுக்கிறார்கள். இப்படியே தாவீது இராசாவும்: பராபரனே, என்னை ஆராய்ந்து என் இருதயத்தை அறிந்து கொள்ளும். நீர் என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொண்டு, என்னில் வேதனை உண்டாக்கும் வழி உண்டோ என்று பார்த்து, என்னை நித்தியவழியிலே

நடத்தும் என்று செபம் பண்ணினூர் (சங். 139, 23. 24). நீயும் அப்படியே செய், ஆத்துமாவே.

ரபீ, நானே என்று யூதா கேட்டது வெகு துணிகரத்தைக் காண்பிக்கிறது. தான் அவரைக் காட்டிக் கொடுக்கப் போகிறதை அவன் அறியாமல் கேட்டான் என்று சொல்ல இடமில்லை. ஏனெனில் அவனைத் துரோகத்துக்கு எழுப்பிவிட்ட சாத்தான் அவன் இருதயத்திலும், எந்தச் சமயத்தில் காட்டிக் கொடுக்கலாம் என்கிற எண்ணம் அவன் தலையிலும், அவரை விற்ற வெள்ளிக்காசு அவன் கையிலும் இருந்தது. ஆனுல் அவன் இரட்சகரைச் சோதிக்கும்படியாக அல்லது மற்றச் சீஷருக்குமுன் தன்னை நீதிமானுக்கும்படியாகக் கேட்டிருப்பானுகில், அது அவன் இருதயத்தின் மகாப்பெரிய கேட்டைக் காண்பிக்கிறது என்பதற்கு ஆட்சேபனை என்ன. ஆண்டவரே, இப்படிப்பட்ட மாய்மாலத்துக்கு என்னை விலக்கமாய்க் காரும்.

ஆ, நமது ஆண்டவரின் எச்சரிப்பு மொழிகளைக் கவனிப்பாயாக. அவர் காட்டிக் கொடுக்கப்படுவது தீர்க்கதரிசன வாக்கின்படி நடந்தபோதிலும் (சங். 41, 9), யூதா அவரைக் காட்டிக்கொடுத்ததற்கு அவன் பொருளாசையும் துரோக சிந்தையுமே காரணமா யிருந்ததால், அவன் அடையப்போகிற பலனை அவர் அறிந்து, அவனுக்கு ஐயோ என்கிறூர். ஏனெனில் வீம்புக்காரர் அவருடைய கண்களுக்கு முன்பாக நிலைநிற்பதில்லை, எல்லா அக்கிரமக்காரரையும் பகைக்கிறூர் (சங். 5, 5). பராபரன் பொல்லாத மனிதரின் துர்க்கிரியையும் நன்மைக் குதவும்படி அதை மாற்றுகிற சர்வவல்லவரா யிருந்தும், அவர்களுடைய பொல்லாப்பைப் பகைக்

கிற பரிசுத்தரும் அதைத் தண்டிக்கிற நீதியருமாயிருக்கிறார்.

கர்த்தர் துணிக்கையைத் தோய்த்து யூதா இஸ்காரியோத்துக்குக் கொடுத்தார். அப்படியே பராபரன் அநேகருக்குத் தமது ஈவுகளைக் கொடுப்பதால் அவர்களைத் தமது பிள்ளைகளாக அங்கீகரிக்கிறார் என்று எப்போதும் எண்ணாதே. நீ பராபரனுடைய கரத்திலிருந்து ஈவுகளைப் பெற்றுக்கொள்ளும் பொழுதெல்லாம்: இவைகளைப் பராபரன் எனக்கு ஏன் கொடுத்தார்; இதை எனக்குச் சாபமாகக் கொடுத்தாரோ, ஆசீர்வாதமாகக் கொடுத்தாரோ என்று யோசித்து, பயமும் எச்சரிப்புமுடையவனாயிரு. ஆகாதவர்கள் புல்லைப்போல் செழித்து, சகல அக்கிரமக்காரரும் பூக்கும்போது, அவை அவர்களை என்றென்றைக்கும் அழிப்பதற்கு ஆகின்றன (சங். 92, 7).

அன்புள்ள இரட்சகரின் வாயினால் ஐயோ கூறப்படுகிறது எத்தனை பயங்கரம். அவருடைய ஐயோவுக்கு ஆளான மனுஷன் இம்மையிலும் சபிக்கப்பட்டவன், மறுமையிலும் சபிக்கப்பட்டவன். அவன் கடின நெஞ்சனாகிப் பாவத்திலேயே கதித்து, அதன் ஊழியத்திலேயே நிலைத்து, பார்வோனைப் போல் கெட்டழிவான். யாதொருவனுங் கெட்டுப்போகச் சித்தமாயிராத கர்த்தர் யூதாவுங் கெட்டுப்போகச் சித்தமாயிராமல், அவனைப் பலவிதத்திலும் எச்சரித்தார். அவனோ அவருடைய திருமொழிகளுக்குக் கொஞ்சமாகிலும் இடங்கொடாமல், சாத்தானுக்கே இடங்கொடுத்து, அதின் வாசஸ்தலமானதினால் கெட்டழிந்து போனான். நீயும் இப்படியாகாமல் தெய்வ வார்த்தைக்குச் செவிகொடு, ஆத்துமாவே.

## செபம்.

அருமை மீட்பரே, உம்மோடு பந்தியிருந்து உமது அப்பத்தை வாங்கிப் புசித்த சீஷன் உமக்குத் துரோகியானபோது உமது ஆத்துமா எத்தனை வேதனைப்பட்டதோ. உமது மனச் சஞ்சலம் எவ்வளவு பெரியதா யிருந்ததோ. ஆண்டவரே, யூதா வல்ல, நானே உமக்கு விரோதமாகக் குதிகால் எடுத்த துரோகி. நான் அந்தரங்கத்தில் உமக்கு விரோதமாக அநேகம் பாவங்களை நடப்பித்து வெளிவேஷத்தில் மற்ற கிறிஸ்தவர்களைப் போல் என்னைக் காண்பிக்கும்போ தெல்லாம் உமக்குத் துரோகஞ் செய்கிறேன் என்பதை உணருகிறேன். கிருபையுள்ள கர்த்தாவே, தேவரீர் எனக்கு ஐயோ கூறாமல் என் பாவங்களை மன்னியும். நான் மாயத்தையும் வேஷத்தையும் வெறுத்து மரணபரியந்தம் உண்மையாய் நடக்கப் பரிசுத்த ஆவியைக்கொண்டு எனக்குத் துணை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

இயேசுவே, பேயின் சதிகளைப் பாரும்,
அது இருளின் பலத்துடனே
வந்தென்னை எத்திக் கெடுப்பதை நாடும்;
வெல்ல உதவும், என் ரட்சகரே
என்னை அச்சத்துரு எந்தவழியும்
சல்லியரித்துப் பாழாக்கத் திரியும்.

இயேசுவே, என்னை எந்நேரமுங் காரும்,
உம்மை அடியேன் இழப்பதற்கே
பேய் என்னைச் சோதித்தால், ஆயுதந் தாரும்,
வெல்ல உதவும், என் ஆதரவே.
நீரே என் பொக்கிஷம், என்னில் தரியும்,
பேயைத் துரத்தப் பலத்தை அளியும். (207, 1. 7.)

## 9. வெள்ளிக் கிழமை.

### சிநேகத்தின் புதுக் கற்பனே.

எல்லாத்தைப் பார்க்கிலுமோ வென்ருல் ஒருவருக்கொருவர் கருத்தான சிநேகமுள்ளவர்களாய் இருங்கள்; ஏனெனில் சிநேகம் திரள் பாவங்களே மூடும். 1 பேது. 4, 8.

பிள்ளேகளே, இன்னங் கொஞ்சப்போது உங்களுடனேகூட இருக்கிறேன்; என்னேத் தேடுவீர்கள், ஆனல் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடாது என்று நான் யூதரோடே சொன்னதுபோல், இப்போது உங்களோடுஞ் சொல்லுகிறேன். நீங்கள் ஒருவரையொருவர் சிநேகியுங்கள்; நான் உங்களேச் சிநேகித்ததுபோல் நீங்களும் ஒருவரையொருவர் சிநேகியுங்கள் என்கிற புதுக் கற்பனேயை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவருக்கொருவர் சிநேகமுள்ளவர்களா யிருந்தால், இதனல் எல்லாரும் நீங்கள் எனக்குச் சீஷர் என்று அறிவார்கள் என்ருர். யோவா. 13, 33-35.

---

பராபரன் சிநேகந்தானே. என் இரட்சகர் சிநேக அவதார புருஷன். அவர் பேச்சுமூச்சு யாவும் சிநேகமே ஒழிய வேறல்ல. அவர் அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்தவர். சிநேகம் அற்ற இந்த உலகத்தைத் தெய்வசிநேகத்துக்குப் பங்காளியாக்க வந்த என் ஆண்டவர்: ஒருவரை ஒருவர் சிநேகியுங்கள் என்கிற புதுக்கற்பனேயைத் தமது சீஷருக்குக் கொடுக்கச் சித்தமானர். பழைய ஏற்பாட்டின் மத்தியஸ்தனுகிய மோசே இஸ்ரவேல் சனத்துக்குக் கொடுத்த கற்பனேகள் அநேகம். புதிய ஏற்பாட்டின் மத்தியஸ்தனுகிய கிறிஸ்துவோ இந்த ஒரே கற்பனேயைக் கொடுக்கிருர். மோசே கற்பனேயைக் கொடுத்தாரே அன்றி அதைக் கைக்கொள்ளப் பெல

னைக் கொடுக்கவில்லை. கிறிஸ்துவோ பழைய மீறுதல்களுக்கு நிவாரணம் உண்டு பண்ணினதுமன்றி சிநேகத்தின் புதுக்கற்பனையோடு அதைக் கைக்கொள்ளப் பெலனையும் கொடுக்கிறார்.

ஆத்துமாவே, இந்த மரணசாதனப் புத்திமதியைக் கவனி. நாம் அவரைச் சிநேகிக்கக் கடவோம். ஏனெனில் அவர் நம்மை முந்திச் சிநேகித்தார். ஆம், நாம் இன்னம் பாவிகளாயிருக்கக் கொள்ளக் கிறிஸ்து நம்மைச் சிநேகித்தார் (ரோ. 5, 8). நீ அவரைச் சிநேகிக்கிறதைச் சகோதர சிநேகத்தினால் ரூபிக்க வேண்டுமென்று உன் கர்த்தர் விரும்புகிறார். ஐயோ, என்னைத் தற்சிநேகமல்லவோ ஆளுகிறது. நான் மாத்திரம் வாழவேண்டும், நன்றாயிருக்கவேண்டுமென்கிற எண்ணமல்லவோ என் நடபடிகளில் எல்லாம் காணுகிறது. கிறிஸ்து இயேசுவிலுள்ள சிந்தையோ முற்றிலும் வேறே. அவருக்கும் தற்சிநேகத்துக்கும் எத்தனை தூரம்.

நான் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்ட கிறிஸ்தவனேயானால், அவர் எனக்குக் காண்பித்ததும் கற்பித்ததுமான சிநேகம் என்னிடத்தில் காணப்படுவது அவசியமல்லவோ. கிறிஸ்துவின் சிநேகமில்லாதவனை கிறிஸ்தவனென்று சொல்வதெப்படி. சிநேகம் கிறிஸ்தவர்களின் அடையாளம். ஆதிக்கிறிஸ்தவர்களைப் பார்த்த புறமதஸ்தர்: இதோ, இவர்கள் எவ்வளவாய் ஒருவரை ஒருவர் சிநேகிக்கிறார்கள் என்று அவர்களைக் குறித்து சாட்சி பகரக் கூடியதாயிருந்தது, அச்சபையின் நல்நிலைமையைக் காண்பிக்கிறதல்லவோ. தற்காலச் சபையைக் குறித்து இந்தச் சாட்சி சொல்லப்படக் கூடுமோ என்று நீயே நிதானித்துக்கொள், ஆத்துமாவே.

நான் என் சகோதரனை என்னைப்போல் சிநேகிக்க வேண்டியவனுச்சே. இதனுல் கர்த்தர் என்னிடத்தில் தேடுஞ் சிநேகம் எத்தன்மையானது. அது உண்மையான கரிசனமும், இடைவிடாமல் தொடர்ந்தேற்றியாய் நிற்பதும், பலவீனங்களையும் தவறுதல்களையும் சகித்துக் கொள்வதுமாயிருப்பது முக்கியம். கிறிஸ்தவனே, நீ இத்தன்மையான சிநேகத்தால் பிறனைச் சிநேகிக்கிருயோ. உன் சிநேகம் சுத்த இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலுமிருந்து பிறக்கிறதோ (1 தீமோ. 5, 8).

கிறிஸ்து நமக்காகச் சீவனை விட்டுவிட்டதினுல் சிநேகம் இன்னதென்று அறிந்தோம். நாமும் சகோதரருக்காகச் சீவனை விட்டுவிடக் கடனாளிகளாயிருக்கிருேம். ஆனுல் எவனுகிலும் லோக சீவனம் உடையவனுயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனை விலக அடைத்துக் கொண்டால் அவனுக்குள் பராபரனுடைய சிநேகம் எப்படி நிலைநிற்கும் (1 யோவா. 3, 16. 17).

## செபம்.

ஆ, என் அன்புள்ள இயேசுவே, தேவரீர் என்னைச் சிநேகிக்கிறதுபோல் நானும் பிறத்தியானை உண்மையாய்ச் சிநேகிக்க உமது சிநேகத்தின் புதுக் கற்பனையை என் இருதயத்தில் நன்ருய்ப் பதிப்பித்தருளும். நான் என் சகோதரனுடைய குறைவுகளின் நிமித்தம் அவனைப் புறக்கணிக்காமல், உமது பரிசுத்த கற்பனைப்படி சிநேகத்தையே காண்பித்து, உமது காலடிகளைப் பின்செல்ல எனக்குப் பலத்தைத் தந்தருளும். நான் உம்மை முன்னிட்டுச் சிநேகத்தில் பிழைக்கவும், சிநேகத்தில் மரிக்கவும், நித்திய சிநேக

மாகிய தேவரீரை விட்டு ஒருபோதும் பிரியாதிருக்கவும் வாஞ்சிக்கிறேன். உமது திருப்பாடுகளின் நிமித்தம் என் வாஞ்சையை நிறைவேற்றியருளும் சுவாமி, ஆமேன்.

நீர் நிறைந்த நேசமுள்ளோர்,
எல்லாரின்மேலும் தயவுள்ளோர்,
மகா அன்புள்ள இயேசுவே.
உம்மால் தீயோர் பேரிலேயும்
பகல் உதிக்கும் மாரி பேயும்,
பெரிய உபகாரியே.
ஆ, இந்த உமது
குணம் என் மனது
அடையட்டும்.
என் இயேசுவே,
நான் உமக்கே
ஒப்பாய் அன்பாயிருக்கவும். (193, 4.)

---

## 10. சனிக் கிழமை.

### ஆத்துமப்பாடு.

என்னைவிட்டுத் தூரமாகாதேயும்; ஏனெனில் நெருக்கம் கிட்டியிருக்கிறது. சகாயரும் இல்லை. சங். 22, 12.

அப்போது இயேசு அவர்களோடு கெத்சேமனே என்னப்பட்ட இடத்துக்கு வந்தார். அங்கே ஒரு தோட்டம் இருந்தது. அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள். அநேகம்விசை இயேசு அங்கே தம்முடைய சீஷருடனே கூடப் போயிருந்தபடியால் அவரைக் காட்டிக்கொடுத்த யூதாவும் அந்த இடத்தை அறிந்திருந்தான். அவர் அவ்விடத்துக்கு வந்தபோது அவர்களுடனே: நான் போய் அங்கே செபம்பண்ணுமளவும் இவ்

விடத்தில் உட்கார்ந்திருங்கள்; நீங்கள் சோதனைக் குட்படாதபடி செபம்பண்ணுங்கள் என்றார். பிற்பாடு அவர் பேதுருவையும், யாக்கோபும் யோவானுமாகிய செபெதேயுவின் இரண்டு குமாரரையும் கூட்டிக்கொண்டு, துக்கமடையவும் மிகவும் வியாகுலப்படவும் துவக்கினார். அப்போது அவர்களுடனே: என் ஆத்துமா மரணபரியந்தம் கனதுக்கமாயிருக்கிறது. நீங்கள் இங்கே தரித்து, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொன்னார். அவர் இவர்களைவிட்டுக் கல்லெறிதூரம் அப்புறப்பட்டு, முழங்கால்படியிட்டு, முகங்குப்புற விழுந்து, கூடுமானால், அந்த வேளை தம்மைவிட்டுப் போக வேண்டிக்கொண்டார். வானத்திலிருந்து ஒருதூதன்வந்து, அவருக்குத் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான். அவர் மரண அவஸ்தையாகி, அதிக உக்கிரத்துடனே செபம்பண்ணினார். அவருடைய வேர்வை ரத்தத்தின் பெருந் துளிகளாய்த் தரையிலே விழுந்தது. மத். 26, 36 - 44; மாற். 14, 32 - 40; லூக். 22, 40 - 44.

---

என் பாவம் தோட்டத்தில் ஆரம்பித்ததால் அதற்கு நிவாரணம் உண்டு பண்ணுவதற்கான பாடுகளைத் தோட்டத்தில் துவக்கச் சித்தமானீரோ, இயேசு சுவாமி. ஆத்துமத்தில் பாவஞ் செய்து, ஆத்தும மரணத்துக்கு ஆளான என்னை மீட்டுக் கொள்ளத் தேவரீர் உமது பரிசுத்த ஆத்துமத்தில் கனதுக்கமடையவும் வியாகுலப்படவும் திருவுளமானீரோ.

தேவதூதர் பயந்து போற்றும் மகிமையின் ஆண்டவர் மண்மீதில் விழுந்திடலாயிற்றோ. பரிசுத்த மலையில் சூரியனைப்போல் பிரகாசித்த திருமுகமானது இந்த அசுத்தப் பூமியில் குப்புறக் கிடக்கலாயிற்றோ. யவீருவின் வீட்டிலும் பரிசுத்த

மலையிலும் உமது ஒப்பற்ற மகிமையைக் கண்டவர்கள் உமது ஒப்பற்ற தாழ்வைக் காணவும், நீர் குடிக்கிற பாத்திரத்தைக் குடிப்போம் (மத். 22, 20) என்றவர்கள் அதன் ஒரே துளியையும் குடிக்க அசக்தர் என்று உணரவுஞ் செய்யச் சித்தமானீரோ.

எனது ஆத்துமாவே, உற்றுப்பார். தூதர்களின் அதிபதி தூதரிலுஞ் சிறியவரானார் (சங். 8, 6). சகல சந்தோஷங்களின் ஊற்றானவர் மரணபரியந்தம் கனதுக்கமானார். அழுகிறவர்களை அமர்த்துகிறவர் உரத்த கூக்குரலோடும் கண்ணீரோடும் விண்ணப்பஞ் செய்யவேண்டியவரானார்(எபி. 5, 7). இதற்குக் காரணமென்ன வென்று உனக்குத் தெரியுமா.

ஐயோ, என் கொடிய பாவங்களல்லவோ அவரை இப்படித் தாழ்த்திற்று. என் சென்ம பாவமும், கர்மபாவமும், ஆதாம் முதல் கடைசிநாள் பரியந்தம் இருக்கும் சர்வ மனுஷ சாதியின் எண்ணிறந்த பாவங்களும் அவைகளின் சகல அசுத்தத்தோடும் சாபத்தோடும் தேவாட்டுக் குட்டியாகிய அவர்பேரில் புரண்டு விழுந்து பாவமறியாத அவரைப் பாவமாக்கிற்று (2 கொரி. 5, 21). பாவமாக்கப்பட்ட அவர் பாவிகள் குடிக்கவேண்டிய கர்த்தருடைய உக்கிரத்தின் பாத்திரத்தை அதன் வண்டல்கள் பரியந்தம் குடிக்க வேண்டியவர் ஆனார். தேவ நீதியின் பட்டையம் அவர்பேரில் விழுந்து, கொடிய நரக சுவாலை அவர்மேல் வீசினதால் நித்தியானந்தச் சொரூபியாகிய அவர் சொல்லிமுடியாத துக்கத்துக்கு ஆளானார். இப்படி அவருக்குச் செய்த கொடிதான பாவத்தை நான் இனி சிநேகிப்பது எப்படி. நான் பாவத்துக்கென்று சோதிக்கப்படும்போதெல்லாம் என் கர்த்தரின் ஆத்துமப்பாடுகளை நினைத்துப் பாவத்துக்குப் பயந்து நடுநடுங்குவேனாக.

ஏழை மனுஷசாதியை அடிமைகொண்ட பிசாசானவன் தன் இராச்சியம் பறிபோகிறதற்கான வேளை வந்ததென்று கண்டு, மகா உக்கிர கோபத்தோடும் தன் சகல சேனை பரிவாரங்களோடும் நமது மீட்பர்மேல் படையெடுத்து வருகிறான் பார், என் ஆத்துமாவே. அவனுடைய சகல நெருப்பான அம்புகளும் அவர் ஆத்துமாவைத் தாக்குகையில் அவர் கன துக்கம் அடையாமல் இருப்பது எப்படி. ஆதி சர்ப்பமே, மனுஷசாதியின் சத்துருவே, நீ என் இரட்சகரைத் தாக்கினதில் உன் வல்லமை போயிற்று என்று அறிவேன். என் இரட்சகரால் நான் உன் வல்லமைக்கு நீங்கலானேன்.

பாவத்தின் சம்பளமாகிய மரணம் என் சீவ நாயகரை நெருக்கினதால் பச்சை மரமாகிய அவருக்கு உண்டான வேதனை சொல்லிமுடியுமா. ஆனால் மரணமே, நீ என் இரட்சகரை எதிர்த்துப் போராடினதில் உன் கூர் முறிந்துபோயிற்று என்று எனக்குத் தெரியும். ஆகையால், உலகத்தாரின் திகிலாகிய நீ என் சந்தோஷமானாய். நான் உனக்குக் கொஞ்சமாகிலும் அஞ்சமாட்டேன்.

கிறிஸ்தவனே, உன் இரட்சகரின் ரத்தவேர்வை பாவத்தின் பலனாகிய சாப வேர்வையை உனக்கு நினைப்பூட்டி, உன் மரண வேர்வையில் உன்னை ஆற்றித்தேற்றி, நித்திய மோட்ச ராச்சியத்தில் உன்னைச் சேர்க்கக் கடவது.

## செபம்.

என் கர்த்தராகிய இயேசுவே, என் பாவத்தின் நிமித்தம் தேவரீர் ஆத்துமப் பாடுகளைச் சகித்த உமது அன்புக்காக உமது திருநாமத்துக்கு அனந்த

ஸ்தோத்திரம். நான் எனக்காக ஆத்துமப்பாடுகளைச் சகித்த உமது நேசத்தை எப்போதுந் தியானிக்கவும், உமது பாடுகளுக்குக் காரணமாயிருந்த பாவங்களை முழுப்பகையாய்ப் பகைக்கவும் எனக்குத் துணை செய்தருளும். என் மரணநேரத்தில் தேவரீர் என்னண்டை வந்து, என் அவஸ்தையில் என்னைத் தேற்றரவு செய்து, பாவமன்னிப்பின் நிச்சயத்தை எனக்கு அருளி, என் ஆத்துமாவைச் சகல இக்கட்டுக்கும் நீங்கலாக்கி விடுவித்து, என்னை நித்திய மோட்ச ராச்சியத்திலே சேர்த்தருளும் சுவாமி, ஆமேன்.

ஆ, தேவரீருட தவிப்பும்
இரத்தவேர்வை வாதையும்
அம்மரண அனுபவிப்பும்
என் நெஞ்சில் தங்கி, நித்தமும்
என் கெட்ட இச்சைகளையே
முறிக்கப்பண்ணும், இயேசுவே. (ப.ஞா. 40, 12.)

---

ஒருசந்தியின் இரண்டாம் ஞாயிறு.

நிரு. 1 தெச. 4, 1—7. சுவி. மத். 15, 21—28.

---

## 11. திங்கள் கிழமை.

### யூதாவின் துரோகம்.

என்னை நிந்தைப்படுத்துகிறவன் சத்துருவாயிருந்தவனல்ல, எனக்கு விரோதமாய்ப் பெருமையாகிறவன் என்னைப் பகைத்தவனல்ல. எனக்கு இராசியான மனுஷனும், என் வழிகாட்டியும் எனக்கு அறிமுகமானவனுமாகிய நீயே அவன். சங். 55, 13. 14.

உடனே அவர் இன்னம் பேசுகையில், பன்னிருவரில் ஒருவனாகிய யூதா சேவகரின் சேர்வையையும் பிரதான ஆசாரியர் பரிசேயருடைய வேலைக்காரரில் சிலரையுங் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்டிகளோடும் ஆயுதங்களோடும் அங்கே வந்தான். அவனோடுகூட பிரதான ஆசாரியரிடத்திலும் சனத்தின் மூப்பரிடத்திலுமிருந்து திரள் கும்பு பட்டயங்களையும் கத்திகளையும் தடிகளையும் பிடித்து வந்தது. யூதா அவர்களுக்கு முன்னாக நடந்துவந்து, இயேசுவை முத்தமிட அவரண்டை சேர்ந்தான். ஏனெனில் அவன் இவர்களுக்கு: எவனை முத்தமிடுவேனோ அவன்தான், அவனைப் பிடித்துப் பத்திரமாய்க் கொண்டுபோங்கள் என்று அடையாளஞ் சொல்லியிருந்தான். உடனே இயேசுவண்டை சென்று: வாழ்க, ரபீ என்று அவரை முத்தமிட்டான். இயேசு அவனுடனே: சிநேகிதனே, ஏதுக்கு வந்திருக்கிறாய். முத்தத்தினாலே மனுஷனுடைய குமாரனைக் காட்டிக் கொடுக்கிறாயோ என்றார். இயேசு தம்முடைய மேல் வரப்போகிறதெல்லாவற்றையும் அறிந்திருந்து, வெளியே வந்து, அவர்களுடனே: ஆரைத் தேடுகிறீர்கள் என்றார். அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இயேசு நாசரேத்தானையே என்றார்கள். இயேசு அவர்களுடனே: நான்தான் என்றார். ஆனால் அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதாவும் அவர்களுடனே கூட நின்றான். நான்தான் என்று அவர் இவர்களுடனே சொன்னபோது, இவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழுந்தார்கள். அப்போது மறுபடியும் அவர்களை: ஆரைத் தேடுகிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: இயேசு நாசரேத்தானையே என்றார்கள். இயேசு பிரத்தியுத்தாரமாக: நான்தான் என்று உங்களுக்குச் சொன்னேனே. இப்போதும் என்னைத் தேடினீர்களானால், இவர்கள் போகட்டும் என்றார். நீர் எனக்குக் கொடுத்தவர்களில் நான் ஒருவனையும் இழந்ததில்லை என்று அவர் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறும்படியாகத்தானே. மத். 26, 49. 50; மாற்கு 14, 45. 46; லூக். 22, 47. 48; யோவா. 18, 8. 9.

நமது அன்புள்ள இரட்சகர்: எழுந்திருங்கள் போவோம். இதோ, என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் சமீபித்து வந்தான் என்று சொல்லி, தமது சிறு மந்தையோடு புறப்படுகையில் அவருக்கு எதிரே ஒரு பெருமந்தை வருகிறது. குணப்பட்டு மனந்திரும்பி இரட்சிப்படைந்தவர்களின் திரள் கூட்டத்தோடு கிறிஸ்துவண்டைக்குப் போகவேண்டியவனாகிய யூதா கள்ளமேய்ப்பனாகி, நமதிரட்சகருக்கு விரோதமாய்க் கத்திகளையும் தடிகளையும் பிடித்துவரும் அவர் சத்துருக்களின் திரள்கும்புக்குத் தலைவனாய் வருவது எத்தனை பரிதாபம்.

அவன் உள்ளே பகையையும் உதட்டில் உறவையும் வைத்துக்கொண்டு வந்து, அன்பான வார்த்தைகளோடு நமது ஆண்டவரை முத்தமிட்டது எத்தனை துணிகரம். இத்துணிகரத்தை நமது இரட்சகர் சகித்துக்கொண்டது எத்தனை பெரிய மெத்தனவு. அவன் வாயின் சொற்கள் வெண்ணெயைப்போல் மெதுவானவைகள்; அவன் இருதயமோ யுத்தம். அவன் வார்த்தைகள் வெண்ணெயிலும் மிருதுவானவைகள்; ஆனால் அவைகளே உருவின பட்டையங்கள் (சங். 55, 21) என்ற வார்த்தையின் உண்மை யூதாவினிடத்தில் எத்தனை தெளிவாய்க் காணப்பட்டது. அப்படியே இந்தச் சனம் தங்கள் வாயினால் நம்மண்டைக்குச் சேர்ந்து, தங்கள் உதடுகளினாலே நம்மைக் கனம் பண்ணியும், அவர்கள் இருதயம் நமக்குத் தூரமாய் விலகியிருக்கிறது (எசா. 29, 13) என்று எத்தனை கிறிஸ்தவர்களைக் குறித்துச் சொல்லக் கூடியது. நானும் அவர்களில் ஒருவன்தான். என் மாயமான ஆராதனையாலும், என் வேஷமான நடக்கையாலும் நான் அடிக்கடி உமக்குச் செய்த துரோகத்தை மன்

னித்தருளும், இரட்சகரே. குமாரன் கோபமடையாமலும், நீங்கள் வழியில் அழியாமலும் இருக்கும்படிக்கு அவரை முத்திசெய்யுங்கள் (சங்.2,12) என்ற கற்பனையின்படியே நான் செய்வேன். என் நேசர் தமது வாயின் முத்தங்களில் ஒன்றால் என்னை முத்தமிடக் கடவார் (உன். 1, 2). கிறிஸ்தவனே, சத்துருவின் முத்தியிலும் மித்துருவின் கத்தி வாசி என்பதை நீ அறிந்து, இச்சகக்காரருக்கு எச்சரிக்கையாய் உன்னைக் காத்துக்கொள்.

முந்தின ஆதாம் பாவஞ்செய்தபின் அதற்கான தண்டனை வரும் என்று அஞ்சி, தன் பராபரனுக்கு எதிரே வராமல் தோட்டத்தின் விருட்சங்களில் மறைந்துகொண்டான். இரண்டாம் ஆதாமோ, என் பாவத்தின் தண்டனையைத் தாம் ஏற்றுக்கொள்ளும்படி தமது சத்துருக்களுக்கு எதிர்கொண்டு வந்து: ஆரைத் தேடுகிறீர்கள் என்கிறார். என்பிணையாளியே, உமக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்துவேன்.

நீங்கள் தேடிவந்த இயேசு நாசரேத்தான் நான்தான் என்று கர்த்தர் சொன்ன உடனே அவர்கள் பின்னிட்டுத் தரையிலே விழக் காரணமென்ன. அவர்கள் வில்லம்புக்கு இல்லாத வல்லமை இயேசுவின் சொல்லம்புக்கு உண்டென்று ரூபிக்கவும், கட்டாயத்தினால் அல்ல, உற்சாகத்தினால் தம்மைப் பாடுகளுக்கு ஒப்புக்கொடுக்கிறவர் என்று காண்பிக்கவும் அவர் சித்தமானார்.

இயேசையர் தமது சத்துருக்களை நோக்கி: நீங்கள் என்னைத் தேடினீர்களானால் இவர்கள் போகட்டும் என்று உரைத்ததால், அவர் என்னைக் காக்க வந்த உன்னத மேய்ப்பர் என்று உணர்த்தத் திருவுளங் கொண்டார். இந்த அவர் திருவாக்கின் வல்

லப மல்லவோ சிதறுண்ட அவர் சீஷரைத் தற்காத் தது. இவ்வாக்கு என்னையுங் காக்கக்கொள்ள, என் னைத் தீண்டக் கூடியவன் ஆர்.

தம்மை மறுதலித்த பேதுருவைக் கர்த்தர் திருக்கண்ணால் நோக்கிப் பார்த்தவுடனே அவன் தனது பாவத்துக்காக மனஸ்தாபப்பட்டான். யூதா வோ முகமுகமாய்க் கர்த்தருடைய வார்த்தைகளால் கண்டிக்கப்பட்டும், அவர் திருமொழியானது விழ லுக்கு இறைத்த நீர் போலவும், காட்டில் எறித்த நிலாப்போலவும் ஆனது எத்தனை நிர்ப்பந்தம்.

## செபம்.

இரக்கமுள்ள இரட்சகரே, தேவரீர் என் நிமித்தமாக உம்மை உமது சத்துருக்கள் கையில் உற்சாகமாய் ஒப்புக்கொடுத்து, யூதாவின் துரோக முத்தியைச் சகித்துக் கொண்டதற்காக உமது திரு நாமத்திற்கு ஸ்தோத்திரம். ஆ, சுவாமி, நான்தான் உம்மைக் காட்டிக்கொடுத்த பாவி. நானே உமது சிநேகத்தை அனுபவித்தும் உமக்குத் துரோகஞ் செய்யத் துணிந்த துரோகி. உமது சொல்லிமுடியாத பாடுகளின் நிமித்தம் என் வெகுவான பாவங்களை எனக்குக் கிருபையாய் மன்னித்தருளும். நான் இனி உமக்குத் துரோகியாகி உமது சத்துருக்களின் கூட்டத்தோடு சேராமல், உமது உண்மையுள்ள சீஷ ரோடு கூடி உண்மையாய் நடக்கத் துணை செய்தரு ளும் சுவாமி, ஆமேன்.

நான் சீக்கிரத்தில் விட்டுப்போகும்
பொருளைப் பற்றிக்கொள்வேனே,
மகிழ்ந்தபின்பு என்றும் நோகும்
நோவின்பமா யிருக்குமோ.

கர்த்தாவுக்கு ஆகாதோனய்
நான்போவானேன், ஓர் மாயைக்காய்.

முன்னுள் உலகின் நேசத்தாலே
மயங்கினோர்கள் எங்கிப்போ,
சரீரம் பூச்சிகளினலே
அழிந்துபோயிற்றல்லவோ;
அழுக்காம் ஆத்துமத்துக்கு
தீராத துக்கம் வந்தது. (ப. ஞா. 237, 4. 6.)

---

## 12. செவ்வாய்க் கிழமை.

### கிறிஸ்து பிடிபடுதல்.

எனக்கு அறிமுகமானவர்களை எனக்குத் தூரமாக விலக்கி, என்னை அவர்களுக்கு அருவருப்பாக்கினீர்; நான் புறப்படக் கூடாததாய் அடைபட்டிருக்கிறேன். சங். 88, 9.

அப்போது அவர்கள் சேர்ந்துவந்து, இயேசுவின் பேரில் கைகளைப்போட்டு, அவரைப் பிடித்தார்கள். அவரைச் சுற்றியிருந்தவர்கள் சம்பவிக்கப்போகிறதைக் கண்டபோதோ, அவருடனே: ஆண்டவரே, பட்டையத்தினலே வெட்டுவோமோ என்றார்கள். இதோ, இயேசுவோடிருந்தவர்களில் ஒருவனகிய சீமோன் பேதுரு தனக்கு ஒரு பட்டையம் இருக்கையில் அதை உருவிப் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனை வலது காதற வெட்டினன். அந்த வேலைக்காரன் பேர் மல்கு. அப்போது இயேசு பேதுருவுடனே: உன் பட்டையத்தைத் திரும்ப அதன் இடத்திலே போடு, ஏனென்றால் பட்டையத்தை எடுக்கிற யாவரும் பட்டையத்தால் மடிந்து போவார்கள். பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தைக் குடியாதிருப்பேனே, அல்லது என் பிதா பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தேவதூதரை என்னண்டை நிறுத்த, நான்

இப்போது அவரை வேண்டிக் கொள்ளக் கூடாதென்று நினைக்கிருயோ. ஆனால் வேத எழுத்துக்கள் எப்படி நிறைவேறும். அதேனென்றால் இந்தடவாகச் சம்பவிக்கவேண்டியதென்றார். அவர் சீஷர்களுடனே: இம்மட்டும் நிறுத்துங்கள் என்று சொல்லி, வேலைக்காரனுடைய காதைத் தொட்டு அவனைக் குணமாக்கினர். அந்நேரத்தில் இயேசு தம்முடையமேல் வந்த பிரதான ஆசாரியர்களோடும் தெய்வாலய அதிகாரிகளோடும் மூப்பரோடுஞ் சொன்னதாவது: நீங்கள் கள்ளன்மேல் புறப்பட்டதுபோலே கத்திகளோடும் தடிகளோடும் என்னைப் பிடிக்கவந்தீர்கள். நான் தினம் உங்களண்டையில் தெய்வாலயத்திலே உட்கார்ந்து உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தேன்; அப்போது நீங்கள் என்னைப் பிடித்ததில்லையே. இதுவோ உங்கள் வேளையும் அந்தகாரத்தின் வல்லமையுமா யிருக்கிறது. ஆனால் தீர்க்கதரிசிகளின் எழுத்துக்கள் நிறைவேறுகிறதற்கு இதெல்லாம் சம்பவித்தது என்றார். அப்போது சீஷர் எல்லாம் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். ஆனால் சேவகரின் சேர்வையும் ஆயிரத்துக்குச் சேர்வைக்காரனும் யூதருடைய வேலைக்காரரும் இயேசுவைப் பிடித்து அவரைக் கட்டினர்கள். மத். 26, 50-56; மாற். 14, 46-50; லூக். 22, 49-53; யோவா. 18, 10-13.

---

பரிசுத்த ஆண்டவர்மேல் பாதகர் கைபோடத் துணிந்தார்களோ. அநேகங் காளைகள் அவரைச் சூழ்ந்து பாசான் தேசத்து வலுவான எருதுகள் அவரை வளைந்து கொண்டனவோ, நாய்கள் சுற்றிக் கொண்டனவோ (சங். 22, 13. 17).

பட்டையமே, நம்முடைய மேய்ப்பன்மேலும், நமக்கடுத்த புருஷன் மேலும் எழும்பென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; மேய்ப்பனை வெட்டு, அப்போது ஆடுகள் சிதறிப்போகும் (சக. 13, 7) என்ற தீர்க்கதரிசனப்படியே, கர்த்தராகிய

பராபரன் தமது மேய்ப்பனை வெட்டும்படி தமது நீதியுள்ள கோபத்தின் பட்டையத்தை அவர்மேல் அனுப்பியிருக்க, சீஷர்கள் அவரைத் தங்கள் இருப்புப் பட்டையத்தால் காக்க முயன்றதும் (மத். 26, 13; மாற். 14, 27), ஞானமுள்ள கர்த்தரின் உத்தரவு வருமுன் பேதுரு அப்போஸ்தலன் மல்கு என்பவனை வலதுகாதற வெட்டினதும் எத்தனை பைத்தியம். ஆத்துமாவே, எல்லாக் காரியங்களிலும் உன் மாமிச சிந்தைக்கும் வைராக்கியத்துக்கும் இடங்கொடாமல் கர்த்தரின் உத்தரவுக்குக் காத்திரு.

ஒவ்வொன்றுக்கும் அதனதன் இடமுண்டு. அப்போஸ்தலரின் கையானது பட்டையம் இருக்கத்தக்க இடமல்ல. அவர்கள் ஆவியின் பட்டையமாகிய பராபரனுடைய வசனத்தைப் பிடித்துப் போராடவேண்டியவர்கள். உலக எத்தனங்களால் கிறிஸ்துவின் திருநாமத்தைப் பரிபாலிக்கப் பார்க்கிறவர்கள் அதனாலே கெட்டுப் போவார்கள்.

பிதாவாகிய பராபரன் தமக்குக் கொடுத்ததும் தாம் உற்சாகத்தோடு அவர் கையில் வாங்கினதுமான தெய்வகோபபாத்திரத்தைக் கிறிஸ்து குடிக்காமல், தமது சத்துருக்களை நிக்கிரகஞ்செய்ய மனங்கொள்வாரேயாகில் சனகேரிபின் சேனையைச் சங்காரம் பண்ணின (எசா. 37, 36) தெய்வ தூதனைப் போல் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தெய்வ தூதரை அழைப்பிக்க அவரால் கூடாதோ. அப்படிச் செய்வாராகில் நாம் இரட்சிக்கப்படுவது எவ்விதம். ஆ, உன்னத நேசபரனே, உமது ஒப்பற்ற வல்லமையை என்னிமித்தம் வெறுத்துச் சத்துருவுக்கும் நன்மை செய்து, மல்குவின் காதைச் சொஸ்தப் படுத்துவதில் மாத்திரம் அதைக் கையாடச் சித்தமானீரோ.

அன்புள்ள இரட்சகர் தாம் கட்டாயத்தால் அல்ல, உற்சாகத்தால் தம்மை ஒப்புக் கொடுத்ததை யும், தமது சத்துருக்கள் வெளிச்சங்களின்பிதாவாகிய பராபரனால் அல்ல, அந்தகாரத்தின் வல்லமையால் இவ்வாறு நடக்கிறார்கள் என்பதையும் அவர்களுக்குத் தெரிவித்துத் தம்மைக் கட்டுவதற்கு ஒப்புக்கொடுத் தார். நானல்லோ பாவச் சிநேகிதன். என் கைகளும் கால்களுமல்லவோ கட்டப்படவேண்டியது. அவன் கைகளையும் கால்களையும் கட்டி, எல்லாத்துக்கும் புறம்பான இருளிலே போடுங்கள் (மத். 22, 13) என்ற பயங்கர தீர்ப்புக்கு என்னை நீங்கலாக்க அல் லவோ மாசற்ற என் இரட்சகர் கட்டுண்டார்.

## செபம்.

சாந்தமும் அன்புமுள்ள தேவ ஆட்டுக்குட்டி யே, உமது சத்துருக்கள் உம்மைப் பிடித்தபொ ழுது தேவரீர் அவர்களைக் கோபியாமல் அவர்களுக்கு எதிரே போய், அவர்களில் காயப்பட்ட துஷ்டனை யும் குணமாக்கினீரே. என்னை உமக்குச் சாயலாக்கி, பழிவாங்குஞ் சிந்தையும் அகங்காரமும் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். எனக்கு இடுக்கண்களும் துன் பங்களும் சம்பவிக்கையில், என் பரமபிதா எனக் குக் கொடுத்த பாத்திரத்தில் குடிக்கிறேன் என்று நான் நம்பி, ஆறுதலடையச் செய்தருளும். தேவரீர் கட்டுண்டதை முன்னிட்டு என்னைப் பாவநரகக் கட்டு களுக்கு நீங்கலாக்கியருளும் சுவாமி, ஆமேன்.

நானே கைகால் கட்டுண்டு,
பாதாளத்தில் தள்ளுண்டு
கிடத்தல் ஞாயமே;
நானே முடிவில்லாமல்
சந்தோஷத்தைக் காணமல்
வதைக்கப்படல் நீதியே.

நீரோ என்மேல் உண்டான
அழுத்தும் பாரமான
சுமை சுமக்கிறீர்.
ஆசீர்வதிக்க நீரே
போய்ச் சாபமாகிறீரே
நான் தப்ப நீர் படுகிறீர். (51, 5. 6.)

## 13. புதன் கிழமை.

### அன்னுவின் விசாரணை.

நாம் வெட்கப்படோம். நமது முகத்தை கற்பாறையாக வைத்தோம், ஏனெனில் நாம் வெட்கிப்போவதில்லை என்று அறிவோம். எசா. 50,7.

இயேசுவைப் பிடித்தவர்கள் அவரை முந்தி அன்னுவண்டை கொண்டுபோனுர்கள். ஏனெனில் அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரியனுகிய காயிபாவுக்கு மாமனுயிருந்தான். ஒரே மனுஷன் சனத்துக்குப் பதிலாக மடிந்துபோகிறது நலம்என்று யூதருக்கு ஆலோசனை கொடுததவன் இந்தக காயிபா தானே. பிரதான ஆசாரியனே வெனில் இயேசுவை, அவர் சீஷரையும் அவர் போதகத்தையுங் குறித்துக் கேட்டான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: நான் வெளியரங்கமாய் லோகத்துடனே பேசினேன். நான் எப்போதும் யூதர் எங்கும் இருந்து வந்து கூடுகிற ஆலயத்திலும் தெய்வாலயத்திலும் உபதேசித்தேன். அந்தரங்கத்திலே நான் ஒன்றும் பேசினதில்லை. நீர் என்னைக் கேட்பானேன். என்னிடத்தில் கேள்வியானவர்களை நான் அவர்களுக்கு என்ன சொன்னேன் என்று கேளும். இதோ, நான் பேசினவைகளை இவர்கள் அறிந்திருக்கிருர்கள் என்ருர். இவைகளை அவர் சொன்னபோது, வேலைக்காரரில் அண்டையிலே நிற்கிற ஒருவன்: இப்படியோ பிரதான ஆசாரியனுக்கு உத்தரவு சொல்லுகிருய் என்று இயேசுவை ஒரு அறைபோட்டான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஆகாதபடி சொன்னே

னுல் ஆகாததை ஒப்புவி, நிதானமாய்ச் சொன்னேனே யாகில் என்னை ஏன் அடிக்கிருய் என்ருர். யோவான் 18, 19-23.

---

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கவந்த இந்த ஆட்டுக்குட்டி பலிக்கு ஏற்றதோ என்று பார்ப் பதற்கு அதிகாரம் பெற்றவர்களாகிய ஆசாரியர்கள் முன் அது கொண்டுபோகப் படுகிறதைப் பார், ஆத் துமாவே. ஆகாத பாவியாகிய அன்னுவுக்கு முன் நமது அன்புள்ள ஆண்டவர் நிற்கிருர்.

சகல வேதபோதகங்களின் சாரமும், சகல போ தகரின் கிரீடமுமானவரிடத்தில், அவருடைய சீஷ ரையும் போதகத்தையுங் குறித்து அன்னு கேட்கத் துணிந்தான். வீட்டிலும் வெளியிலும், சலத்திலும் தரையிலும், வனத்திலும் சனத்திலும் புத்தி போத கஞ் செய்த உத்தம தீர்க்கதரிசியை, அந்தரங்கத்தில் ஆகாமியங்களைப் போதித்து, விஷச் சொற்களால் ஆத்துமாக்களை மிகவுங் கெடுக்கிற கள்ளப் போதக ரென்று தீர்க்க நோக்கங் கொண்டானே பாவி.

என் ஆண்டவர் கொடுத்த அருமை மறுமொழி அவனை அதிரச்செய்தது. அவர் போதகங்களைக்கேட் டது பூலோகமல்லவோ. அவர் சிறந்த சொற்களைக் கேட்டது தெய்வாலயமல்லவோ. அவர் ஆனந்த மொழிகளைக் கேட்டது ஆலயங்களல்லவோ. இரட்ச கரிடத்தில் கேள்வியானவர்கள் கிட்ட நிற்க இல்லை யோ. இந்த மனிதனைப் போல் ஒருத்தனும் ஒருக்கா லும் பேசினதில்லை என்று (யோவா. 7, 46) திடுக் கிட்டுச் சொன்ன சேவகரில் ஒருவனும் அங்கில்லை யோ. ஆ, மனுஷனே, நீ பராபரனுடைய திருவசனத் தைக் கேட்டிருந்தும் அதன் சுகிர்த பலன்களை ருசித் திருந்தும் உன் இரட்சகருக்குச் சாட்சி கொடுக்கப்

பின்வாங்குவது சரியா. வாய் திறக்கவேண்டிய நேரத்தில் நீ மௌனமாயிருப்பது நியாயமா.

இயேசு சுவாமி அன்னாவுக்கு உரைத்த நியாயமான மறுமொழிக்கு வந்த பலன் என்ன. துஷ்டன் ஒருவன் அவருடைய திரு முகத்தில் ஒரு அறை போடலாயிற்று. ஆகாத லோகமே, இதுவே உன் தொழில்; நன்மைக்குத் தீமை செய்வதும், அன்பருக்குத் துன்பம் வருவிப்பதும் உன் சுபாவம். ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு என்று கர்த்தர் மலைப் பிரசங்கத்தில் சொன்னார். அவரை விசுவாசிக்கிற நானோ மறுகன்னத்தை மாத்திரமல்ல, என் இரட்சகரைப்போல் முழு தேகத்தையும் பாடுகளுக்கு ஒப்புக்கொடுப்பேன். நான் பிறருக்குப் புத்தி சொல்ல என் வாயைத் திறப்பேனேயன்றி பழிவாங்கவே மாட்டேன்.

தமது தீர்க்கதரிசிகளில் ஒருவனுக்கு விரோதமாய் நீட்டின கையை முடக்கக் கூடாமற் பண்ணின வல்லபத்தை (1 இராசா. 13, 4) இப்போது அவர் கையாடாமற் போனதென்ன. அவர் லோகத்தை நியாயந்தீர்க்க அல்ல, என்னை நியாயத் தீர்ப்புக்குத் தப்புவிக்க வந்த அவர் நேசமேயன்றி வேறு காரணத்தைக் காணேன்.

## செபம்.

சாந்த குணமுள்ள இயேசுநாதரே, தேவரீர் எனக்காக அடிகளையும் நிந்தைகளையும் பொறுமையாய்ச் சகித்தீரே. அசத்தியமும் வீண்மொழிகளும் பேசுகிற எனக்காகச் சத்திய வாசகராகிய நீர் அடிக்கப்பட்டீரே. நான் உமது மாதிரியைப் பின்பற்றி,

என்னை நிந்தித்துத் துன்பப் படுத்துகிறவர்களிடத்தில் வர்மஞ் சாதிக்காமலிருக்க, உம்முடைய சிந்தையை எனக்குத் தாரும். நான் பொய்யாய்க் குற்றஞ் சாட்டப்படும்போது என் குற்றமில்லாமையை வெளிப்படுத்தி என்னை ஆசீர்வதித்தருளும். உமது பாடுகளின் நிமித்தமாக என் செபத்தைக் கேட்டருளும் சுவாமி, ஆமேன்.

மகா உபாதிகளையே
பொறுமையாய்ச் சகித்தீர்,
தேவாட்டுக்குட்டி இயேசுவே,
நோவில் சாதாய்த் தரித்தீர்,
நான் படும்போது என்னையும்
பொறுமையாக்கியருளும்.

எல்லா இக்கட்டும் ஆபத்தும்
உபாதியும் வரட்டும்,
என்மேல் நிஸ்காரம் நிந்தையும்
அடிகளும் விழட்டும்,
ஆனால் ஓர் ஆட்டுக்குட்டிக்கே
நான் ஒப்பாகட்டும் இயேசுவே. (ப.ஞா. 52,1.4.)

---

## 14. வியாழக் கிழமை.

### காயிபாவின் விசாரணை.

என் துதியின் பராபரனே, மௌனமாயிராதேயும்; ஏனெனில் ஆகாதவனுடைய வாயும் கபட்டு வாயும் எனக்கு விரோதமாய்த் திறந்திருக்கிறது. கள்ள நாவினால் என்னோடே பேசுகிறார்கள். பகையான வார்த்தைகளால் என்னைச் சூழ்ந்துகொண்டு, முகாந்திரமில்லாமல் என்மேல் போரிடுகிறார்கள். என் சிநேகத்திற்குப் பதிலாக என்னை விரோதிக்கிறார்கள். சங். 109, 1-4.

அன்னுவோ அவரைப் பிரதான ஆசாரியனுன காயி பாவண்டைக்குக் கட்டுண்டவராக அனுப்பினுன். அங்கே சகல பிரதான ஆசாரியர்களும் மூப்பானவர்களும் வேத பாரகருங் கூடினுர்கள். பிரதான ஆசாரியரும் ஆலோசனைக் கூட்டம் அனைத்தும் இயேசுவைக் கொலைசெய்யும் படி அவருக்கு விரோதமாகச் சாட்சிதேடினுர்கள். ஆனுலும் அவர்களுக்கு அகப்பட்டதில்லை. ஏனெனில் அநேகர் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லியும், சாட்சிகள் சரிப்பட்டதில்லை. கடைசியிலோ, இரண்டு பொய்ச்சாட்சிகள் வந்து: கைவேலையான இந்தத் தேய் வாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையல்லாத வேறென்றை மூன்று நாளைக்குள் கட்டுவேன் என்று அவன் சொன்னதை நாங்கள் கேட்டோம் என்று பொய்ச் சாட்சி சொன்னுர்கள். இப்படியும் அவர்கள் சாட்சி சரிப் பட்டதில்லை. அப்போது பிரதான ஆசாரியன் எழுந்து, நடுவே நின்று, இயேசுவை: நீ உத்தரமொன்றுஞ் சொல் லாயோ, இவர்கள் உன்மேலே என்ன சாட்சி சொல்லு கிறுர்கள் என்று கேட்டான். அவரோவெனில், உத்தர மொன்றும் சொல்லாமல், மௌனமாயிருந்தார். அப் போது பிரதான ஆசாரியன் மறுவுத்தாரமாக அவரு டனே: நீ பராபரனுடைய சுதனுகிய கிறிஸ்துவாயிருக் கிறுயோ என்று எங்களுக்குச் சொல்ல சீவனுன பராபரன் பேரில் உன்னை ஆணையிட்டுக் கேட்கிறேன் என்றுன். இயேசு அவனுடனே: நீர் சொன்னபடியே நான் அவர் தான்; பின்னையும் உங்களுக்குச் சொல்லுகிறேன், இது முதற்கொண்டு மனுஷனுடைய குமாரனை வல்லமையின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருக்கவும், வானத்தின் மேகங்கள்மேல் வரவுங் காண்பீர்கள் என்றுர். அப்போது பிரதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டு: அவன் தேவ தூஷணஞ் சொன்னுன். இனிச் சாட்சிகள் நமக்குத் தேவையாயிருக்கிறதென்ன. இதோ, அவன் தூஷணிப்பை இப்போது கேட்டீர்களே, உங் களுக்கு என்னமாய்க் காணுகிறது என்றுன். அதற்கு அவர்கள்: மரணத்துக்கு ஏதுவாயிருக்கிறுன் என்று பிரத்

தியுத்தாரஞ் சொன்னார்கள். மத். 26, 57-66; மாற். 14, 53-64; லூக். 22, 54.

---

நமது ஆண்டவர் லாசருவை மரித்தோரிலிருந்து எழுப்பினபின் அநேகர் அவர்பேரில் விசுவாசித்ததால், பிரதான ஆசாரியர் முதலியவர்கள் அவர்பேரில் பொறாமையாகி, அது முதல் அவரைக் கொல்ல வகை தேடினார்கள். அவர்கள் தலைவனாகிய காயிபா: ஒரே மனுஷன் சனத்துக்குப் பதிலாக மடிந்துபோகிறது தாவிலை என்று இதன் நிமித்தமே சொன்னான். அன்புள்ள இரட்சகரைக் கொன்றுபோட அவர்களெல்லாரும் உள்ளாக ஏற்கனவே தீர்மானித்திருந்தும், இதோ, புறம்பாகவே விசாரணை வைக்கிறார்கள். ஏன் இந்த வேஷம், என்னத்துக்கு இந்த மாயம்.

ஐயையோ, ஓநாய்கள் நடுவே ஆட்டுக்குட்டி நிற்கிறது. இந்த ஓநாய்களெல்லாம் இந்த மாசற்ற ஆட்டுக்குட்டியை ஓநாயாக்கப் பார்க்கிறது. இதற்காக மூன்று வருஷமாய்ப் பிரயாசப்பட்டும், முடியாதே போயிற்று. சோதனைக் கேள்விகளெல்லாம் ஒரு தூசியளவாகிலும் அவரைக்கறைப்படுத்தக்கூடாமற்போயிற்று. ஆகையால் இப்போது பொய்ச் சாட்சிகளால் அவரைக் குற்றப்படுத்தப் பொய்காரப் பிசாசின் மக்கள் முயலுகிறார்கள். அவர்கள் முயற்சி கொஞ்சமாவது வாய்க்கவில்லை. ஆனால் கர்த்தர் தெய்வாலயமாகிய தம்மைக் குறித்துச் சொல்லியிருந்த திருமொழியை எருசலேம் தெய்வாலயத்தைக் குறித்துச் சொன்னதாகக் குற்றப்படுத்துகிறார்கள். தெய்வத்துவத்தின் சகல நிறைவும் மெய்யாகவே வாசமாயிருந்த உத்தம தெய்வாலயமாகிய அவரைக் கொலை

புரியத் துணிந்த பாதகர், கல்லும் மண்ணுமாகிய தெய்வாலயத்துக்குப் பத்திவைராக்கியஞ் சாதிப்பது எத்தனை ஆச்சரியம். கர்த்தர் எருசலேம் தெய்வாலயத்தை இடிப்பதாகச் சொன்னார் என்பதை அவர்கள் ரூபிக்கக் கூடாதிருந்தும், அவர்கள் இடிக்கும் தெய்வாலயத்தைத் தாம் மூன்றுநாளில் எழுப்புவதாகத் தாம் சொன்னதைக் கர்த்தர் நிறைவேற்றி, அவர்கள் பொய்யர் என்றும் தாம் சத்தியவாசகர் என்றும் ரூபித்தாரல்லவோ.

பாதகர் நடுவே நிற்கும் நமதன்பர் பரிசுத்தமும் மிகையற்றதுமான ஆட்டுக்குட்டியாக விளங்குவதுடன், அவர் உன்னத பராபரனுடைய சுதனாகிய தெய்வ ஆட்டுக் குட்டியாகவும் அவருடைய சத்திய வாக்கால் விளங்குகிறார். காயிபாவே, நீ எங்கள் ஆண்டவரைக் குற்றப்படுத்த வேண்டுமென்கிற துர் நோக்கமாய் அவரை ஆணையிட்டுக் கேட்ட கேள்வி உனக்கு ஆபத்தும், எனக்கு ஆனந்தமுமான மறுமொழியைக் கொண்டுவந்ததற்காகச் சந்தோஷப்படுகிறேன். இது பிதாவாகிய பராபரனுடைய தற்சுபாவத்தின் அச்சாகிய குமாரனின் தெய்வீக மகிமையைக் காண்பிக்கிறதல்லவோ. நமக்காகப் பாடுபடுகிறவர் பராபரனுடைய குமாரனாகிய பராபரன். அவர் சிந்தின இரத்தம் பராபரனுடைய சுயரத்தம் (அப். 20, 28). ஆகையால் அது எல்லாப் பாவமும் நீங்க நம்மைச் சுத்திகரிக்கக் கூடியதும் விலைமதிக்கக் கூடாததுமான இரத்தம். மேலும், இவரே தானியேல் 7, 13-ல் உரைக்கப்பட்ட மனுஷ குமாரன். இப்போது அவர் பாடுகளுக்கும் நிர்ப்பந்தத்துக்கும் உள்ளானவராயிருந்தும், இதன் வழியாக அவர் மகிமைக்குள் பிரவேசித்து, சர்வலோகத்தையும் நியா

யந்தீர்க்கும் அதிகாரமும் வல்லமையும் உள்ளவராய்த் திரும்பி வருவார். அவர் வருகையைக் கர்த்தருடைய சத்துருக்களாகிய காயிபா முதலிய யாவரும் காண்பார்கள். ஆத்துமாவே, கிறிஸ்துவின் வருகை உனக்கு ஆபத்தா யிருக்குமோ, ஆறுதலாயிருக்குமோ.

பிரதான ஆசிரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக் கொண்டான். கள்ள வைராக்கியத்தினாலும், வேஷப் பத்தியினாலும் அவன் செய்த இந்தக்காரியம் அவனுடைய ஆசாரியப்பட்டம் ஒழிவதற்கான காலமும் நேரமும் வந்துவிட்டதென்று குறிப்பாய்க் காண்பிக்கிறதல்லவோ.

அவனும் அவனோடிருந்தவர்களும் கர்த்தரைத் தெய்வ தூஷணக்காரனென்றும், மரணத்துக்கு ஏதுவானவன் என்றும் அநியாயமாய்த் தீர்த்தார்கள். இப்படியாக இயேசுநாதர் தாம் பராபரனுடையசுதன் என்று சொன்னதின் நிமித்தமும், பராபரனுடைய பரிசுத்த சுதனாகவும் அநியாயமாய்ப் பாடுபட்டது பராபரனுடைய நியாயப்பிரமாணத்தை மீறி அளவில்லாத தேவ கோபாக்கினைக்குப் பாத்திரரான குற்றவாளிகளாகிய நமக்கு எத்தனை ஆறுதல்.

## செபம்.

நேசமுள்ள கர்த்தராகிய இயேசுவே, என் சீவ நாயகரே, தேவரீர் என் நிமித்தமாகப் பிரதான ஆசாரியனுக்கு முன் நின்று மரணத்துக்குப் பாத்திரராய் எண்ணப்பட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். தேவரீர் யூத சங்கத்துக்குமுன் செய்த நல் அறிக்கையானது என் விசுவாசத்துக்கு ஆதாரமும் எனக்கு இம்மையிலும் மறுமையிலும் மகா ஆறுதலைக்

கொடுப்பதுமா யிருக்கிறது. மாசற்ற ஆட்டுக்குட்டியே, தேவரீர் திருவுளம் பற்றின சத்திய வாக்கின் நிமித்தம் மரணத்துக்குப் பாத்திரராகத் தீர்க்கப் பட்டது என்னை நித்திய மரணத்துக்கு நீங்கலாக்கும் வழி ஆயிற்று. ஆ, என் இரட்சிப்பின் கன்மலையே, என் மரணநேரத்திலும் கடைசி நியாயத்தீர்ப்பிலும் என்னை நித்திய சீவனுக்குப் பாத்திரனாகத் தீர்க்கும் உம்முடைய திருவாக்கை நான் கேட்கும் படிக்கு எனக்குக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

பிதாவுட ஒன்றான
சேயா, அவருட
தற்சுபாவ அச்சுமான
அநாதி சூரியா,
வானோர் அனைவராலும்
பணியப்பட்டன்பாலும்
நிறைந்த கிறிஸ்துவே.

எல்லாத்தையுஞ் சிஷ்டித்த
பிதாவின் சத்தியே,
நராட்களை ரட்சித்த
தெய்வீக மீட்பரே,
உம்மோடே ஐக்யமாக
நீர் எங்களை நன்றாக
திருப்பும், இயேசுவே. (33, 1. 4.)

---

## 15. வெள்ளிக் கிழமை.

### வேலைக்காரரின் பரிகாசம்.

நம்முடைய தாடைகளை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு ஒப்புக்கொடுத்தோம். நம்முடைய முகத்தை அவமானங்களுக்கும் உமிழ் நீருக்கும் மறையோம். எசா. 50, 6.

அப்போது சிலர் அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள். அவரைப் பிடித்துக்கொண்டிருந்த மனுஷர் அவரைப் பரிகாசம் பண்ணி, அடித்து, அவரை முக்காடிட்டு, அவரை முகத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் ஆர் என்று ஞான திருஷ்டியால் எங்களுக்குச் சொல்லும் என்று அவரைக் கேட்டு, வேறே அநேகங்களை அவருக்குத் தூஷணமாகச் சொன்னார்கள். மத். 26, 67. 68; மாற். 14, 65; லூக். 22, 63-65.

---

காயிபாவும் மற்றச் சங்கத்தாரும் சற்று இளைப்பாறப் போகிறார்கள். நமக்காகப் பிணைப்பட்ட இரட்சகருக்கோ இளைப்பாற்றி இல்லை. யாவனொருவன் பரிதாபப் படுவானோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை; தேற்றரவு பண்ணுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், யாரையுங் காணேன் (சங். 69, 21) என்ற தீர்க்கதரிசன வாக்கியம் சரியாய் நிறைவேறிற்று.

ஆ, பரிசுத்த முகமே, பரிசுத்த மலையில் சூரியனைப்போல் பிரகாசித்த (மத். 17) மகிமையுள்ள முகமே, பரிசுத்த சேராபீன்களின் முகத்தை இரு செட்டைகளால் மூடிக்கொள்ளப் பண்ணும் மாட்சிமைதங்கிய முகமே, நீ உணர்ச்சியற்ற மண் தரையைப் போலவும், கற்பாறையைப் போலவும் பாவிக்கப்படவும், அசுத்த பாவிகளின் நாற்ற உமிழ்நீரால் நீ கறைப்படவுமாயிற்றே. பாவிகளாகிய நாங்கள் சூரியனைப்போலவும் சந்திரனைப்போலவும் நட்சத்திரங்களைப்போலவும் மோட்ச ராச்சியத்தில் பிரகாசிக்கும்படிக்கோ இப்படி ஆனாய் (மத். 13, 43; 1 கொரி. 15,41.42). கிறிஸ்தவனே, உன் இருதயத்தில் கர்த்தர் வாசம்பண்ணுகிறாரே. நீ எத்தனை விசை

அசுத்த நினைவுகளுக்கும் அசுத்தப்பேச்சுகளுக்கும் உன்னில் இடங்கொடுக்கிறாயோ அத்தனைவிசையும் அவர் முகத்தில் நீ துப்புகிறாய். நாம் கையினால் செய்யும் பாவங்கள் எல்லாம் அவருக்குக் குட்டும் அறையும் அடியுமல்லவோ. நமது மாய்மால செபங்களெல்லாம் அவரைப் பரிகாசம் பண்ணுகிறதற்குச் சரியல்லவோ. இதை நன்றாய் உணர்ந்துபார், ஆத்துமாவே.

இயேசுநாதர் மோசேயினால் முன் குறிக்கப்பட்டவரும் முன்னுரைக்கப் பட்டவருமான (5 மோ. 18, 18) உத்தம தீர்க்கதரிசி என்று அவருடைய திருவாக்கும் பலத்த கிரியைகளும் வெளிப்படுத்தியிருந்தும், அவருடைய சத்துருக்கள், அவருடைய தீர்க்கதரிசி உத்தியோகத்தை நிந்தித்துப் பரிகாசம் பண்ணி, அவரை முக்காடிட்டு அவரை முகத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் ஆர் என்று ஞானதிருஷ்டியாலே எங்களுக்குச் சொல்லுமென்று அவரைக் கேட்டார்கள். மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது அவர்கள் இருதயத்தின்மேல் மூடியிருக்கிற முக்காடு (2 கொரி. 3, 15) எடுபட்டுப் போகும்படிக்கும், பராபரனுடைய திருவசனத்தையும் சித்தத்தையும் அறிந்துகொள்ளக் கூடாமல் நம்மெல்லாருடைய கண்களையும் மறைத்துக் கொண்டிருக்கும் நமது சுபாவ அறிவீனமாகிய முக்காட்டை விலக்கும்படிக்கும் நமது இரட்சகர் இந்த நிந்தையைச் சகித்தார்.

ஆ, அவருடைய பொறுமையே பொறுமை. அவர் மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமற்றிருக்கிற ஆட்டைப்போல் யாவையும் சகித்து: நம்முடைய தாடைகளை மயிரைப் பிடுங்குகிறவர்க

ளுக்கு ஒப்புக்கொடுத்தோம். நம்முடைய முகத்தை அவமானங்களுக்கும் உமிழ் நீருக்கும் மறையோம் (எசா. 50, 6) என்று தீர்க்கதரிசியைக் கொண்டு முன்னுரைத்ததை நிறைவேற்றினர். பாவியே, உனக்கு நியாயமானபடியே வருகிற பாடுகளைச் சகிப்பதில் நீ பொறுமையற்றிருப்பது சரியோ. மேலும், இங்கே லோகத்தார் கிறிஸ்துவுக்கு நடப்பித்தது அவருடைய தாசருக்கு எக்காலத்திலும் உண்டாகுந் துன்பத்துக்குக் குறிப்பு என்றறிந்துகொள், விசுவாசியே. எசாயா: வாயை விஸ்தாரமாய்த் திறந்து, நாக்கை அளாவுகிற துரோகிகளைக்குறித்தும் (57,4), எசேக்கியேல்: தங்கள் வாயினால்இன்பமாய்ப்பேசியும் இருதயம் வேருயிருக்கிற மாயக்காரரைக் குறித்தும் (33, 31) முறையிடுகிறது மெய்தானே. அப்படியே கிறிஸ்துவின் அப்போஸ்தலமாரை லோகமக்கள் எத்தனையாய்த் துன்பப்படுத்தினர்கள் (அப். 5,40; 22, 2 மு). தற்காலத்திலும் உண்மையாய்ப் பராபரனுடைய வழிகளைப்போதிக்கிற போதகரை உலகம் எவ்வளவாய்ப் பகைக்கிறது. இதன் நிமித்தந்தான் இயேசுநாதர்: லோகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப் படாதேயுங்கள், அது உங்களுக்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள் என்றுசொன்னர். ஆகையால் அவரே தமது பிள்ளைகளுக்கு லோகம் வருவிக்கும் சகல துன்பங்களிலும் அவர்கள் பொறுமையாய் நிலைத்திருக்கும்படி பலன் கொடுப்பார்.

## செபம்.

சகல மகிமைக்கும் பாத்திரராகிய தேவகுமாரனே, தேவரீர் என் நிமித்தமாக நிந்தை, தூஷணம், குட்டு, துப்புதல் முதலிய சொல்லி முடியக்கூடாத பாடுகளைப் பட்டனுபவித்ததற்காக உம்முடைய திரு

நாமத்துக்கு ஸ்தோத்திரம். நான் என் மனதின் ஆகாமியத்தினாலும் அசுத்தப் பேச்சினாலும் துஷ்ட நடக்கையினாலும் உம்மை எத்தனை விசை பாடுபடுத்தியிருக்கிறேன். என் பாவத்தைக் கிருபையாய் மன்னித்தருளும். உலகம் உமது தீர்க்கதரிசன உத்தியோகத்தை எத்தனையாய் அவமதித்தாலும், உமது கிருபையினாலே உமக்குத் தாசனாய்ப்போன நான் சகல மெஞ்ஞானத்தையும் அறிவையும் உம்மால்தான் அடைவேன் என்று நம்பி, உமது பாதபடியைப் பிடித்துக்கொண்டேன். தேவரீர் உமது திருச்சித்தத்தை மென்மேலும் எனக்குத் தெளிவாக்கி, நான் உமது மகிமையைப் பிரசித்தப்படுத்தக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

நீர் சாந்தத்தோடும் பட்டு,
பொல்லார்மேல் கோபமற்று,
எல்லா அஞ்ஞாயமும்
சகித்ததை நான் நோக்கி,
என் பேய்க்குணததைப் போக்கி,
தெய்வீக சாந்தமாகவும்.

துன் நாக்குகள் வைதாலும்,
என்மேல் மிகை சொன்னாலும்,
நான் சாதைப் பூணுவேன்.
அஞ்ஞாயத்தைச் சகித்து,
நல்மனதாய் மன்னித்து,
பகைஞர் மேல் இரங்குவேன். (51, 13. 14.)

---

## 16. சனிக் கிழமை.

### பேதுருவின் மறுதலிப்பும் மனந் திரும்புதலும்.

என் சகோதரருக்கு வேற்று மனுஷனும், என் தாயின் பிள்ளைகளுக்கு அந்நியனுமானேன். சங். 69, 9.

பேதுரு அரண்மனையில் வெளியே உட்கார்ந்திருந்தான். அப்போது வாசல்காக்கிற வேலைக்காரி வந்து, குளிர் காய்ந்து கொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும் அவனோடிருந்தான் என்று சொல்லி, அவனண்டை வந்து: நீயும் நாசரேத்தானாகிய இயேசுவுடனே கூட இருந்தாய் என்றாள். அவனோ எல்லாருக்கும் முன்பாக மறுதலித்து: அறியேன், நீ சொல்லுகிறது எனககுத் தெரிகிறதும் இல்லை என்று சொல்லி, வெளியே முகப்பிலே புறப்பட்டுப் போனான். அப்போது சேவல் கூவிற்று. வேலைக்காரி அவனை மறுபடியும் கண்டு, அண்டையில் நிற்கிறவர்களுடனே: இவன் அவர்களில் ஒருவன் என்றாள். அவன் முற்றத்திலே புறப்பட்டபின் வேறொருத்தி அவனைக் கண்டு, அங்கே இருநதவர்களுடனே: இவனும் நாசரேத்தானாகிய இயேசுவுடனே கூட இருந்தான் என்றாள். ஆனால் பேதுரு குளிர்காய்ந்து நின்றான். அப்போது அவனுடனே: நீயும் அவருடைய சீஷரில் ஒருவனல்லவோ என்றார்கள். அவன் மீண்டும்: மனுஷனே, நான் அல்ல என்றம், அந்த மனுஷனை அறியேன் என்றும் ஆணையிட்டு மறுதலித்தான். ஏறக்குறைய ஒரு மணித்தியாலத்துக்குப் பிற்பாடு, அங்கே நின்றவர்கள் சேர்ந்து வந்து மறுபடியும் பேதுருவுடனே: மெய்யாக நீயும் அவர்களில் ஒருவன். ஏனெனில் நீ கலிலேயன்; உன் பேச்சும் அதற்கு ஒத்திருந்து உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள். பிரதான ஆசாரியனுடைய ஊழியக்காரரில் பேதுரு காதற வெட்டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன்: மெய்யாய் இவனும் அவனோடே இருந்தான், ஏனெனில் கலிலேயனாயிருக்கிறான் என்று திடப்படுத்தி, அவனுடனே: நான் உன்னை அவனோடே கூடத் தோட்டத்திலே கண்டதில்லையோ என்றான். அப்போது பேதுரு மறுபடியும் மறுதலித்து: நீங்கள் சொல்லுகிற இந்த மனுஷனை அறியேன் என்று சபித்துக்கொள்ளவும் ஆணையிடவுந் துவக்கினான். உடனே அவன் இன்னம் பேசுகையில் சேவல் இரண்டாந்தரங் கூவிற்று. அப்போது கர்த்தர் திரும்பிப் பேதுருவை நோக்கிப் பார்த்தார்.

ஆனால் பேதுரு சேவல் இரண்டுதரம் கூவுகிறதற்கு முன்னே மூன்றுதரம் என்னை மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னோடே சொல்லியிருந்தவார்த்தையை நினைவுகூர்ந்து, வெளியே புறப்பட்டு, மனங்கசந்து அழுதான். மத். 26, 55. 69-75; மாற். 14, 66-73; லூக். 22, 54-62; யோவா. 18, 16-18. 25-27.

---

ஐயோ, இதென்ன காட்சி. என் அன்புள்ள கர்த்தரைச் சீவனுள்ள பராபரனுடைய குமாரன் என்று அறிக்கையிட்ட வாயானது, அவரை: அந்த மனுஷன் என்று சொல்வதென்ன. நாங்கள் அறிந்திருக்கிறோம் என்று சொன்ன வாயானது: அறியேன் என்று மொழிவதென்ன. உம்மோடு கூடக் காவலிலுஞ் சாவிலும் போகிறதற்கு ஆயத்தமாய் இருக்கிறேன் என்று மொழிந்த வாயானது தன்னைச் சபித்துக் கொள்ளவும், ஆணையிடவும் துணிந்தது என்ன. முன்னொருவிசை தண்ணீரின்மேல் நடக்கத் துணிந்து, அற்ப விசுவாசத்தினாலும் சந்தேகத்தினாலும் தண்ணீரில் அமிழ்ந்தத் துவக்கின பேதுருஎன்ற மலையப்பன் இப்போது சுய பலத்தை நம்பும் நம்பிக்கையினாலே நிலைதவறினான். பேதுரு அப்போஸ்தலனுக்கு இப்படியானால், நீ எம்மாத்திரம். சகோதரா, உன் சுய பலத்தை நம்பாதே.

நீ இப்போது என்னைப் பின்செல்லக் கூடாது என்று உரைத்த திருவாய் மொழிக்கு எதிர்வாய் திறந்து தனக்கு உரைக்கப்பட்ட புத்திமதியை மறந்ததினாலல்லவோ பேதுரு இப்பயங்கர பாவத்துக்கு உள்ளாக நேரிட்டது. ஆ, என் ஆத்துமாவே, உன் கால்களுக்குத் தீபமும் உன் பாதைக்கு வெளிச்சமுமான தேவவசனத்தை நீ மறந்தால், நீ அந்தகாரத்

தில் நடந்து, இடறிவிழுவா யென்பதற்கு ஐயமில்லை. மனுஷனே, நீ எத்தனை விசை உன் சுயவழிகளில் நடந்து கேட்டுக்காளானாய்.

முன்னே தண்ணீரில் அமிழ்ந்த பேதுருவை இயேசு கை நீட்டித் தூக்கினதுபோல், இப்போதும் பாவத்தில் அமிழ்ந்திப்போன அவனைத் தமது கிருபையின் கரத்தால் தூக்கினார். ஆகையால், பாவியே, நீ உன்னைத்தானே இரட்சிக்க அசக்தனென்று அறி. கருணாகரப்பொருள் உன்னைக் கண்ணோக்கிக் கைதூக்கினாலன்றி உனக்கு மீட்பில்லை. அவருடைய இலவசமான கிருபையே உன் இரட்சிப்புக்கு ஆதாரம். பேதுருவுக்குச் செய்தாப்போல் உன்மேல் வைத்த தம்முடைய கண்ணினால் உனக்கு ஆலோசனை கொடுக்கிற உன் பரமபிதா (சங். 32, 8) உன்னைத் தமது திருவசனத்தின் வழியாய் நோக்கிப் பார்க்கிறார். அதைச் சற்றே கவனி. அது பாவத்தை முழுப்பகையாய்ப் பகைக்கும் பரிசுத்த பார்வை. ஆ, அது இரக்கமுள்ள கர்த்தரின் உருக்கமான பார்வை. நேசமுள்ள தாயானவள் வியாதிப்பட்டுக் கிடக்கும் தன் பிள்ளையை நோக்கிப் பார்ப்பதுபோல் இயேசுநாதர் பாவப் பிணியாளியைக் கண்ணோக்கிப் பார்க்கிறார்.

சாவல் கூவுதலும், இயேசுவின் பார்வையும், கர்த்தரின் எச்சரிப்பு மொழியையும் பேதுருவின் நிர்ப்பந்த நிலைமையையும் நினைப்பூட்டிற்று. நியாயப் பிரமாணமாகிய சேவல் நீ இருக்கும் மோச நிலைமையை உனக்கு எச்சரிப்பாய் நினைப்பூட்டுவதாக. உன் பாவக் கெடுதியை அறிந்தபின் நீ அதில் தரித்திருப்பது சரியா. கிறிஸ்தவனே, நீ ஆகாதவர்களின் கூட்டத்தையும் ஆகாமியத்தையும் விலகி ஓடு. உன் இருதயம் பிளந்து மெய்மனஸ்தாபக் கண்ணீர் அதி

விருந்து ஓடிவந்தால் தாவிளே. என் அருமை ரட்சகா, என் கல்நெஞ்சைப் பிளந்தருளுமேன். என் தலை தண்ணீரும், என் கண்கள் கண்ணீரூற்றுமானால் தாவிளே (எரே. 9, 1).

இயேசுவின் பார்வை பாவத்தைப் பறக்கடிக்கும் பலமுள்ள பார்வை. கர்த்தர் பேதுருவின் பாவத்தை மன்னித்துத் தமது உயிர்த்தெழுதலின் செய்தியால் அவனைத் தேற்றினார். சத்துருக்கள் நடுவே வீரதீரமாகத் தமது நாமத்தை அறிக்கை பண்ணப் பலமளித்தார். அவருடைய கிருபை இன்னும் குறைந்துபோகவில்லை. கெட்ட குமாரன் எப்போது திரும்பிவருவான் என்று காத்துக்கொண்டிருந்த தகப்பனைப்போல், நீ மனந்திரும்பி வருகையில் உன்னைக் கட்டியணைத்து முத்திசெய்ய அவர் தமது இரு கைகளையும் விரித்துக் கொண்டிருக்கிறார். ஆகையால், பாவியே, நீ இப்போதே குணப்பட்டு ஓடிவா. தாமதியாதே. மன்னிப்பில் பெருத்திருக்கிற கர்த்தர் உனக்காகக் காத்திருக்கிறார்.

## செபம்.

கிருபையுள்ள இரட்சகரே, நான் பாவத்தினாலே தேவரீருடைய ஐக்கியத்துக்குத் தூரமாய்ப் போனவனாயிருந்தாலும், தேவரீர் என்னைக் கிருபையாய் நோக்கிப் பார்த்து, கெட்டுப்போன ஆட்டுக்கு ஒப்பாயிருக்கிற என்னை உமது திருமந்தையில் சேர்த்தருளும். உமது சத்துருக்கள் உமக்கு உண்டாக்கின சரீரநோவைப் பார்க்கிலும் உமது சீஷனென்று பெயரை உடைய நான் என பாவத்தினால் உமக்கு உண்டாக்கும் மனநோவு அதிகமென்று அறிக்கையிடுகிறேன். கர்த்தாவே, என்னை நோக்கிப்பாரும். ஆண்டவரே, என்னைத் திருப்பி

யருளும், அப்போது நான் திரும்புவேன். என் பாவங்கள் இரத்தாம்பரத்தைப்போல் சிவப்பாயிருந்தாலும், தேவரீருடைய திருப்பாடுகளின் புண்ணியத்தால் என்னை உறைந்த மழையிலும் வெண்மையாக்கியருளும். நான் இனிமேல் பாவத்தை அருவருக்கவும், தேவரீருக்கு மனஸ்தாப முண்டாக்கும் யாவையும் விலக்கி நடக்கவும் எனக்குக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

மறுதலித்த பேதுருவை
திரும்பவுந் தாம் கைவிடாமல்
கண்ணோக்கினாரே, இத்தயை
அப்போது மாத்திரஞ் செய்யாமல்,
எப்போதும் அவர் சற்குணர்,
இரக்கம் அன்புமுள்ளவர்.
முன் பாவிக்கிங்கே தாழ்விடத்தில்
இரக்கஞ் செய்தோர் உன்னதத்தில்
உயர்ந்தபின் வேறாயிரார்.
கெட்டோரை இயேசு சேர்க்கிறார். (175, 6.)

---

ஒருசந்தியின் மூன்றும் ஞாயிறு.

நிரு. எபே. 5, 1-9. சுவி. லூக். 11, 14-28.

---

## 17. திங்கள் கிழமை.

### ஆலோசனைச் சங்கத் தீர்ப்பு.

நமது சனமே, உனக்கென்ன செய்தோம். அல்லது எதினால் உன்னை விதனப்படுத்தினோம். நமக்கு எதிரே உத்தரவு சொல். மீகா. 6, 3.

பொழுது விடிந்தபோது, சனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூட்டங் கூடி, தங்கள்

ஆலோசனைச்சங்கத்தில் அவரைக்கொண்டுவந்து நிறுத்தி: நீ கிறிஸ்துவாயிருக்கிறாயோ என்று எங்களுக்குச் சொல் என்றார்கள். அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பீர்கள்; நான் கேட்டாலும், எனக்கு உத்தரஞ் சொல்லீர்கள்; என்னை விடுதலையும் பண்ணீர்கள். இதுமுதல் மனுஷனுடைய குமாரன் பராபரனுடைய வல்லமையின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்திருப்பார் என்றார். அப்போது எல்லாரும்: ஆகையால் நீ பராபரனுடைய குமாரனோ என்று கேட்டார்கள். அவர் இவர்களுடனே: நீங்கள் சொல்லுகிறபடி நான் அவர்தான் என்றார். அவர்களோ: இனி நமக்குச் சாட்சி தேவையென்ன, நாமே அவன் வாயினால் கேட்டோமே என்றார்கள். அப்போது சகல பிரதான ஆசாரியர்களும், சனத்தின் மூப்பரும், வேதபாரகரும், ஆலோசனைச் சபை அனைத்துமாய் இயேசுவைக் கொலை செய்யும்படி அவருக்கு விரோதமாய் யோசனை பண்ணினார்கள். மத். 27, 1; மாற். 15, 1; லூக். 22, 66-71.

---

யூதருடைய ஆலோசனைச் சங்கம் திரும்பவுங் கூடி வருகிறது, பார். அவர்கள் தங்களிடத்தில் வந்த மேசியாவைச் சங்கரித்து, அவரை இராதே போகப்பண்ணும் மட்டும் (தானி. 9, 26) அவர்களுக்கு இளைப்பாற்றி இல்லை. வெளிச்சத்தின் பிள்ளைகள் நற்கிரியைகளை நடப்பிப்பதிலும், இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் துர்க்கிரியைகளை நடப்பிப்பதில் எத்தனை சாக்கிரதையாயிருக்கிறார்கள். அப்சலோம் தன் தகப்பனைத் துன்பப்படுத்துவதிலும், அகித்தோபேல் சதியோசனை கொடுப்பதிலும், ஏசபேல் நாபோத்தைக் கொல்வதிலும் எத்தனை சாக்கிரதை. கர்த்தருடைய சீஷர்கள் அயர்ந்து கிடக்கையில் யூத சங்கத்தார் எத்தனை விழிப்பாயிருக்கிறார்கள்.

அவர்கள் நமது கர்த்தரைத் தங்கள் முன் நிறுத்தி: நீ கிறிஸ்துவாயிருக்கிறுயோ என்று எங்களுக்குச் சொல் என்று முன்கேட்ட கேள்வியைத் திரும்பவுங் கேட்டபோது, அவர் தமது திருவாயைத் திறந்து அவர்களுக்குப் புத்தி புகட்டலானுர். ஆ, நமது கர்த்தர் பேசாதிருக்கையில் ஆடும், பேசும்போது மேய்ப்பனுமாய் விளங்குகிறதைக் கவனி. அவர் தமது சனத்தின் தலைவர்களுக்குச் செய்யுங் கடைசிப் பிரசங்கத்தை உற்றுக்கேள்.

அவர் முந்த ஆவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக் கடினத்தையும் சுட்டிக் காண்பிக்கிறுர். கர்த்தருடைய திருவசனத்தை நம்பாமையும் உன் நிலைமையைக் கர்த்தருக்கு அறிக்கை யிடாமையும் எத்தனை கேட்டுக்கு நடத்துகிறது. இதுதானே, இரட்சகரை விடுதலை பண்ணுமல் துணிகரமாய்க் கொலைசெய்த யூதரைப்போல் நாமும் துணிகரப் பாவங்களைச்செய்ய நம்மை ஏவுகிறது. ஆ, இயேசுவே, உமது திருவசனத்தை நம்பவும், என்னை உமக்கு முற்றிலும் ஒப்புக்கொடுத்து உமக்கு ஏற்றதைச் செய்யவும் எனக்குத் துணை செய்தருளும்.

இரட்சகர் தம்மைக் குறித்துப் பகருஞ் சாட்சியையுங் கவனி, ஆத்துமாவே. இதோ, பாடுபடுகிற மனுஷகுமாரன் எப்போதும் தாழ்ந்த நிலைமையில் இருக்கமாட்டார். அவர் மகிமைக்குள் பிரவேசிக்குங் காலமும் உண்டு. கர்த்தர் என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதங்களுக்குப் படியாகப் போடுமட்டும் நம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும் என்றுர் என்று சங்கீதக்காரன் (110, 1) முன்னறிவித்தது அவரிடத்தில் நிறைவேறும். அப்போது இயேசு என்கிற நாமத்துக்கு

வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவருடைய முழங்கால்களும் அவசியம் முடங்கும். நாவு யாவும் அவரைக் கர்த்தர் என்று அறிக்கைபண்ணும் (பிலி. 2, 8). இப்போது அவர் நேச வார்த்தைக்குக் கீழமையாதோர் அவருடைய வல்லமையின் வார்த்தையால் நாசமாகும் வேளை காத்திருக்கிறது என்பதாக யூதசங்கத்தாருக்குத் தெரிவிக்கிறார். யூதர்களே, இனி உங்களுக்குப் போக்கு இல்லை. நீங்கள் அறியவேண்டிய சத்தியத்தைக் கர்த்தர் உங்கள் தலைவர்களுக்குத் திடச் சாட்சியாய்த் தெரிவித்துப் போட்டார்.

ஆகையால், நீ பராபரனுடைய குமாரனோ என்று அவர்கள் கேட்க, சத்தியவாசகர் தாம் சொல்லும் மறுமொழியால் தமக்குப் பொல்லாப்பு வரும் என்று அறிந்திருந்தும்: நீங்கள் சொல்லுகிறபடி நானே என்று சொல்லி, சத்தியத்துக்குச் சாட்சி கொடுத்தார். இந்தச் சாட்சியத்தால் ஆறுதல் அடையுங் கிறிஸ்தவனே, நீ உன்னிலுள்ள நம்பிக்கையைக் குறித்து உன்னை உத்தரவு கேட்கிறவனுக்கெல்லாம் மெத்தனவோடும் பயத்தோடும் ஆன உத்தரவு சொல்ல (1 பேது. 3, 15) எப்போதும் ஆயத்தமாயிரு.

ஐயையோ, குற்றமில்லாத இரத்தத்தைச்சிந்திக் கொலைபுரியத் தீர்மானித்தார்கள். பாவியே, நீ தப்ப உன் கர்த்தர் தீர்ப்பைப் பெற்றார். நித்திய மரணத்துக்கு நீ விலக்கமாக நித்திய பிதா கொலைத்தீர்ப்பு பெற்றார். ஆ, யூதசங்கத்தாரே, நீங்கள் உங்கள் அநீத தீர்ப்பால் பரம ஆலோசனையை நிறைவேற்றுகிறீர்கள் என்று உங்களுக்குத் தெரியாதல்லவோ.

## செபம்.

ஆ, என் அன்புள்ள இயேசு நாதரே, தேவரீர் உம்மைப் பராபரனுடைய குமாரனென்று யூதருக்கு முன்பாகத் திட்டமாய் அறிக்கை பண்ணினது எனக்கு மிகுந்த ஆறுதலாயிருக்கிறது. பராபரனுடைய குமாரனுயிருக்கிற தேவரீர் எனக்காகப் பாடுபட்டு மரித்தபடியால் நான் பாவத்திற்கும் தேவகோபத்திற்கும் நீங்கலானேன். மனிதகுமாரனுகிய தேவரீர் இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவும் வந்தீர். ஆதலால் பாவத்தால் வழிதப்பிச் சிதறிப்போன ஆடாகிய என்மேல் கிருபைகூர்ந்து என்னையும் இரட்சித்தருளும். தேவரீர் எனக்குப்பதிலாகக் குற்றவாளியாய்த் தீர்க்கப்பட்டபடியால் நான் கடைசி நியாயத்தீர்ப்பின் நாளிலே குற்றமுள்ளவனுகத் தீர்க்கப்படேன் என்று அறிந்திருக்கிறேன். இந்த மெய்யறிவிலே முடிவு பரியந்தம் நிற்க எனக்கு ஒத்தாசை பண்ணியருளும் சுவாமி, ஆமேன்.

கெட்ட பாவியாகிய
நீதான் குற்றவாளியாமே;
என்றும் வாதிக்கப்பட
நீயல்லோ நேரஸ்தனுமே.
ஆனுல் இயேசு உன்னை மீட்டார்,
உன் கடனை அவர் தீர்த்தார்.

மனதே, இப்போதும் நீ
என்ன செய்ய ஏற்றிருக்கும்,
பட்ட அவருக்கு நீ
அந்த எல்லா நேசத்துக்கும்
என்னத்தைச் செலுத்த வாருய்,
நீ அவருக்கென்ன தாருய். (45, 3. 5.)

## 18. செவ்வாய்க் கிழமை.

### யூதாவின் பயங்கர முடிவு.

*அவன் நாட்கள் கொஞ்சமாவதாக. அவன் உத்தியோகத்தை வேறொருவன் பெறக் கடவான். சங். 109, 8.*

அப்போது அவரைக் காட்டிக்கொடுத்த யூதா அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு, மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசைப் பிரதான ஆசாரியருக்கும் மூப்பருக்கும் திரும்பக் கொண்டுவந்து: குற்றமில்லாத இரத்தத்தைநான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ் செய்தேன் என்றான். அவர்களோ எங்களுக்கென்ன, நீயே பார் என்றார்கள். அப்போது அவன் அந்த வெள்ளிக்காசைத் தெய்வாலயத்தில் எறிந்து, புறப்பட்டுப் போய், நான்றுகொண்டான். பிரதான ஆசாரியர் அந்த வெள்ளிக்காசை எடுத்து: அவைகளைக் காணிக்கைப்பெட்டியில் போடப்போகாது, ஏனெனில் இரத்தக் கிரயமாயிருக்கிறது என்று சொல்லி, ஆலோசனைபண்ணி, அவைகளால் பரதேசிகளை அடக்கம் பண்ணுவதற்குக் குயவனுடைய நிலத்தைக் கொண்டார்கள். இதின் நிமித்தமாய் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் இரத்த நிலம் என்னப்பட்டது. அப்போது எரேமியா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறிற்று. அதாவது: அவர்கள் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் மதித்துக்கொண்டவரின் விலைக்கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை வாங்கி, அவைகளைக் கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி குயவனுடைய நிலத்துக்குக் கொடுத்தார்கள் என்கிறது தானே. மத். 27, 3-10.

---

ஒரு மனிதனுக்குள் ஆகாத மனச்சாட்சி வாதிக்கத் துவக்கினால் அது அவனை என்ன பாடுபடுத்துகிறதென்றும், எத்தனை பயங்கர முடிவுக்குக் கொண்டு வருகிறதென்றும் பார், ஆத்துமாவே. மனச்சாட்சி

யின் கொந்தளிப்பை அமர்த்த உலகப்பொருளாலும் இல்லை, உலக மக்களாலும் இல்லை என்பதைத் தெளிவாய்ப்பார்க்கிறோம். லோகமானது ஒருவனைப் பொல்லாப்புக்கும் அக்கிரமத்துக்கும் ஏவிவிட்டு, அதை நிறைவேற்றுவதற்கான சகல உதவியையும் அவனுக்குச் செய்தபின், அவன் பாவ நிர்ப்பந்தத்தை உணருங்காலத்தில் அவனுக்கு அற்ப உதவியேனும் செய்யாமல், அந்தப் பாவத்தின் பலனை அவனே அனுபவிக்கும்படி விட்டு: எங்களுக்கென்ன, நீயே பார் என்கிறது.

யூதாவின் பயங்கர முடிவைப் பேதுருவின் குணப்படுதலோடு ஒத்துப்பார்த்து, மெய்த்தவசாகிய குணப்படுதலைத் தேடி நடப்பி. ஏனென்றால், தெய்வ எத்தனமான துக்கம் பின்னுக்கு மனஸ்தாபமற்ற குணப்படுதலை இரட்சிப்பு கிடைக்க உண்டாக்குகிறது. லோக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது (2 கொரி. 7, 10).

நீ செய்த பாவத்தின் துர்ப்பலனுக்காக மாத்திரம் மனஸ்தாபப் படுகிறவனாயிராமல், பாவத்துக்காகவே மனஸ்தாபப்பட்டு: தேவரீர் ஒருவருக்கு விரோதமாக நான் பாவத்தை நடப்பித்து உம்முடைய கண்களுக்கு முன்பாகப் பொல்லாப்பானதைச் செய்தேன் என்கிறதை நீர் உம்முடைய வசனங்களில் நீதி விளங்கவும் உமது நியாயத்தீர்ப்பில் சுத்தம் விளங்கவும் அறிக்கையிடுகிறேன் என்று தாவீதிராசாவைப் போல் சொல்லு (சங். 51, 6).

சில பொய்ப்போதகர் எண்ணுவதுபோல் இருதயத்தின் மனஸ்தாபமும், வாயின் அறிக்கையும், கையின் கிரியையுமே மெய்க்குணப்படுதலா யிருக்குமாகில், யூதாவும் சரியாய்க் குணப்பட்டான் என்று

சொல்ல ஏதுவாகும். ஏனெனில், அவன் மனஸ்தாபப்பட்டு: குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததால் பாவஞ் செய்தேன் என்று தன் வாயினால் அறிக்கையிட்டான். வெள்ளிக்காசை எறிந்துவிட்டான். ஆனால் குணப்படுதலுக்கு அவசியமான ஒன்று அவனிடத்தில் குறைபட்டது. ஏனெனில் அவன் கிறிஸ்து இயேசுவுக்குள் பாவமன்னிப்பைத் தேடுகிறவிசுவாசமில்லாதவனாய்க் கெட்டுப்போனான். அவன் அநியாயத்தின் கூலியினாலே ஒரு நிலத்தைச் சம்பாதித்துக் குப்புறவிழுந்து நடுவாய் வெடிப்புண்டான். அவன் குடல்களெல்லாம் சரிந்து போயிற்று (அப். 1, 18). இப்படியே தன் இருதயத்தைப் பராபரனுக்கு ஒப்புக்கொடாமல் உலகத்துக்கு ஒப்புக் கொடுக்கிறவனுடைய முடிவு எத்தனை பயங்கரம். அவன் தன் ஆத்துமத்தையும் சரீரத்தையும் கெடுத்து அழிவுக்குள்ளாவான் என்பது நிச்சயம்.

இரத்தக் கிரயத்தைக் கையாடுவதில், கொசுகை வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிற (மத். 23, 24) பரிசேய மாயத்தைப் பார்த்து, அதற்கு உன்னை விலக்கமாகக் காத்துக்கொள். காணிக்கைப் பெட்டியில் போடத்தகாத பணம் பரதேசிகளின் அடக்க நிலம் வாங்கத் தகுதியாமோ. மேலும், பரதேசிகளுக்காகக் கவலைப்படும் இந்தப் பக்திமான்கள் தங்கள் சொந்தக்காரராகிய கிறிஸ்துவைக் கொலைசெய்வது பாதகம் என்று எண்ணாதே போனதென்ன.

கிறிஸ்துவினுடைய சத்துருக்கள் தங்கள் செய்கையால் தீர்க்கதரிசன வாக்கைத் தங்கள் அறியாமையில் நிறைவேற்றி, விசுவாசிகளுக்குப் பெரிய ஆறுதல் உண்டாக இடம் பண்ணினார்கள். அரதேசிகளும் பரதேசிகளுமாகிய நம்மை நமது இரட்சகர்

தமது சொந்த சனமாக்கி இஸ்ரவேல் சனத்தின் எல்லைக்குள் கொண்டு வந்தாரென்று அறிந்து நாம் அவரை மகிமைப் படுத்துவோமாக. ஆகையால், நானும் சங்கீதக் காரனைப்போல்: கர்த்தருக்கு முன் பாக சீவனுள்ளோருடைய தேசத்தில் நடப்பேன் (சங். 116, 9).

## செபம்.

நேசமுள்ள கர்த்தரே, தேவரீர் என் பொக்கிஷம், என் நம்பிக்கை, என் ஆறுதல். நான் உமக்குப் பயப்படும்படிக்கு உம்மிடத்தில் மன்னிப்பு இருக்கிறது என்று திடமாய் விசுவாசிக்கச் செய்தருளும். நான் யூதா இஸ்காரியோத்தைப்போல் அவநம்பிக்கையில் விழுந்து கெட்டழிந்து போகாதபடிக்கு என்னைத் தற்காத்தருளும். ஆண்டவரே, நான் பரதேசியும் அரதேசியுமா யிருக்கிறேன். நிலைநிற்கிற ஸ்தலம் எனக்கு இங்கே இல்லை. தேவரீர் ஒருவரே நான் வந்தடையக்கூடிய தாபர ஸ்தலம். ஏனெனில், தேவரீர் ஒருவரே உமது திரு இரத்தத்தால் எனக்கு யாவையுஞ் சம்பாதித்தீர். இதை நான் என் மரணத்திலும் நினைத்து, உமது சார்பில் சந்தோஷமாய் மரிக்கப் பண்ணும். என்னைத் துன்மனச்சாட்சியின் வாதைக்கும் துன்மரணத்தின் மோசத்துக்கும் விலக்கமாக்கி, என்னைச் சகல தீமையினின்றும் இரட்சித்து, உம்மண்டை சேர்த்துக் கொள்ளும் சுவாமி, ஆமேன்.

இயேசுவே, என்னிலுந் தீங்குகள் ஊறும்,
எனது வாலிபப் பாவங்களின்
நினைவால் வெட்கம் என் கண்களை மூடும்.
வெல்ல உதவும், என் ஆத்துமத்தின்
புண்கள் ஆறட்டும், நான் மிகுதியாக
நாணிச் சுத்தாங்கம் அடைந்தவனாக.

இயேசுவே, நான் செபம்பண்ணி, விழிக்கும்
சத்தியை ரட்சகரான நீரே
தந்து, நான் தூங்கி விழாதபடிக்கும்
வெல்ல உதவும்; நான் மோசத்திலே
கெஞ்சி இளைக்கையில் நீர் எனக்காக
வேண்டிக்கொண்டென்னை எழுப்புவீராக (207,3.10)

---

## 19. புதன் கிழமை.

### கிறிஸ்து பிலாத்துவுக்கு ஒப்புக்கொடுக்கப்படுதல்.

*அவர் மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமற்றிருக்கிற ஆட்டைப்போல் தம்முடைய வாயைத்திறவா திருந்தார். எசா. 53,7.*

அவர்களுடைய கூட்டமெல்லாம் எழுந்திருந்து அவரைக் கட்டிக் காய்பாவண்டையிலிருந்து அதிகார வீட்டுக்குக் கொண்டுபோய், பொந்தியுப்பிலாத்து என்கிற துரைக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அப்போது விடியற் காலமாயிருந்தது. யூதர்கள் தாங்கள் தீட்டுப்படாமல் பஷாவைப் புசிக்கத்தக்கதாக அதிகார வீட்டுக்குள் பிரவேசியாதிருந்தார்கள். அப்போது பிலாத்து அவர்களண்டை வெளியே வந்து: இந்த மனுஷன்பேரில் என்ன குற்றஞ் சாட்டிக் கொண்டு வருகிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: இவன் பொல்லாங்கு செய்தவனாயிராவிட்டால், அவனை உமக்கு ஒப்புக்கொடோம் என்றார்கள். அப்போது பிலாத்து அவர்களுடனே: அவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி அவனை நியாயந் தீருங்கள் என்றான். அப்போது யூதர் அவனுடனே: ஒருவனையுங் கொல்ல எங்களுக்கு அடாது என்றார்கள். இயேசு தாம் எந்த மரணமாக மரிக்கப்போகிறார் என்று குறிப்பாய்ச்சொன்ன வார்த்தை நிறைவேறும்படியாகத் தானே. அவர்களுடைய கூட்டமெல்லாம் இவனை சனத்தை மாறுபாடாக்குகிறவனாகவும், தன்னைத் தானே கிறிஸ்து இராசா என்று சொல்லி, இராயனுக்கு

வரிகொடுக்க வேண்டாம் என்கிறவனுகவும் கண்டுபிடித்தோம் என்று அவரைக் குற்றஞ் சாட்டத் தொடங்கினுர்கள். மத். 27, 1. 2; மாற்கு 15, 1; லூக். 23, 1. 2; யோவா. 18, 28-32.

---

இதோ, சர்வலோகத்தின் நியாயாதிபதியானவர் நீச மனுஷனுகிய நியாயாதிபதிக்கு ஒப்புக்கொடுக்கப் படுகிறுர். யூதா கோத்திரச் சிங்கமானவர் சுன்னத்தில்லாத புறச்சாதியானுக்கு முன் கட்டுண்டு நிற்கிறுர். கோத்திரப் பிதாவாகிய யாக்கோபு முன்னறிவித்தபடி செங்கோல் யூதாவிலிருந்தும், நியாயங் கற்பிக்கிறவன் அவன் பாதங்களில் இருந்தும் அற்றுப்போன (1 மோ. 49, 10) காலம் இது தானே. ஆம், ஆம், ஒருவனையும் கொல்ல எங்களுக்கு அடாது என்று யூதர்கள் தாமே சொல்லுகிறுர்களே.

யூதர்கள் தாமே இரட்சகரைக் கொல்லக் கூடியவர்களா யிருந்திருப்பார்களாகில், அவர்கள் அவரைக் கல்லெறிந்திருப்பார்கள். அப்போது சங்கீதக்காரன் முன்னறிவித்தபடி அவருடைய கைகளும் கால்களும் உருவக் குத்தப்பட இடமில்லாதேபோம் (சங். 22, 17). அவர் மரத்தில் தூக்கப்பட்டுப் பாவிகளுக்காக அடையவேண்டிய சாபத்தின் மரணம் நிறைவேறுதே போம் (கலா. 3, 13). மனுஷனுடைய குமாரன் புறச்சாதிகளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டுக் கொன்று போடப்படுவார் (லூக். 18, 32. 33) என்று நமது இரட்சகர் முன்னுரைத்தது பொய்யாய்ப்போம். ஆத்துமாவே, உன் இரட்சகர் தமது திருவாக்கை நிறைவேற்றுவதில் எத்தனை உண்மையுள்ளவராயிருக்கிறுர் என்றறிந்து, அவருடைய திருப்பாதத்தைப் பற்றிக்கொள்.

யூதர்கள் குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்தி தங்கள் இருதயத்தையும் மனச்சாட்சியையும் தீட்டுப் படுத்திக்கொள்ள, பிலாத்துவின் அரண்மனையால் தீட்டுப்படுவோம் என்று எண்ணி, வெளியே நின்றது எத்தனை பெரிய மாயம். கிறிஸ்தவனே, நீயும் அடிக்கடி உன் இருதயத்தில் பாவத்தை வளர்த்து அக்கிரமத்தைச் சிந்தித்தும், புறம்பான வேஷத்தாலும், மாயத்தாலும் அதை மூடலாம் என்று நினைத்ததில்லையோ. பராபரன் இருதயத்தைப் பார்க்கிறவரென்று உனக்குத் தெரியாதோ.

குற்றமற்ற ஆண்டவர் குற்றஞ் சாட்டப்படுகிறார். எல்லாவற்றையும் நன்றாக்கினார் என்ற புகழ் பெற்றவர் பொல்லாங்குசெய்தவன் என்னப்படுகிறார். ஆகாதவன் தன் வழிகளைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பிக் குணப்படுதலைப் பிரசங்கித்து இருதயங்களில் நல்மாறுதலை உண்டு பண்ணுவதற்காகப் பிரயாசப்பட்டவரை, சாதிகளை மாறுபாடாக்குகிறவராகக் கண்டு பிடித்தோம் என்கிறார்கள். அவர்கள் தம்மை இராசாவாக்கமனதாயிருந்தபோது அதற்குச் சம்மதியாமல் லோக ராஜரீகத்தை வெறுத்தவரை, தன்னைத்தானே கிறிஸ்து இராசா என்று சொன்னார் என்று குற்றஞ் சாட்டுகிறார்கள். இராயனுடையதை இராயனுக்குச் செலுத்துங்கள் என்று நிதானமாய் மொழிந்தவரை, இராயனுக்கு வரிகொடுக்க வேண்டாம் என்று சொன்னதாகக் குற்றப்படுத்துகிறார்கள். மனுஷனே, நீயல்லவோ உன் இருதயத்தைப் பராபரனைவிட்டு மாறுபடச் செய்ததுமன்றி பிறரையும் மாறுபாடாக்கினவன். நீயல்லவோ உலக மகிமையை நாடித்தேடி உன்னைத்தானே உயர்த்தப் பார்த்தவன். நீயல்லவோ இராயனுடையதை இராயனுக்கும், பராபரனுடையதைப் பராபரனுக்கும்

செலுத்தாத படுபாதகன். உன்னைச் சுத்தவாளி யாக்குவதற்குத் தான் உன் இரட்சகர் குற்றவாளி ஆனார். நான் பொந்தியு பிலாத்துவின்கீழ் பாடுபட்டவரை விசுவாசிக்கிறேன். அவரே என் பாவங்களை மன்னிப்பாராக.

## செபம்.

கிருபையுள்ள இயேசுவே, தேவரீர் என் இராசாவும், மேசியாவும், பலத்த இரட்சகரும், எனக்கு நிலையுள்ள பாக்கியத்தை அளிக்கிறவருமா யிருக்கிறீர். நான் என் சீவனுள்ளமட்டும் தேவரீரை இப்படிப்பட்டவராக அறிந்து விசுவாசித்து உம்மில் நிலைத்திருக்கும்படி கிருபை செய்யும். தேவரீர் எனக்குப் பதிலாகக் குற்றவாளியைப் போல நியாயஸ்தலத்துக்கு முன் குற்றஞ் சாட்டப்பட்டு நிற்கச் சித்தமானீரே. ஆ, நான் தேவரீருடைய அன்புக்குங் கிருபைக்கும் தகுந்தபடி உம்மை துதித்துப்புகழ வல்லவனல்லவே. கிருபையுள்ள கர்த்தரே, தேவரீர் என் மேல் இரங்கி, என் இருதயத்தின் பாவமுள்ள சீரை மாற்றி, உமது பரிசுத்த இரத்தத்தினால் அதைப் பரிசுத்தமாக்கியருளும். நான் விசுவாசத்தால் உம்மை அண்டிக்கொண்டு உமக்குக் கீழ்ப்படியவும், தேவபக்தியோடு சீவனுள்ள நாளெல்லாம் உமக்கு உண்மையாய் ஊழியஞ் செய்யவும், கடைசியிலே தேவரீருடைய மரணத்தினால் நித்திய சீவனை அடையவும் எனக்குச் சகாயஞ்செய்தருளும் சுவாமி, ஆமேன்.

எத்தனை நிர்ப்பந்த பாவஜாதி நாம்,
பாவத்தாலே வந்த கேடு மிச்சமாம்.
நம்மை என்றுங் கொல்லும் மரணமல்லோ
தெய்வவாக்குச் சொல்லும் ஆக்கினை, ஐயோ,

ஸ்வாமி, இரங்கும்; கிறிஸ்தே, இரங்கும்;
ஸ்வாமி இரங்கும்.

பாவத்தால் பலத்த சாவை நீக்க நாம்
என்றுஞ் சத்தியற்ற ஏழைக் கூட்டமாம்.
தப்பி நீங்கலாகத் தேவமைந்தன் தாம்
தாழ்ந்து நமக்காகச் சாகத் தேவையாம்.
ஸ்வாமி, இரங்கும்; கிறிஸ்தே, இரங்கும்;
ஸ்வாமி, இரங்கும். (53, 1. 2)

---

## 20. வியாழக்கிழமை.

### எரோதேயின் விசாரணை.

சாதிகள் கொந்தளித்துச் சனசதளங்கள் விருதாக் காரியத்தைச் சிந்திப்பானேன். கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம் பண்ணினவருக்கு விரோதமாகவும் பூமியின் இராசாக்கள் எழும்புகிறார்கள். சங். 2, 1. 2.

அவர்களோ ஊன்றிப்பேசி: அவன் கலிலேயா துவக்கி இவ்விடம் மட்டும் யூதேயா எங்கும் போதகஞ் சொல்லி, சனத்தை எடுத்துவிடுகிறான் என்றார்கள். ஆனால் கலிலேயா என்கிறதைப் பிலாத்து கேள்வியானபோது: இந்த மனுஷன் கலிலேயனோ என்று கேட்டான். அவர் எரோதேயின் அதிகாரத்துக்கு உள்ளானவர் என்று அறிந்தபோது அந்நாட்களில் எருசலேமிலே வந்திருந்த எரோதேயண்டை அவரை அனுப்பினான். ஆனால்எரோதே இயேசுவைக் காண்கிறபோது மிகுதியுஞ் சந்தோஷப்பட்டான். ஏனெனில் அவரைக் குறித்து அவன் அநேக காரியங்களைக் கேள்விப்பட்டிருந்தபடியினாலே, வெகு நாளாய் அவரைக் காண ஆசையாயிருந்து, அவராலே செய்யப்படும் யாதொரு அடையாளத்தைப் பார்க்கலாம் என்று நம்பினான். அநேக வார்த்தைகளினாலே அவரைக் கேட்டான்; அவரோ அவனுக்குப் பிரத்தியுத்தாரம் ஒன்றும்

சொல்லாதிருந்தார். பிரதான ஆசாரியரும் வேதபாரகரு மோ அவரை மெத்தவுங் குற்றஞ் சாட்டிக்கொண்டே நின்றார்கள். ஆனால் எரோதே தன் இராணுவ மனுஷருட னேகூட அவரை அற்பமாக எண்ணிப் பரிகாசம்பண்ணி, மினுக்குள்ள வஸ்திரத்தை அவருக்குத் தரிப்பித்து, அவ ரைத் திரும்பப் பிலாத்துவண்டை அனுப்பினான். அன்றை யத்தினம் பிலாத்துவும் எரோதேயும் ஒருவருக்கொருவர் சிநேகிதர் ஆனார்கள். ஏனெனில் முன்னாலே ஒருவருக் கொருவர் பகையாயிருந்தார்கள். லூக். 23, 5-12.

---

சுபாவத்திலும் செய்கையிலும் பரிசுத்தராகிய நமது கர்த்தர், தன் சகோதரன் மனைவியைப் படைத் துக்கொண்டிருந்த விபசாரனும், குணப்படுதலின் பிர சங்கியாகிய யோவான் ஸ்நானகனைக் கொன்ற கொலை பாதகனுமாகிய எரோதேக்கு முன் நிற்கச் சம்மதித் தது எத்தனை பெரிய அதிசயம். இது நம்மைச் சிநே கித்த சினேகத்தால் உண்டானதல்லவோ.

சகல சாதிகளின் சந்தோஷமாகிய இயேசுவைக் கண்டவுடனே யாருக்குத்தான் சந்தோஷம் உண் டாகாதிருக்கும். எரோதே இராசாவின் சந்தோஷ மோ இயேசுவைப் பற்றும் விசுவாசத்தால் உண்டா காமல், வேடிக்கை ஆசையினாலே உண்டானபடியால் அது நிலைநிற்காமல் போயிற்று. கிறிஸ்தவனே, பரா பரனுடைய இராச்சியம் பரிசுத்த ஆவியினால் உண் டாகும் சந்தோஷம் என்று அறிந்து அதைக் கிறிஸ் துவுக்குள் நீ தேடு.

கிறிஸ்து மாமிச சிந்தையுள்ள எரோதேயின் வேடிக்கைப் பிரியத்தைத் திருப்திப்படுத்தாமலும், அவனுக்குப் பிரத்தியுத்தரம் ஒன்றுஞ் சொல்லாம லும் இருந்ததைக் கவனி. ஆத்துமாவே, பரிசுத்த

மானதை நாய்களுக்குக் கொடுக்கலாமோ. முத்துக் களைப் பன்றிகளுக்குமுன் போடலாமோ (மத். 7,6).

அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது போல் எரோதேயினுடைய மாதிரியைப் பார்த்து, அவனுடைய இராணுவ மனுஷர் அவரை அற்பமாக எண்ணவும் அவரைப் பரிகாசம் பண்ணவும் துணிந் தார்கள். பெரியோர், சிறியோருக்குத் துன்மாதிரி ஆகாமலும், சிறியோர், பெரியோரின் துன்மாதிரி யைப் பின்பற்றுமலும் தங்களைக் காத்துக்கொள் வார்களாக.

பரிசுத்த பர்வதத்தில் நமது ஆண்டவர் மறு ரூபமானபோது அவருடைய உடை வெண்மையாகி மின்னிக் கொண்டிருந்தது என்று சுவிசேஷகன் சொல்லுகிறுன். இப்பேர்ப்பட்ட மகிமையுள்ள ஆண் டவருக்குப் பரிகாசமாக எரோதேயினுக்குள்ள வஸ் திரத்தைத் தரிப்பித்தானே. பாவியாகிய நான் மெய் யாகவே ஆசாரியனும் இராசாவுமாய் வெண்வஸ்திரந் தரித்து நடப்பதற்கென்றல்லவோ பாவமும் குற்றமு மற்ற கர்த்தருக்கு இப்படி செய்யப்பட்டது(1 பேது. 2, 9; அறி. 3, 5).

முன்னுலே ஒருவருக்கொருவர் பகையாயிருந்த பிலாத்துவும் எரோதேயும் இயேசுவைக் குற்ற விசா ரணை செய்வதில் ஒருவருக்கொருவர் சிநேகிதரானுர் கள். அதேதெனெனில் வந்து சம்பவிக்க உம்முடைய கையும் உம்முடைய ஆலோசனையும் முன் குறித்தது களையெல்லாம் செய்வதற்காக எரோதேயும் பொந்தி யுப் பிலாத்துவும் புறச்சாதிகளோடும் இஸ்ரவேல் சனங்களோடுங்கூட நீர் அபிஷேகம்பண்ணின உம்மு டைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவுக்கு விரோத மாக மெய்யாய்க் கூட்டங் கூடினுர்கள் (அப். 4, 27. 28) என்று பேதுரு அப்போஸ்தலன் தமது செபத்

தில் சொன்னது சத்தியமல்லவோ. ஆனால் இதினாலே நமது அன்புள்ள இரட்சகர் நம்மைப் பிதாவாகிய பராபரனுக்கும் பரிசுத்த தூதருக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரிசுத்தவான்களுக்கும் சிநேகிதராக்கினார்.

## செபம்.

மகத்துவமுள்ள இயேசு சுவாமி, தேவரீர் எரோதேக்குமுன்னின்று, அவனுடையநிந்தைபரிகாசத்தையும் என்நிமித்தஞ் சகித்த உமது மட்டற்ற கிருபைக்காக உமக்கிஸ்தோத்திரம். எரோதேயால் மினுக்கு வஸ்திரந் தரிப்பிக்கப்பட்ட தேவரீர் இப்போது பரலோகத்தில் எங்கள் இராசாவாகப் பராபரனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறீர். தேவதூதரும் பரிசுத்தவான்களும் உம்மை நோக்கி: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும், மகிமையையும், இஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரமா யிருக்கிறதென்று சொல்லத்தக்கவருமா யிருக்கிறீர் என்பதை நான் அறிந்து உம்மை விசுவாசத்தோடு நோக்கிப் பார்க்கத் துணை செய்யும். மரணகாலத்தில் எனக்கு உடுத்தப்படும் அழிவுக்குரிய வஸ்திரமானது நான் நித்திய சீவனில் தேவரீரால் உடுத்தப்படும் மகிமையின் வெண் வஸ்திரத்தை எனக்கு நினைப்பூட்டுவதாக. தேவரீர் உமது பாடுகளின் நிமித்தம் என் பாவத்தை மன்னித்து என்னை நித்திய மோட்ச மகிமைக்குச் சுதந்தரனாக்கியருளும் சுவாமி, ஆமேன்.

இவ்வாதையை நீர் உத்தரிக்குஞ் சாது
இரக்கம் பட்சம் அன்பும் மட்டில்லாது;
நான் லோகத்தோடே வாழ்ந்தேன், உம்மை முற்றும்
நிர்ப்பந்தம் சுற்றும்.

உயர்ந்த ராஜா இதுக்கொத்ததாகும்
துதியைப் பாட எவனாலே ஆகும்
செலுத்தத்தக்க தேவன் மனதுக்கும்
தோன்றாதிருக்கும். (50, 7. 8.)

---

## 21. வெள்ளிக் கிழமை.

### சத்திய இராசா.

அவர் கொடுமை செய்ததில்லை. அவர் வாயிலே வஞ்சனை இருந்ததும் இல்லை. எசா. 53, 9.

பிலாத்து மறுபடியும் அதிகார வீட்டுக்குள் பிரவேசித்து, இயேசுவை அழைத்தான். இயேசுவோ துரைக்கு முன்பாக நின்றார். துரை அவரை: நீ யூதருடைய இராசாவோ என்று கேட்டான். இயேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: இதை நீராய்ச் சொல்லுகிறீரோ; அல்லது வேறே பேர்கள் என்னைக் குறித்து இதை உமக்குச் சொன்னார்களோ என்றார். பிலாத்து பிரத்தியுத்தாரமாக: நான் யூதனோ; உன் சாதியாரும், பிரதான ஆசாரியர்களும் உன்னை எனக்கு ஒப்புக்கொடுத்தார்கள், என்ன செய்தாய் என்றான். இயேசு பிரத்தியுத்தாரமாக: என் இராச்சியம் இந்த லோகத்தி னுடைய தல்ல, என் இராச்சியம் இந்த லோகத்தினுடையதானால், நான் யூதருக்கு ஒப்புக் கொடுக்கப் படாதபடிக்கு, என் பணிவிடைக்காரர் போராடியிருப்பார்களே; இப்போதோ என் இராச்சியம் இவ்விடத்தது அல்ல என்றார். அப்போது பிலாத்து அவருடனே: ஆனால் நீ இராசாவோ என்றான். இயேசு பிரத்தியுத்தாரமாக: நீர் சொல்லுகிறபடி நான் இராசாதான். சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காக இந்த லோகத்திலே வந்தேன்; சத்தியவானெல்லாம் என் சத்தம் கேட்கிறான் என்றார். பிலாத்து அவருடனே சத்தியம் என்ன என்று சொல்லி, மறுபடியும் யூதரண்டை புறப்

பட்டுப்போய், அவர்களுடனே: நான் அவனில் ஒரு குற்ற முங் காணேன் என்றான். யோவா. 18, 33-38.

---

ஓய் பிலாத்துத் துரையே, உனக்கு இப்போது நல்ல சமயம். நீயும் உன் பரம இராசாவும் முகமுகமாய்த் தனித்து நிற்கும் இத்தருணத்தை நீ தப்பாமல் பிடித்திருந்தால் எத்தனை பெரிய நன்மையைப் பெற்றிருப்பாய். ஐயோ, நீ அவருடைய கேள்வியை ஆலசியம் பண்ணி, அவருடைய நல்ல அறிக்கையை மதியாமல் போனது பெரிய நிர்ப்பாக்கியமே.

பொந்தியுப் பிலாத்துவுக்கு முன் நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின (1 தீமோ. 6, 14) இயேசு சுவாமி: நான் இராசாதான் என்று திருவாய் மலர்ந்தது பிசாசாகிய கொடுங்கோலன் கீழ்த் தவிக்கும் ஆத்துமாக்களுக்கு எத்தனை ஆறுதல். புலம்பித் தவிக்கும் பூதல பாவிகளே, ஓடிவாருங்கள். உங்கள் இராசாவை அவர் எப்படிப்பட்டவரென்று உற்றுப்பாருங்கள்.

யூதருக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராசாவாகிய அவரை நோக்கி பிலாத்து: நீ என்ன செய்தாய் என்கிறானே. அவர் செய்ததை எல்லாம் சொல்லி முடியுமோ, எழுதிமுடியுமோ. அவர் செய்தது என்ன என்பதை நீ அறிய மனதானால் வானத்தை நோக்கிப்பார், பூமியைச் சுற்றிப்பார், உன்னையே உற்றுப்பார். பாவம் தவிர யாவும் அவர் செய்கை தானே.

அவர் மண்ணால் கோட்டை கட்டி மாண்டழியும் இராசனல்ல. ஏழை மாளிட இருதயமே அவர் வசிக்கும் மாளிகை. அவர் அளிக்கும் நன்மைகள் பொன்னும் வெள்ளியும் போன்ற புறம்பான அநித்திய நன்

மைகள் தானே. பாவமன்னிப்பு, நீதி, சமாதானம், ஞானசந்தோஷம் முதலிய பரம நன்மைகள் அவர் அளிக்கும் ஈவுகளல்லவோ. ஆத்துமாவே, உன் இரட்சகரின் இராச்சியம் இவ்விடத்த தல்லாததுபோல நீயும் இவ்விடத்தானல்ல. லோகவேஷத்தைத் தள்ளு, பரம இராசாவண்டை போ. ஆத்துமநன்மைகளையும் மோட்ச இராச்சியத்தையும் நாடித்தேடு.

அவர் உலக இராசாவாயிருப்பாராகில், உலகம் அவரை இக்கோலம் காணுமோ. அவருக்கு விரோதமாக ஒரு துரும்பும் அசையாதபடிக்குப் போர்ச்சேவகர் போராடியிருப்பார்களே. அவர் பொல்லாங்கனுக்குள் கிடக்கிற இப்பூலோகத்தை மீட்கவந்த பரம இராசா ஆனதினாலேதான் அவருக்கு இத்தன்மையான பாடுகள் வந்தன.

உன் அருமை இரட்சகர் சத்தியத்துக்குச்சாட்சி கொடுக்கவந்த சத்திய இராசா என்பதைக் கவனி. அவரே சத்தியம் (யோவா. 14, 6). சகல சாஸ்திரிகளும் சாஸ்திரங்களும் தேடித் தடவும் சத்தியமாகிய அவரைக் கண்டுபிடியாதவர்கள் ஆரோ, அவர்கள் பொந்தியுப் பிலாத்துவைப்போல், சத்தியம் என்னவென்று தட்டிவிடுவார்களேயன்றி வேறல்ல.

அவர் சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்கப் பிறந்தவர் என்கிறது உண்மைதானே. பராபரன் ஒருவருண்டு, மனிதரெல்லாரும் பாவிகள், பாவிக்கு இரட்சிப்பு உண்டு என்கிற பெரிய சத்தியங்களுக்குச் சாட்சி பகர்ந்த சத்திய இராசனை நாம் மறக்கத்தக்கதோ. கிறிஸ்தவனே, நீ இந்தச் சத்திய இராசாவின் சத்தத்துக்குச் செவிகொடுக்கும் சத்தியவானாயிருக்கிறாயா. உன் பேச்சு சத்தியமா, உன் நடக்கை சத்தியமா.

## செபம்.

சத்தியத்துக்குச் சாட்சிகொடுக்கவந்த சத்திய இராசாவாகிய இயேசு சுவாமி, தேவரீர் பொந்தியுப் பிலாத்துவுக்கு முன் நல்லறிக்கை பண்ணி, உமது இராச்சியத்தின் தன்மையைச் சரியாய் வெளிப்படுத் தினதுக்காக உமக்கு ஸ்தோத்திரம். பொய்க்குப் பிதாவாகிய பிசாசின் இராச்சியத்தில் ஒடுக்கப்பட்ட நான் உமது இராச்சியத்தின் குடியானது உமது சுத் தக் கிருபையே. நான் உம்மிலும் உமது இராச்சியத் திலும் மெய்விசுவாசத்தினுல் தரித்திருந்து உமக்கு உகந்த பிரஜையாக என் எல்லா நினைவு வாக்கு செய் கையிலும் விளங்கும்படி தேவரீர் எனக்கு உமதாவி யின் வரப்பிரசாதத்தை அளிக்கவேண்டுமென்று உம் மைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். என்னைத் தினந்தோறும் நெருக்குகிற உலகத்தையும் அதன் எல்லா வேஷத்தையும் அருவருத்துத் தள்ளி, உம் முடைய சத்தத்தைக் கேட்கும் சத்தியவானுகும் படி தேவரீர் தாமே என்னைப் பலப்படுத்தியருளும் சுவாமி, ஆமேன்.

மா இராசாவே, பணிவுடனே
தேவரீருக்குக் கீழ்ப்பட்டு,
உமது மொழியைக் கற்று,
அதை நெஞ்சிலே
வைப்பேன், இயேசுவே.

என்னை முழுதும் உமக்குள் இழும்;
நேசத்தால் நான் வாஞ்சையாக
உம்மோடொட்டிக் கொள்வேனுக.
என்னை முழுதும்,
உமக்குள் இழும்.

உம்மால் சாந்தமும், மனத்தாழ்மையும்
என்னிலே உண்டாவதாக.
கோபமும் இடும்புஞ் சாக.
உம்மை என்றைக்கும்
நான் பின்பற்றவும். (141, 5. 7. 8.)

---

## 22. சனிக்கிழமை.

### கிறிஸ்துவும், பரபாவும்.

நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று; அவருடைய தழும்புகளாலே குணமாகிறோம். எசா. 53, 5.

பண்டிகைதோறும் காவல் பண்ணப்பட்டவர்களில் சனம் வேண்டும் என்று கேட்கிற ஒருவனை அவர்களுக்கு விடுதலையாக்குவது துரைக்கு வழக்கமாயிருந்தது. அப்போதோ காவல்பண்ணப்பட்டவர்களில் பரபா என்னப்பட்ட பேர்போன ஒருவன் அவர்களுக்கு இருந்தான். பரபாவோ கள்ளனுயிருந்து, பட்டணத்தில் நடந்த ஒரு கலாதியிலே கொலைசெய்து, கலாதிக்காரருடனே கூடக் கட்டிக் காவலில் வைக்கப்பட்டிருந்தான். அவர்கள் கூடியிருக்கையில் சனங்கள் சத்தமிட்டு, எப்போதும் தங்களுக்குச் செய்ததின்படியே அவன் செய்யவேண்டும் என்று கேட்கத் துவக்கினுர்கள். பிலாத்து அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: நான் எவனை உங்களுக்கு விடுதலை பண்ண வேண்டுமென்றிருக்கிறீர்கள். பரபாவையோ, யூதருடைய இராசாவாகிய கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவையோ என்றான். அதேனெனில் பிரதான ஆசாரியர்கள் பொறாமையினுலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று அறிந்தான். அவன் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய பெண்சாதி அவனுக்கு ஆள் அனுப்பி: உமக்கும் அந்த நீதிமானுக்கும் கவை வேண்டாம்; ஏனென்றால்

இன்று சொப்பனத்தில் அவர் நிமித்தம் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள். பிரதான ஆசாரியரும் மூப்பரும் பரபாவை விடக் கேட்பதற்கும், இயேசுவையோ கொல்வதற்கும் கும்புகளைச் சம்மதப்படுத்தினார்கள். துரை மறுவுத்தாரமாக அவர்களுடனே: இந்த இருவரில் எவனை நான் உங்களுக்கு விடுதலை பண்ணவேண்டும் என்றான். அவர்கள்: பரபாவை என்றார்கள். கூட்டம் எல்லாம்: இவனைப் போக்கிவிட்டு, பரபாவை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்தோ இயேசுவை விடுதலையாக்க மனதாய் மறுபடியும் அவர்களை நோக்கிச் சத்தமிட்டு: ஆனால் யூதருடைய இராசா என்று நீங்கள் சொல்லுகிற கிறிஸ்து என்னப்பட்ட இயேசுவை என்ன செய்வேன் என்றான். எல்லாரும் அவனுடனே: சிலுவையில் அறையப்படட்டும் என்று மறுபடியுங் கூப்பிட்டார்கள். அவன் மூன்றும் விசை அவர்களுடனே: என், இவன் எந்தப் பொல்லாப்பைச் செய்தான். மரணத்துக்கேதுவான குற்றம் ஒன்றும் அவனிடத்தில் நான் கண்டதில்லையே. ஆகையால் அவனைத் தண்டித்து விடுதலை பண்ணுவேன் என்றான். ஆனால் அவர் சிலுவையில் அறையப்பட அவர்கள் மகா சத்தமாய் கேட்டுக் கொண்டே இருந்தார்கள். அவர்களும் பிரதான ஆசாரியர்களும் இட்ட சத்தங்கள் பலத்தது. மத். 27, 15-23; மாற். 15, 6-14; லூக். 23, 17-23; யோவா. 18, 39. 40.

---

நமது அன்புள்ள இரட்சகரை நியாயத்தால் விடுதலை பண்ணவேண்டிய பிலாத்து அவரை உபாயத்தால் விடுதலைபண்ணத் தேடுகிறான். சனங்களுக்குத் தீர்ப்புச் சொல்லவேண்டியவனாகிய நீதி துரை சனங்களிடத்தில் தீர்ப்புக் கேட்கிறான். இதனால் அவன் பயங்கர பாதகத்துக்கு ஆளானான் அல்லவோ. மனுஷனே, நீ பராபரனுக்குப் பயப்படாமலும், உன்

அழைப்புக் கேற்றபடி செய்யாமலும் போனுயேயா கில் பெரிய மோசத்துக்குள்ளாவாய்.

பரபாவும் இயேசுவும் ஒன்ருய் நிறுத்தப்பட் டிருக்கிற காட்சியைப் பார், ஆத்துமாவே. பசாசின் மகனும் பராபரனுடைய சுதனும் ஒன்ருய் நிற்கலா யிற்று. கொலைபாதகனும் சீவநாயகரும் சமமாய் நிற்க லாயிற்று. தம்மோடென்னையும் பரத்தில் மா மேன் மையாய் உயர்த்தும்படிக்கல்லவோ இவ்வளவு தாழ் மைக்குள்ளானுர், என் இயேசு.

கிறிஸ்து நீதிமானென்றும் அவருக்கு அநீதம் செய்வதால் வெகு பாட்டுக்கு ஆளாகவேண்டும் என் றும் கர்த்தர் பிலாத்துவின் மனைவிக்குச் சொப்பனத் தால் வெளிப்படுத்தினுர் (யோபு 33, 15. 16). பிலாத்து சனங்களின் அபிப்பிராயத்துக்குச் செவி கொடுத்ததினுல் அல்லவோ தன் மனைவியின் நல் யோசனைக்கு அவன் செவிகொடுக்கக் கூடாமற் போயிற்று.

திரள் கூட்டமெல்லாம்: இயேசுவைப் போக்கி விட்டுப் பரபாவை விடுதலையாக்கும் என்று கூக்குரல் இட்டது எத்தனை பெரிய அநியாயம், எத்தனை பெரிய நன்றிகேடு. தங்களை எகிப்தின் அடிமைத்தனத்தி னின்று மீட்ட ஆண்டவர் இவர் என்றறியாமல் போ னுர்களோ. தங்கள் வீதிகளில் திருச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, மகாப் பெரிய அற்புதங்களையும் அடை யாளங்களையும் செய்து, சகல நோக்காடுகளையும் குண மாக்கினதை எருசலேம் பட்டணத்தாரின் சுயகண் கள் கண்டதும், சுயகாதுகள் கேட்டதும் இல்லையோ. எருசலேமே, எருசலேமே, கோழி தன் குஞ்சுகளைச் செட்டைகளின்கீழே கூட்டிச்சேர்க்கும் வண்மையாக நான் எத்தனை தரம் உன் பிள்ளைகளைக் கூட்டிச்சேர்க்க

வேணும் என்றிருந்தேன், ஆனால் மாட்டோம் என்றீர்கள் (மத். 23, 37) என்ற வார்த்தை அவர் யூதர் மேலும் விசேஷமாய் எருசலேம் பட்டணத்தாரின் மேலும் வைத்திருந்த அன்புக்கு அத்தாட்சியல்லவோ. இப்படியிருக்க, இவனைப் போக்கிவிடும் என்பதோ அவருக்குக் காண்பிக்கும் நன்றி.

மேலும் தெய்வபகை மனுஷரின்கண்களை எத்தனை குருடாக்குகிறது பார். பரபா என்பவன் சனத்தின் சமாதானத்தைக் குலைத்துக் கலகத்தை விளைவித்த கலகக்காரன்; சனங்களின் வாழ்வுக்கும் சந்தோஷத்துக்கும் அவசியமான பொருட்களை அவர்களிடத்திலிருந்து கொள்ளையடித்த கள்ளன்; அநேக மனுஷரின் அருமையான சீவனைப் போக்கின கொலைபாதகன். இவனால் வந்த கேடுகளை யூதர் கண்டும், கேட்டும், பட்டும் இருந்தாலும், இவனையே தங்களுக்கு விடுதலைபண்ணக் கேட்கிறார்கள் (அப். 3, 14). மனிதனே, நீ எத்தனைவிசை கிறிஸ்துவைத் தள்ளிப் பாவத்தையும் லோகத்தையும் தெரிந்துகொண்டாய்.

சனக்கூட்டத்தின் உறுதி யின்மையையும் கவனித்துக்கொள். ஐந்து தினங்களுக்குமுன்னே தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா என்று பாடினவர்கள் இன்று: அவனைச் சிலுவையிலறையும் சிலுவையிலறையும் என்று கூப்பிட்டார்கள் (நடபடி 2, 22. 23), உலகத்தின் புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பெரிதாய் எண்ணாதே.

அநீதக்காரப் பிலாத்து பரபாவை விடுதலையாக்கி இயேசுவை அவர்களுக்கு ஒப்புக்கொடுக்கிறான். தன் ஆத்துமக் கொலைஞனைவிட்டு, ஆத்தும மீட்பனை ஒப்புக்கொடுக்கிறான். ஆ, இது ஏழைப் பாவியின் நீதிமானுக்குதவுக்கு எத்தனை நேர்த்தி

யான திருஷ்டாந்தம். படுபாதகனாகிய நான் விடுதலை பெறப் பரிசுத்த இயேசு தண்டிக்கப்பட்டார் என்பதே என் ஆறுதல், என் சந்தோஷம், சீவனிலும் சாவிலும் என் நம்பிக்கை.

## செபம்.

கிருபையுள்ள இயேசு சுவாமி, நான் தேவரீரால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தனாய் உமது நித்திய இராச்சியத்தில் விளங்கும்படி தேவரீர் அக்கிரமக்காரரில் ஒருவராய் எண்ணப்பட்டீர். உமது பரிசுத்தமானவற்றைக் கொள்ளையிட்டு, உமக்கு விரோதமாய் என் கைகளை எடுத்த கொலைபாதகனாகிய என்பாவத்தை மன்னித்து என்னை நீதிமானாக்க தேவரீர் குற்றவாளியாகவும், பரபாவோ சுத்தவாளி போல் விடுதலை பண்ணப்படவும் சித்தமானீர். என் எண்ணிறந்த பாவங்கள் எனக்கு விரோதமாக எழும்பிப் பராபரனுடைய கோபத்துக்கும் ஆக்கினைக்கும் என்னைப் பாத்திரனாய்த் தீர்க்கையில், எனக்காகப் பிணையாளியான உம்மையே நான் பிதாவுக்குக் காண்பித்து, உமது பாடுகளாலும் புண்ணியத்தாலும் நான் தப்புவித்துக்கொள்வேன். என் அன்புள்ள இரட்சகரே, தேவரீர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் பரமண்டலத்தில் பேர் எழுதியிருக்கும் முதற்பேரானவர்களுமாகிய சபைக்கூட்டத்தில் என்னையும் சேர்த்துக்கொண்டு, நான் உமது பரிசுத்த சாயலைத் தரித்துக்கொண்டவனாய் என்றைக்கும் உம்மோடு வாழத் துணை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

சன்மார்க்கர் ஆக்கினைக்குள்ளாய் விழுந்து
மரித்தார், தீயோருக்கோ ஜீவன் உண்டு.
வெட்டுண்க மனிதர் நேரஸ்தராமே;
மாண்டோர் நீர்தாமே.

மா ஆச்சரியம், கர்த்தர் சாக வாருர்;
நல்மேய்ப்பர் மந்தைக்காக ஜீவன் தாரார்.
அடியார் தப்பக் குற்றமற்ற மீட்பர்
கடனைத் தீர்ப்பர். (50, 5. 4.)

---

## ஒருசந்தியின் நாலாம் ஞாயிறு.

நிரு. கலா. 4, 21-39. சுவி. யோவான். 6, 1-15.

---

## 23. திங்கள் கிழமை.

### வாரடியும், பரிகாச இராச வேஷமும்.

நம்முடைய முதுகை அடிக்கிறவர்களுக்கும் நம்முடைய தாடைகளை மயிரைப் பிடுங்குகிறவர்களுக்கும் ஒப்புக்கொடுத்தோம். நம்முடைய முகத்தை அவமானங்களுக்கும் உமிழ்நீருக்கும் மறையோம். எசா. 50, 6.

பிலாத்து இயேசுவைப் பிடித்து, வாரிஞல் அடிப்பித்தான். அப்போது துரையின் சேவகர் இயேசுவை அதிகாரச்சாலையிலே கொண்டுபோய்ச் சேர்வையை எல்லாம் அவரைச் சூழக் கூட்டி, அவர் வஸ்திரங்களைக் களைந்து, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுக்களால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து, அவர் முன்பாக முழங்காற் படியிட்டு, அவரை மினவத் துவக்கி: யூதருடைய இராசாவே, வாழ்க என்று அவரைப் பரிகாசம் பண்ணி, அவர்மேல் துப்பி, கோலை எடுத்து அவர் சிரசில் அடித்து, அவரை அறைகளால் அறைந்தார்கள். மத். 27, 27-30; மாற். 15, 16-19; யோவா. 19, 1-3.

---

பிலாத்துவின் அரண்மனை இரத்தக் களறியாய்க் கிடக்கிற காரணம் என்ன. ஐயோ, உன் மீட்பர் வாரினால் அடிக்கப்படுகிறார். யூதருடைய பிரமாணப்படி ஒரு சமயத்தில் ஒரு குற்றவாளியை நாற்பது அடிகளுக்கு அதிகமாய் அடிக்க உத்தரவு இல்லை (5 மோ. 25, 2. 3; 2 கொரி. 11, 24). இயேசுவோ புறச்சாதியாராகிய ரோமரால் கணக்கில்லாமல் அடிபடுகிறார். ஐயையோ, இதென்ன அநியாயம்.

மூடரின் முதுகுக்கல்லோ அடிகள் ஆயத்தமாயிருக்கும் (வாக். 19, 29). அளவற்ற ஞானமுள்ள ஆலோசனைக்காரராகிய கர்த்தர் என்னை ஞானியாக்கும் பொருட்டு இவ்விதமாய் மூடனைப்போல் நடத்தப்பட்டு வாரடியுண்டார். எசமானின் சித்தத்தை அறிந்தும் அதைச் செய்யாத ஊழியக்காரன் அல்லவோ அநேக அடிகளால் அடிக்கப்படுவான் (லூக். 12, 47). அப்படியிருக்க, தெய்வ கற்பனையையெல்லாம் சரிவர நிறைவேற்றின கர்த்தருடைய நீதியுள்ள ஊழியக்காரராகிய இயேசு கணக்கில்லா அடிகளால் வாதிக்கப்படுவானேன். அவர் நம்முடைய மீறுதல்களின் நிமித்தம் காயப்பட்டு நமது அக்கிரமங்களி னிமித்தம் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் இறங்கிற்று. அவருடைய தழும்புகளாலே குணமாகிறோம் (எசா. 53, 5).

இயேசு ஐயரே, உழுகிறவர்கள் உமது முதுகின் மேல் உழுது தங்கள் படைச்சால்களை நீளமாக்கியும் (சங். 129, 3), நம்முடைய முதுகை அடிக்கிறவர்களுக்கு மறையோம் (எசா. 50, 6) என்று என் நிமித்தம் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைத்துப் பொறுமையாய்ச் சகித்தீரோ.

இரட்சகர் வாரடியுண்டதைப் பார்த்த நான் என்னைப் புறம்பாகவே அடித்து வதைத்துக்கொள்வதில் காரியம் இல்லை. என் பொல்லாத மாமிசத்தை மெய்த்தவசால் அடித்து வதைப்பதே காரியம் (1 பேது. 4, 1. 2). மேலும் என் பராபரனுகிய கர்த்தர் தமது ஞானமும் நன்மையுமுள்ள சித்தப்படியே எனக்கு அனுப்புந் துன்பங்களை யெல்லாம் பொறுமையாய்ச் சகிப்பேன்.

சேவகர் இயேசுவை வாராலடித்தபின் அவர் வஸ்திரங்களைக் களைந்து,சிவப்பான மேலங்கியை அவருக்குடுத்தி, முள்ளுக்களால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக் கொடுத்து அவரைப் பரிகாசம் பண்ணினுர்கள். இப்போது அவருடைய உருவை உற்றுப்பார், ஆத்துமாவே. அவருக்கு உருவமும் இல்லை. மகத்துவமும் இல்லை (எசா, 53, 2). ஆ, என் இரத்த மணவாளனே, என்னைத் தேடிவந்ததாலோ நீர் இக்கோலமானீர்.

நான் விண்முடி தரிக்க நீர் முண்முடி தரித்தீரோ. எனக்கு நீதியின் வஸ்திரம் சம்பாதிக்க நீர் வேதனையோடு சகலாத்தங்கி தரித்தீரோ. நீர் நெரிந்த நாணலை முறிக்காதவர் என்று காண்பிக்கவோ நாணற்கோலைக் கையிற் பிடித்தீர். என்னை மெய்யான இராசாவாக்கவோ நீர் பரிகாச இராசாவானீர்.

ரோமச் சேவகர் என் அருமை இரட்சகரைப் பார்த்து: வாழ்க, யூதருடைய இராசாவே என்றும், பிலாத்து யூதருக்கு அவரைக் காண்பித்து: இதோ, உங்கள் இராசா என்றும் சொல்லிப் பரிகாசம்பண்ணி அவர்மேல் துப்பி, அவர் சிரசில் அடித்து, அவரை அறைகளால் அறைந்து, அவரை அவமதித்தாலும்,

நான் மெய்யாகவே என் முழு இருதயத்தோடும் அவரை என் இராசாவாக ஏற்றுக்கொண்டு, என்னையே அவருக்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்பேன். என்னை அவர் தமது நித்திய இராச்சியத்தில் வைத்துக் காப்பாற்றுவார்.

## செபம்.

அன்புள்ள இயேசுவே, தேவரீர் உமது சரீரத்தில் சகித்த கணக்கில்லாத துன்பங்களையும் கொடுமைகளையுங் குறித்து நான் கேட்கையில் என் ஆவி நடுங்கி என் குலை பதைக்கிறது. தேவரீர் வாரடியுண்கவும் முண்முடி தரிக்கவும் சிவப்பங்கி உடுத்தவுமாயிற்றே. மகிமையுள்ள இராசாவே, கேருபீன்களும் சேராபீன்களும் முகங் குப்புற விழுந்துபணியும் தேவரீரின் திருமுகம், பாவமனுஷரின் உமிழ்நீரால் கறைப்படவும், உமது திருக்கன்னம் அவர்கள் கொடிய கைகளால் அறையுணகவும் என் பாவங்களல்லவோ காரணம். ஆ, என் சீவ நாயகரே, உமது பாடுகளை முன்னிட்டு என்னைத் தேவபுத்திரரின் மகிமையில் சேர்த்துக்கொள்ளும். நான் உமது நிமித்தம் வரும் சகல உபத்திரவங்களையும் உற்சாகமாய்ச் சகிக்க எனக்குப் பலம் தந்தருளும் சுவாமி, ஆமேன்.

நான் சுகிக்க நீர் இக்கட்டு,
துன்பம், வாதை, நோவிடர்
குட்டறை, பொல்லாப்பும் பட்டு
வாரடியு முண்டவர்.
ஆசீர்வாதமே உண்டாக
சாபமானீர் எனக்காக;
உமக்காயிரந் தரம்,
இயேசுவே, சங்கீர்த்தனம்.

ஜீவக்ரீடம் நான் தரித்து,
வாழ்வும் உயர்வும்
தூஷணம் எல்லாம் சகித்து,
நிந்தை துப்புதலையும்
ஏற்றுக்கொண்டு, எண்ணமற்ற
முள்முடியால் சூட்டப்பட்ட
உமக்காயிரந்தரம்,
இயேசுவே, சங்கீர்த்தனம். (46, 3. 4.)

---

## 24. செவ்வாய்க் கிழமை.

### 'இதோ, இந்த மனுஷன்.'

*அவருக்கு உருவமும் இல்லை. மகத்துவமும் இல்லை. நாம் அவரைப் பார்த்தபோது நாம் அவரை இச்சிக்கத்தக்க உருவம் அவருக்கு இல்லாதிருந்தது. அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரில் ஈனமானவரும் வேதனைகளுள்ளவரும் பெல ஈனத்தை அறிந்தவருமாய் இருந்தார். அவரை விட்டு முகங்களை மறைத்துக் கொள்ளலாயிற்று. அவர் அசட்டை பண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாதே போனோம். எசா. 53, 2. 3.*

மறுபடியும், பிலாத்து வெளியே வந்து அவர்களுடனே: இதோ, நான் அவனில் ஒரு குற்றத்தையுங் காணேன் என்று நீங்கள் அறியும்படிக்கு, உங்களுக்கு அவனை வெளியே கொண்டுவருகிறேன் என்றான். அப்படியே இயேசு முள்முடியும் சிவப்புச் சட்டையும் தரிக்கப் பட்டவராக வெளியே வந்தார். அப்போது அவர்களுடனே: இதோ, இந்த மனுஷன் என்றான். பிரதான ஆசாரியர்களும் வேலைக்காரரும் அவரைக் கண்டபோது சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று சொல்லிக் கூப்பிட்டார்கள். பிலாத்து அவர்களுடனே: அவனை நீங்களே

கொண்டுபோய், சிலுவையில் அறையுங்கள்; ஏனெனில் நான் அவனில் குற்றங்காணேன் என்றான். யோவா. 19, 4-6.

---

பொந்தியுப் பிலாத்து இரத்தப்பிரியரான யூதருக்குமுன் இயேசுவை நிறுத்தி, உச்சிமுதல் பாதபரியந்தம் அவருக்கு உண்டாயிருக்கும் எண்ணிறந்த காயங்களையும் அவைகளினின்று பிரவாகமாய் ஓடிவரும் இரத்தத்தையும் சுட்டிக் காண்பித்து, அவர்களைப் பரிதாபத்துக்கென்று எழுப்பிவிட மனமுள்ளவனாய்: இதோ, இந்த மனுஷன் என்றான். ஆனால் அவர்கள் கல்லான மனங் கரையவில்லை. அவர்களின் இரக்கமற்ற மனம் இளகவில்லை. சிலுவையிலறையும், சிலுவையிலறையும் என்றே கூப்பிட்டார்கள். மனுஷனே, நீயும் எத்தனை விசை சிலுவையின் பிரசங்கத்தைக் கேட்டும், குணப்படாமல் உன் இருதயத்தைக் கடினப்படுத்தினாய்.

பலவீன விசுவாசிகளே, நீங்கள் இந்த மனுஷனைப் பாருங்கள். இவர் ரெகாபெயாமைப் போல்: என் தகப்பன் உங்கள் நுகத்தடியைப் பாரமாக்கினார், நான் உங்கள் நுகத்தடியை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளாலே தண்டித்தார், நானோவெனில் தேள்களினாலே தண்டிப்பேன், (1 இரா. 12, 14) என்று சொல்லாமல், உங்கள் பலவீனங்களைத் தமதுமேல் ஏற்றுக்கொண்டு உங்களுக்காகப் பரிதபிக்கிறவராயிருக்கிறார். அவர் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, நமது வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்போம் என்கிறபடியால், பலத்த விசுவாசமுள்ள நூற்றுக்குச் சேர்வைக்காரனுக்கும், பெரிய விசுவாசம் உள்ள கானான்

இஸ்திரிக்கும் மாத்திரமல்ல, விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசத்துக்கு உதவிசெய்யும் என்றும், ஆண்டவரே, என் விசுவாசத்தை விர்த்திக்கப் பண்ணும் (லூக். 17, 5) என்றும் கெஞ்சுகிறவர்களுக்கும் சகாயம் செய்கிறவராய் இருக்கிறார்.

டம்பப்பிரியரே, நீங்கள் இந்த மனுஷனைப் பாருங்கள். புறம்பே மயிர்ப்பின்னலும் பொன்னுபரணம் பூணுதலும் வஸ்திரம் உடுக்குதலுமே மெய் அலங்காரம் என்று எண்ணிக் கெட்டுப்போகிற உங்கள் அகந்தையின் நிமித்தமும் டம்பப் பிரியத்துக்காகவுந் தானே இயேசுநாதர் அலங்கோலமானார். உங்கள் பெருமையைத் தவிர்க்க அல்லவோ அவர் சிறுமையை அடைந்தார். நீங்கள் இவரைப் பார்த்த பின்னும் உங்கள் கேட்டில் நிலைநிற்பீர்களாகில் எசா. 3, 16 - 24-ல் உள்ள பயமுறுத்தல் உங்களிடத்தில் நிறைவேறும்.

துன்பப்படும் ஆத்துமாக்களே, இந்த மனுஷனைப் பாருங்கள். இவரைக் காணும் காட்சி பராபரன் பாவத்தை எவ்வளவாய் அருவருக்கிறார் என்று காண்பிப்பதுடன் பாவிகளுக்காகப் பரிதபிக்கும் பிதாவடைவான மனதையும் வெளிப்படுத்துகிற தல்லவோ. தமது சிநேகிதருக்காக அல்ல, தமது சத்துருக்களுக்காகப் பாடுபடும் இவருக்கு ஒப்பான உருக்க இரக்கம் யாருக்கு உண்டு. ஆகையால் பிரயாசப்பட்டுப் பாரஞ் சுமந்தவர்களாகிய நீங்கள் எல்லாரும் அவரண்டை வாருங்கள். அவர் உங்களை முசிப்பாற்றுவார் (மத். 11, 28). சகல துன்பத்தையும் பொறுமையாய்ச் சகிக்கும் பொறுமைச் சொரூபியாகிய அவரை விசுவாசிக்கிற நீ பொறுமையற்றிருப்பதெப்படி.

ஆத்துமாவே, உனக்காகச் சொல்லிமுடியாத வேதனைகளைச் சகித்த இந்த மனுஷனை உன் விசுவாசக்கண்ணால் நோக்கிப் பார்த்துப் பற்றிக்கொள்வாயானால், நீ அவரை முன்னிட்டு மோட்சத்தில் பிரவேசிக்கையில்: இதோ, இந்த மனுஷனைப் பாருங்கள்; பாவியான மனுஷன் பரிசுத்தனாகவும், பிசாசின் பிள்ளை தேவபிள்ளையாகவும், நரகத்தின் மகன் மோட்சசுதந்தரவாளியாகவும் மாறினதைப் பாருங்கள் என்று உன்னைக் குறித்து ஆனந்தமாகச் சொல்லப்படும்.

நீ அவரை விசுவாசியாமல் பாவக்கேட்டில் நிலைத்திருப்பாயேயானால், நீ நரகத்தில் விழுகையில் அங்குள்ள பிசாசுகள் உன்னைக் காட்டி: இதோ, இந்த மனுஷனைப் பாருங்கள். நாங்கள் மீட்பரில்லாமல் கெட்டோம்; இவனோ தனக்காகப் பாடுபட்டு நித்திய இரட்சிப்பைச் சம்பாதித்த மீட்பர் இருந்தும் கெட்டுப்போனான், எத்தனை பெரிய வெட்கம் என்று சொல்லி உன்னை வாதிப்பதற்கு இடமாகும்.

## செபம்.

இயேசு சுவாமி, தேவரீரை உமது சத்துருக்கள் பொல்லாத அக்கிரமக் கண்களால் நோக்கிப் பார்த்துப் பரிகாசம் பண்ணினார்களே. நானோ மெய் விசுவாசமாய் உம்மை நோக்கிப் பார்க்கத்தக்கதாக என் கண்களைத் திறந்தருளும். உமது திருப்பாடுகளின் இரகசியத்தை நான் கண்ணூன்றிப் பார்த்து, அதை என் இரட்சிப்புக்கென்று இரவும் பகலும் தியானிக்க எனக்கு ஒத்தாசை செய்தருளும். நான் என் சீவநாளெல்லாம் தேவரீருடைய பரிசுத்த அடிச்சுவடுகளைப் பின்பற்றவும், எனக்கு வரும் எல்லா உபத்திரவங்களிலும் உமது பாடுகளை நினைத்து ஆறுதல் அடை

யவும் பண்ணியருளும். விசேஷமாய், நான் மரிக்கை யில், தேவரீரை எனக்காகப் பாடுபட்டுச் சிலுவையில் மரித்தவராய் நோக்கிப் பார்த்துப் பாவமன்னிப்பின் நிச்சயம் பெற்றவனாய் உமது நித்திய மோட்ச ராச்சி யத்தில் சேர்ந்து, உம்மை என்றைக்கும் தோத்திரிக் கும் பாக்கியத்தை எனக்குக் கட்டளையிட்டருளும் சுவாமி, ஆமேன்.

இதோ, மரத்தில் சாக
உன் ஜீவன் உனக்காக
பலியாம், லோகமே.
பொல்லாப்படி மிகையை
சகிக்கும் மா துரையை
கண்ணோக்குங்கள், நராட்களே.

ஆர் உம்மைப் பட்சமான
கர்த்தா, இத்தன்மையான
வதைப்பாய் வாதித்தான்.
நீர் பாவியாயிரீரே,
பொல்லாப்பை அறியீரே;
ஆர் இந்தக் கேடுண்டாக்கினான்.

ஆ, இதைச் செய்தோன் நானும்
என் அக்ரமங்கள் தானும்
கடற்கரை மணல்
அத்தன்மையாய்க் குவிந்த
என் பாதகங்கள் இந்த
வதைப்புக் காதி மூலங்கள். (51, 1. 3. 4.)

---

## 25. புதன் கிழமை.

### பிலாத்துவின் தீர்ப்பு.

காயீன் தன் சகோதரனாகிய ஆபேலுக்கு விரோதமாய் எழும்பி அவனைக் கொன்று

போட்டான். அப்போது கர்த்தர் சொன்ன தாவது: என்ன செய்தாய், உன் சகோதர னுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து நம்மை நோக்கிக் கூப்பிட்டுக் கொண்டிருக் கிறது என்றார். 1 மோ. 4, 8. 10.

பிலாத்து ஒன்றுமாகாமல், கலகம் அதிகப்படுகிற தென்று கண்டு, தண்ணீரை அள்ளி, கும்புக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தத்துக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பாருங்கள் என்றான். சனம் எல்லாம் பிரத்தியுத்தாரமாக: அவனுடைய இரத்தம் எங் கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என் றார்கள். அப்போது அவன் பரபாவை அவர்களுக்கு விடு தலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்துச் சிலு வையில் அறையப்படுவதற்கு ஒப்புக் கொடுத்தான். மத். 27, 24-26; லூக். 23, 24.

---

பிலாத்து தன்னை நியாயமும் நீதியும் ஆளாமல் மனுஷபயமும் தற்பொழிவும் ஆள இடங்கொடுத்து மனுஷ தயவை நாடிக் கெட்டுப்போகிறான். ஆத்து மாவே, நீ இவனைப்போல் அடிக்கடி செய்ததில்லையோ. இது மகா நிர்ப்பந்தமே.

ஐயோ, இந்த அக்கியான துரை தன் சித்தத் துக்கும் மனச்சாட்சிக்கும் விரோதமாய்ச் சீவனின் அதிபதியும் சீவனுள்ள பராபரனுடைய குமாரனு மாகிய பரிசுத்த வஸ்துவுக்கு மரணத் தீர்ப்பிட்டது எத்தனை பயங்கரம். இது நமது பாவங்களின் கொடு மையால் வந்த பலன் தானே.

ஆத்துமாவே, பிலாத்துவின் அநீதத் தீர்ப்பு நமக்கு நீதி உண்டாவதற்கான வழியாயிற்றென்று அறிந்து கர்த்தரை ஸ்தோத்திரி. ஏனெனில் இவரை

விசுவாசிக்கிறவர்கள்: சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு அகன்று போங்கள் என்கிற பயங்கர சத்தத்தைக்கேட்கவேமாட்டார்கள். கிறிஸ்தவனே, நீ தேவ நியாயாசனத்தண்டை தேவதூதரும் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தவான்களுமாகிய திரள் சபைக்கு முன் நீதிமானென்று தீர்ப்புபெற, திரள் கும்புக்கு முன் குற்றமற்ற இயேசு குற்றவாளியாகக் கொலைத் தீர்ப்பைப் பெற்றார். இப்போதும் பராபரன் தெரிந்துகொண்டவர்களைக் குற்றஞ் சுமத்துபவன் ஆர், பராபரன் தாம் நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பவன் ஆர், கிறிஸ்துதான் மரித்தவர் (రோ. 8, 33. 34).

தான் கொலைத் தீர்ப்பிட்டுச் சிந்தும் இரத்தம் நீதிமானுடைய இரத்தம் என்று அவன் மனச்சாட்சி திட்டமாய் அவனுக்குத் தெரிவித்தது. அவர் நீதிமான் என்பதுக்கு அவர் திருமுகம், திருவாக்கு, சாட்சிகளின் ஒவ்வாமை, பெண்சாதியின் சொப்பனம் முதலிய யாவும் சாட்சி பகர்ந்தது. இவனில் நான் ஒரு குற்றமும் காணேன் என்று பிலாத்து தானே பலமுறையும் சனங்களுக்குச் சொன்னான். ஆகிலும், அவன் அவரைக் கொலைபுரியத் தீர்ப்பு செய்ததால், அவன் தன்னைக் குற்றப்படுத்தும் மனச்சாட்சியை அமர்த்தும்படி தண்ணீரை அள்ளிக் கைகளைக் கழுவுகிறான்.

பிலாத்து துரையே, உன் அறிவும் ஞானமும் இவ்வளவுதானோ. கை அழுக்கு நீங்குவதால் மன அழுக்கு நீங்குமோ. நீ யோர்தான் நதியின் தண்ணீரை எல்லாம் வார்த்து, உன் கைகளையும் கால்களையும் உன் தலையையுங்கூடக் கழுவினாலும், உன் மனச்சாட்சியைச் சுத்திகரிக்கமாட்டாய். ஆ, நீ உன் இரு

தயத்தைக் கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவுவாயானால் உத்தமம்.

அவருடைய இரத்தம் எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாக என்று தாம் தாமே பயங்கரத் தீர்ப்பிட்டுக் கொள்ளுகிற இந்த யூதரின் நிலைமை எத்தனை பயங்கரம். யூதர்களே, நீங்கள் உங்கள் ஆக்கினைக்கென்று தெரிந்துகொண்ட இயேசுவின் இரத்தம் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் லேசாய் விட்டுவிட்டதோ. அது உங்களில் அநேகர் கண் காண உங்கள் தலைநகரத்தைக் குப்பை மேடாக்கவில்லையோ. உங்களில் அநேகரையும் அநேக பிள்ளைகளையும் சிலுவைகளில் அறைவிக்கவில்லையோ. 19 நூற்றுண்டுகளாகியும், அந்த இரத்தப்பழி இன்னம் உங்களை விடாமல் உலகம் எங்கும் சிதறடித்திருக்கிறதைச் சர்வலோகமும் காணுகிறதே. நீங்கள் கொலை புரிந்த இயேசுவின் இரத்தம் உங்கள் இரட்சண்யத்துக்கென்று உங்கள் பேரிலும் உங்கள் பிள்ளைகள் பேரிலும் தெளிக்கப்பட்டால் நல்லது.

## செபம்.

எங்களுக்காக அடிக்கப்பட்ட தேவாட்டுக்குட்டியாகிய இயேசுநாதரே, யூதர் தங்கள் ஆக்கினைக்கென்று தங்கள் பேரிலும் தங்கள் பிள்ளைகள் பேரிலும் வரவிட்டுக்கொண்ட உமது இரத்தம் என்னைப் பாவங்களறக் கழுவி, என் அக்கிரமங்களறச் சுத்திகரிப்பதற்காக என்மேல் வரக்கடவது. தேவரீர் அநியாயமாய் மரண ஆக்கினைத்தீர்ப்புப்பெற்றதால், நான் நியாயமாகத் தெய்வகோபாக்கினைத் தீர்ப்புக்கு நீங்கலாக இடமானது எனக்கு மகா பெரிய ஆறுதலும் சந்தோஷமுமாயிற்று. இயேசுவே, நான் கடைசி

நாளில் உமது நியாயாசனத்துக்கு முன் நிற்கையில் உமது புண்ணியங்களால் இரட்சிக்கப்பட்டவனாகவும், நரகாக்கினைக்கு நீங்கலனவனாகவும் கண்டு பிடிக்கப் பட உமது பரிசுத்த இரத்தத்தினிமித்தம் எனக்கு ஒத்தாசை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

*அன்புள்ள ஸ்வாமி, நீர் நிர்ப்பந்தமாக*
*மரிக்கத் தீர்க்கப்பட்ட தேதுக்காக,*
*நீர் என்ன செய்தீர், தேவரீரின் மீது*
*என் இந்தத் தீது.*

*இவ்வாதை யாவும் உமக்கெதினாலே*
*உண்டாயிற்று, ஐயோ, என் பாவத்தாலே.*
*அதும்மை ஸ்வாமி, இத்தனை அடித்து*
*வதை பண்ணிற்று.* (50, 1. 3.)

---

## 26. வியாழக் கிழமை.

### சிலுவைப் பாதை.

*அவர் ஒரு ஆட்டுக்குட்டியைப்போல்*
***அடிக்கப்படக் கொண்டுபோகப் பட்டார்.***
எசா. 53, 7.

*அவரைப் பரிகாசம் பண்ணினபின்பு, அவருக்கு உடுத்தின சிவப்பான சட்டையைக் கழற்றி, அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறைய வெளியே கொண்டுபோனார்கள். அவர் தம்முடைய சிலுவையைச்சுமந்துகொண்டு, எபிரேயிலே கொல்கத்தா என்று சொல்லப்படும் தலையோட்டிடம் என்ற ஸ்தலத்துக்குப் புறப்பட்டுப் போனார். அவர்கள் அவரைக் கொண்டுபோகிறபோது, வயலிலிருந்து வந்துகடந்துபோகிற அலெக்சாந்தருக்கும் ரூப்புக்கும் தகப்பனான கிரேனே ஊரானாகிய சீமோன் என்கிற ஒருவனைப் பிடித்து, அவன்*

மேல் சிலுவையைச் சுமத்தி, அதை இயேசுவின் பிறகே சுமந்துவரப் பலவந்தம் பண்ணினார்கள். மத். 27, 31. 32; மாற். 15, 20. 21; லூக். 23, 26; யோவா. 19, 16. 17.

---

பிலாத்துவினுடைய அதிகார வீட்டிலிருந்து புறப்படுகிற இவர் ஆர். உச்சிமுதல் பாதபரியந்தம் அவருக்கு இரத்தமயமாயிருக்கிறதே. சிரசு வீங்கியிருக்கிறதே. கன்னம் அதைத்திருக்கிறதே. சீயோன் குமாரத்தியே, அவரை நான் உற்றுப் பார்க்கையில் அவர் உன் நேசரைப்போல் காணுகிறது. ஏனெனில் உன் நேசர் வெண்மையும் சிவப்புமானவரல்லவோ (உன். 5, 10). இவர் பரிசுத்தரும், சிநேகம் நிறைந்தவருமாய் இருக்கிறார் என்று சர்வமும் சாட்சி பகருகிறது.

ஆத்துமாவே, தெய்வபக்தியுள்ள ஆபேல் தமது பொல்லாத சகோதரரால் கொலைக் களத்துக்குக் கொண்டுபோகப்படுகிறார். கீழ்ப்படிதலுள்ள ஈசாக்கு தமது தகப்பனால் சர்வாங்க தகன பலியாக்கப்படப் போகிறார். பலிக்கேற்ற ஆட்டுக்குட்டி பலிபீடத்துக்குப் போகிறது. பலிமிருகத்தின் உடல் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப் படுகிறதுபோல் இயேசுவும் தம்முடைய சுய இரத்தத்தினாலே சனத்தைப் பரிசுத்தம் பண்ணுவதற்காக, பட்டணவாசலுக்குப் புறம்பே பாடுபடப் போகிறார் (எபி. 13, 11. 12). நமது கர்த்தர் மகிமையுள்ள இராசாவாகத் தமது சபையோடு புது எருசலேமுக்குள் பிரவேசிக்க வழி உண்டாக்கும்படி, இப்பொழுது நிர்ப்பந்த கோலமாகப் பொல்லாதவர்களின் கூட்டத்தோடு பழைய எருசலேமுக்கு வெளியே புறப்படுகிறார்.

ஆத்துமாவே, உன் கர்த்தர் எவ்வளவு அலங்கோலமாய் இருகள்ளர் நடுவே போகிறார். இவர்கள் சுமக்குஞ் சிலுவையிலும், அவருடைய சிலுவை பாரமானதல்லவோ. சர்வலோகத்தின் பாவமும், விசேஷமாய் உன் பாவமும் சொல்லிமுடியாத பாரந்தானே. ஆகையால் அவர் உன்னை நோக்கி: நீ உன் பாவங்களினாலே நம்மைப் பிரயாசப்படுத்தி, உன் அக்கிரமங்களினாலே நம்மை வருத்தப் படுத்தினாய் என்கிறார் (எசா. 43, 24). பகைஞனுடைய கழுதையாயிருந்தாலும் அதைத் தன் சுமையின்கீழ் கிடக்கக் கண்டால், அதற்கு உதவவேண்டியவர்கள் (2 மோ. 23, 5) மகா பலவீனத்தோடும் நோவோடும் தள்ளம்பாறி நடக்கிற நமது மீட்பருக்கு உதவ மனமற்றவர்களா யிருந்தார்கள். ஆகிலும், அவரை வழியிலே சாகவிடாமல் சிலுவையிலே அறைய வேண்டும் என்கிற எண்ணத்தால் அவர் சிலுவையைத் தூக்கச் சீமோனைக் கட்டாயப் படுத்தின கல்நெஞ்சரா யிருந்தார்கள்.

இந்தச் சீமோன் ஒவ்வொரு கிறிஸ்தவனையுங் காட்டுகிற படமாயிருக்கிறான். ஏனெனில் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசுவின் சிலுவையைச் சுமக்க வேண்டியவன். யாதொருவன் என் பிறகே வர வேண்டுமென்றால், தன்னைத்தான் வெறுத்துத் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின் செல்லக் கடவான் (மத். 16, 24) என்று இயேசு சொல்லுகிறார். நீ சுமக்க வேண்டிய அவர் சிலுவையோ பாரமல்ல. ஏனெனில் சிலுவையைப் பெரும் பாரமாக்கும் பாவத்தைக் கிறிஸ்து சுமந்து தீர்த்துவிட்டாரே. இதனால் அல்லவோ அவர் தமது சீஷருக்கு அனுப்பும் துன்பச் சிலுவை இன்பச் சிலுவை ஆகி

றது. ஆகையால் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு கிறிஸ்துவைப் பின் செல்லாதவன் அவருக்குப் பாத்திரவான் அல்ல (மத். 10, 38).

சீமோனுக்குக் கிறிஸ்துவின் சிலுவை முந்தக் கசப்பாயிருந்தது. கட்டாயத்தினால் மாத்திரம் அவன் அதைக் கிறிஸ்துவின் பிறகே சுமந்துபோனான். பின்னான காலத்திலோ சிலுவை அவனுக்கு இனிப்பாயிற்று. ஏனெனில் அவனும் அவன் பிள்ளைகளாகிய அலெக்சாந்தரும் ரூப்பும் கிறிஸ்துவைப்பற்றும் மெய் விசுவாசிகளாய்த் திருச்சபையில் விளங்கினார்கள்.

## செபம்.

அன்புள்ள இயேசு நாதரே, குற்றமற்ற பலி ஆடே, தேவரீர் என் நிமித்தம் சொல்லிமுடியாத வேதனைகளைச் சகித்து, மிகுந்த பாரமுள்ள சிலுவை மரத்தைக் கொலைக் களத்துக்குத் தூக்கிக்கொண்டு போகச் சித்தமானதற்காக உமக்கு ஸ்தோத்திரம். உமது நிமித்தமாக நான் சுமக்கவேண்டியதா யிருக்கும் துன்பச் சிலுவையைப் பொறுமையோடும் சந்தோஷத்தோடும் நான் சுமந்து, உம்மைப் பின்செல்வதற்கு என்னைப் பலப்படுத்தியருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஆ, இயேசுவே, தேவரீருடைய திருப்பாடுகளின் புண்ணியத்தால் இரட்சிக்கப்பட்டுப் பரம எருசலேமுக்குள் பிரவேசிக்கும் எண்ணிறந்த விசுவாசிகளின் கூட்டத்திலே அடியேனும் இருக்கும்படி அனுக்கிரகம் செய்தருளும் சுவாமி, ஆமேன்.

வாழ, சிலுவையே, வாழ
பாரமற்ற பாரமே,
வாற உன்னை மனதார
தோள்மேல் ஏற்றுக்கொள்வேனே.

பாளையத்துக்கு வெளியே
நமதாண்டவரைப்போல்
அவர் மாதிரிப்படியே
நாமும் போவோம் வாருங்கள்.
அவரைப் பின்செல்வோமாக,
சிலுவையின் தோழரே,
அவரைப் புகழ்ச்சியாக
தோத்திரிப்போம் நோவிலே (255, 1. 21. 17.)

---

## 27. வெள்ளிக் கிழமை.

### எருசலேம் குமாரத்திகளுக்குப் பிரசங்கம்.

கர்த்தர் தமது கோபத்தினுடைய உக்கிரத்தின் நாளிலே என்னைச் சஞ்சலப்படுத்தினதினால் எனக்கு உண்டுபண்ணப்பட்ட என்னுடைய நோவுக்குச் சரியான நோவு உண்டோ என்று நோக்கிப்பாருங்கள். புலம். 1, 12.

வெகுதிரள் சனமும், அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவரைப் பின்சென்றார்கள். இயேசு அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொன்னதாவது: எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். ஏனெனில், இதோ, மலடிகளும், பிள்ளை பெற்றிராத கர்ப்பங்களும் உண்ணக் கொடுத்திராத முலைகளும் பாக்கியமுள்ளதென்று சொல்லப்படும் நாட்கள் வரும். அப்போது பர்வதங்களுடனே: எங்கள் மேல் விழுங்கள் என்றும், குன்றுகளுடனே: எங்களை மறைத்துப் போடுங்கள் என்றுஞ் சொல்லத் தொடங்குவார்கள். ஏனெனில் பச்சை மரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்ட மரத்துக்கு என்ன செய்யப்படும் என்றார். லூக். 23, 27-31.

---

இரட்சகர் கொலைக்களத்துக்குப் போகையில் அவரைப் பின்சென்று வந்த திரள் ஜனக்கும்பில் அநேக தெய்வபக்தியுள்ள ஸ்திரீகளும் இருந்தார்கள். அவர்கள் வேடிக்கை பார்க்கிறவர்களாய்ப் போகாமல், தங்கள் அன்பான போதகரும் அரிய சிநேகிதரும் பெரிய உபகாரியுமானவருக்குத் தங்கள் சனத்தாரால் அநியாயமாய் இவ்வகைத் துன்பங்கள் நேரிட்டதே என்று விசனமுற்று அழுது புலம்புகிறவர்களாய்ப்போகிறார்கள். நமது அருமை மீட்பரோ தமது சொல்லிமுடியாத வேதனைகள் நடுவிலும் தமது திருவாயைத் திறந்து, அவர்களுக்குக் கடைசிப் பிரசங்கத்தைச் செய்யத் தவறாதேபோனார். ஆத்துமாவே, அவர் திருமுகத்தை நோக்கு, அவருடைய திருவார்த்தைக்குச் செவிகொடு.

எருசலேமின் குமாரத்திகளே, எனக்காக அழாதேயுங்கள் என்கிறார். ஏனெனில் அவருக்கு யூதர்கள் வருவித்த பாடுகள் என்றைக்கும் அவர்பேரில் நிற்காது. முடிந்தது என்று சொல்வதற்கான நேரம் மிகவும் சமீபித்தது. அவர் சத்துருக்கள்மேல் வெற்றி சிறக்கும் நாள் சீக்கிரம் வருவது நிச்சயம். அப்படியிருப்பதால், அவருக்காக அழத் தேவையில்லையே. ஆத்துமாவே, நீயும் இரட்சகர் பாடுபட்ட சரித்திரத்தை மாமிசப்பிரகாரம் நிதானித்து, இரட்சகருக்காகப் பரிதபிக்கிறவனாய் துரோகியாகிய யூதாவையும், சத்திய விரோதிகளாகிய யூதசங்கத்தாரையும், அநீதனாகிய பிலாத்துவையும், இரக்கமில்லாத சேவகரையும் நிந்தித்துப் பேசுவதில்தானே காரியமில்லை.

உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள் என்கிறார். ஏனெனில் சரியாய்ச் சொன்னால் பாவிகளாகிய நாம் அல்லவோ அவரைப் பாடு

படுத்தினவர்கள். நமது பாவங்களல்லவோ அவர் தலைக்கு முண்முடியும், அவர் முதுகுக்கு வாரும், அவர் கைகால்களுக்கு ஆணிகளும், அவர் விலாவுக்கு ஈட்டியும் ஆயிற்று. ஆகையால் நாங்கள் துரோகஞ் செய்து கலகம் பண்ணினோம் (புல. 3, 42) என்று அறிக்கையிட்டு, மெய்த்தவசின் கண்ணீரை உதிர்ப்பதே நியாயம்.

மனுஷனே, நீ கனிகொடாத மரம், பட்டுப்போன கட்டை என்பது மெய்யே. உன்னை நித்திய அக்கினிக்கு இரையாக்குவது நியாயமே. ஆகிலும் கலங்காதே, தவிக்காதே. உன் நிமித்தமே பச்சைமரமும் சீவவிருட்சமுமாகிய இயேசுநாதருக்கு இத்தனை பாடுகள் உண்டாயிற்று. இவர் நிமித்தம் பிதா உன் பாவங்களை எல்லாம் மன்னித்து, உன்னைத் தமது பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளுவார்.

ஆனால் யார் குணப்பட்டு மனந்திரும்பி, தங்களுக்காகப் பாடுபட்ட அருமை இரட்சகரை மெய்விசுவாசத்தால் பற்றிக்கொள்ளாதே போகிறார்களோ, அவர்கள் ஓயாமல் புலம்பி, ஒழியாத கண்ணீர்விடும் நாள் காத்திருக்கிறது. அது இயேசு சுவாமி வல்லமையுள்ள நியாயாதிபதியாக மகிமையோடு வெளிப்படும் நியாயத் தீர்ப்பின் நாள்தானே. (இதற்கு எருசலேம் நகர் அழிந்த நாள் முற்குறிப்பாயிருந்தது). அந்தப் பயங்கர நாளில் அவிசுவாசிகளுக்கு எங்கும் ஒதுக்கிடம் அகப்படாது. எந்தச் சிருஷ்டியும் உதவி செய்யாது. தங்களுக்காகத் தங்கள் சாயலாய்த் தங்கள் நடுவே வந்த தங்கள் இராசாவும் இரட்சகருமானவரை அசட்டைபண்ணித் தள்ளின பேரை அவருடைய கோபத்துக்கும் ஆக்கினைக்கும் விலக்கமாகப்

பர்வதங்கள் மூடிக்கொள்ளுமோ, குன்றுகள் மறைத்துக்கொள்ளுமோ. அந்நிய பாவங்களைச் சுமந்துகொண்ட பிணையாளியாகிய பச்சை மரத்துக்கு இப்படியானால், சுய பாவத்தின் பலனை அனுபவிக்கும் பட்ட மரத்துக்கு எப்படியாகும். நானோ நித்திய புலம்பலுக்கும் அழுகைக்கும் ஆளாகாதபடிக்கு இப்பொழுதே என் கர்த்தராகிய அவரைப் பற்றிக்கொள்வேன்.

## செபம்.

ஆ, இயேசுவே, தேவரீர் என்னையும் நோக்கி நான் என் பாவத்திற்காக மெய்த்தவசின் கண்ணீரைவிடவேண்டுமென்று சொல்லுகிறீரே. தேவரீர் உம்முடைய வேதனைகளினாலும் மரணத்தினாலும் என்னைக் குணப்படுத்தி, என் பாவங்களை நிவிர்த்தி செய்தருளும். நான் நியாயத் தீர்ப்பின் நாளில் குற்றஞ் சுமத்தப்படாமல், நித்திய சந்தோஷத்துக்குள் பிரவேசிக்கும்படிக்கு என்னை உமது வீட்டின் முற்றத்தில் பச்சை மரமாக நாட்டியருளும். தேவரீர் என் கன்மலையும், என் கோட்டையும், என்னை விடுவிக்கிறவரும், என் பராபரனும், நான் நம்பியிருக்கிற என்னுடைய குன்றும், என் கேடையமும், என் இரட்சிப்பின் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறீர் சுவாமி, ஆமேன்.

ஆ, இயேசுவே, நீர் பாடுபட்ட
சரித்திரத்தைக் கேட்கிறோர்
அநேகர் தங்கள் மா பலத்த
மாயத்திலே அசைவற்றோர்.
சிலர் யூதாவையும், சிலர்
காய்பாவையும் பழிப்பவர்.

நீர் பட்டதை நன்றாய்ச் சிந்தித்து,
சபிக்கப்பட்ட பாவங்கள்
அனைத்தையும் பகைத்துவிட்டு,
அவ்வேதனைகளின் திரள்
தங்களினால் உண்டானதே
என்றறியும் பேர்கள் கொஞ்சமே.
நான் மெத்த மனக் கஸ்தியாக
என் பாவங்கள் நிமித்தியம்
புலம்பி அழத் தக்கதாக
தெய்வீகமான துயரம்
என் உள்ளத்தை அனைத்தையும்
நிரப்பக் கட்டளையிடும். (61, 1. 3. 7.)

---

## 28. சனிக் கிழமை.

### சிலுவையில் அறைதல்.

என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள். சங். 22, 17.

குற்றவாளிகளாகிய வேறே இரண்டு பேரும் அவரோடே கூடக் கொலை செய்யப்படுவதற்குக் கொண்டுபோகப் பட்டார்கள். அவர்கள் கொல்கத்தா என்னப்படுகிற ஸ்தலத்துக்கு வந்தபோது, அவரையும், அவருடனே கூட அந்தக் குற்றவாளிகளையும், ஒருவனை வலது பக்கத்திலும் ஒருவனை இடது பக்கத்திலும் இயேசுவையோ நடுவிலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்படியே, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார் என்கிற வேத எழுத்து நிறைவேறிற்று. மத். 27,33. 34; மாற். 15,22.23; லூக். 23, 33; யோ. 19, 7.

---

எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன் (சங். 121, 1). உலகத்திலுள்ள சகல பர்வதங்களிலும் உன்னதமாக ஏழைப் பாவியாகிய என் கண்ணுக்குமுன் நிற்பதென்ன. உலகத்தாரால் கபாலமலை என்று அசட்டை பண்ணப்பட்ட கொல்கத்தா மலையல்லவோ. ரோமரின் கழுமேடாகிய இது அவிசுவாசிகள் இடறுண்டு விழும் மேடு, விசுவாசிகள் இரட்சண்யத்துக்கென்று எழும் மேடு. ஆத்துமாவே, இதோ, அதின் மேல் மூன்று சிலுவைகள் நிற்கின்றன. நடுச்சிலுவை பிரதான பாவியாகிய எனக்குப் பிரதான சிலுவையாகத் தோன்றுகிறது. அதில் தொங்குகிறவரை நன்ருய் அறிவேன். அவர் எனக்கென்று நீச வேஷமெடுத்த நேசர் என்று காணுகிறது. பிசாசுக்கும் பாவத்துக்கும் அடிமையாகிய என்னை விடுதலை பண்ணிப் பராபரனுடைய பிள்ளையாக்க அவர் அடிமைவேஷம் எடுத்ததுமன்றி அடிமைபோல் சிலுவையில் அறையுண்கவும் சித்தமானுரே. நான் இனி பாவத்துக்கு அடிமையாயிருப்பது எப்படி. அக்கிரமம் என்னை ஆண்டு கொள்ளலாமோ.

அவர் என் சாபத்தை நிவிர்த்திசெய்ய வந்த சற்குரு அல்லவோ. நியாயப் பிரமாணத்தை மீறி நடக்கிறவனெல்லாம் சபிக்கப்பட்டவன். என் சொல்லி முடியாத பாவங்களின் நிமித்தம் சாபத்துக்குள்ளான எனக்கும் பரம ஆசீர்வாதங்களைச் சம்பாதிப்பதற்குப் பாவமறியாத அவர் மரத்தில் தூக்கப்பட்டுச் சாபமாகி (கலா. 3, 3), வானத்தால் தள்ளப்பட்டவராகவும் பூமியால் விலக்கப்பட்டவராகவும் வானத்துக்கும் பூமிக்கும் நடுவே அந்தரமாய்த் தொங்கச் சம்மதித்தது எத்தனை பெரிய நேசம்.

அவரை நான் உற்றுப் பார்க்கும்போது என் விஷத்தை இறக்க வந்த வெண்கலச் சர்ப்பம் என்று தெரியவருகிறது. ஆதாமையும் அவன் வித்தாரையும் கொள்ளிவாய்ச் சர்ப்பத்திலும் கொடிதாகிய ஆதி சர்ப்பம் கடித்து, விஷந் தலைக்கேறி, பாவத்தாலும் அக்கிரமத்தாலும் அவர்கள் மரித்துக்கிடந்தார்களே. (எபே. 1, 1). அவர்களுக்கு உயிர் கொடுத்து உயர்த்தும்படிக்கு, என் மீட்பர் சிலுவைமரத்தில் உயர்த்தப்படத் தம்மை ஒப்புக்கொடுத்தார். ஆத்துமாவே, அவரையே நோக்கிப் பார்த்துச் சீவன் அடை. (யோவா. 3, 14. 15).

நான் அந்தச் சிலுவைமரத்தை நோக்கிப் பார்க்கையில் என் ஆதித்தாய் கனி பறித்த மரத்தின் ஞாபகம் எனக்கு வருகிறது. விலக்கப்பட்ட மரத்தண்டை அவள் கால்கள் ஓடினதற்காக என் அன்புள்ள கர்த்தரின் திருக்கால்களையும், விலக்கப்பட்ட கனியை அவள் கை தீவரித்துப் பறித்ததற்காக அவர் கைகளையும் உருவக் குத்தும்படி (சங். 22, 17) மனதாரச் சம்மதித்தாரே. இந்த உன்னத நேசத்துக்கு நான் என்ன ஈட்டைச் செலுத்தப்போகிறேன்.

நான் பாவத்தினால் பரமபரதீசுக்குத் தூரமாகி, இந்தப் பூதலமாகிய கண்ணீர்க் கணவாயிலிருந்து தவித்துப் புலம்பிக்கொண் டிருக்கையில், பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் இடையிலுள்ள பெரும் பிளப்பைக் கடக்கத்தக்க ஒரு பாலத்தைப் பராபரனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராய் வந்த என் அருமை ரட்சகர் அறையுண்ட சிலுவைமரத்தில் கண்டு களிகூர்ந்தேன். ஆத்துமாவே, நீ பரமநகரஞ் செல்வதற்கு இயேசுவின் சிலுவையேயன்றி வேறு வழியில்லை. அவர் தம்மண்டை வருகிற பாவியைப்

புறம்பே தள்ளுவதற்கு ஆணிகடாவப்பட்ட அவர் கைகளால் முடியாது.

## செபம்.

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தெய்வ ஆட்டுக்குட்டியே, தேவரீர் என்னைத் தேவ கோபம், சாபம், நரகம் என்றவைகளிலிருந்து இரட்சிக்கும்படிக்குச் சிலுவையில் அறையுண்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம். நான் எனக்கு நேரிடும் சகல சோதனையிலும், மனச் சாட்சியின் வேதனையிலும், சிலுவையில் அறையுண்ட உம்மை மாறுக் கண்ணால் நோக்கிப் பார்த்து ஆறுதலடைய எனக்குத் துணை செய்தருளும். நான் உம்மைப் பற்றும் விசுவாசத்தால் என் மாமிசத்தைச் சிலுவையில் அறைந்து ஆவியின்படி பிழைக்க என்னைப் பலப்படுத்தியருளும் சுவாமி, ஆமேன்.

மரத்தில் ஆணிகளினால்
கடாவப்பட்டுத் தொங்கி,
உள்ளே வியாகுலங்களால்
நிறையப்பெற்றுப் பொங்கி,
புறம்பே ரத்த ஊற்றானார்.
எத்தால் இக்கேட்டுக்குட்பட்டார்,
சிநேகத்தாலே தானே.
ஆ, உமதன்புக் கேற்றதாம்
துதியை ஆர் செலுத்தலாம்,
மகா இரக்கவானே. (44, 4.)

---

### ஒருசந்தியின் ஐந்தாம் ஞாயிறு.

நிரு. எபிரே. 9, 11-15. சுவி. யோ. 8, 46-59.

---

## 29. திங்கள் கிழமை.

### முதலாம் வார்த்தை.

அவர் பாதகரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகரானவர்களின் பாவத்தைத் தாமே சுமந்து, பாதகருக்காக வேண்டிக் கொண்டார். எசா. 53, 12.

இயேசுவோ: பிதாவே, அவர்களுக்கு மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியார்கள் என்ருர். மாற். 15, 26; லூக். 23, 34.

---

உன்னத பராபரனுடைய குமாரனுகிய பரிசுத்தரைச் சிலுவையில் அறைந்ததால் பாவம் தன் உச்சிக்கு வந்தது. பராபரனுடைய கோபம் தன் சகல கொடுமையோடும் பற்றி எரிவதற்கான வேளை வந்தது. ஆகிலும், அப்படி நடவாதபடி என் உத்தம மத்தியஸ்தரும் பிரதான ஆசாரியருமானவர் எனக்காகப் பலிசெலுத்துவதுடன் தமது சத்தத்தை உயர்த்தி வேண்டுதலும் செய்கிருர்.

எனது இரட்சகர்: பிதாவே என்று கூப்பிடுவதால், தம்மை மரணபரியந்தம் சிலுவையின் மரணபரியந்தமே பிதாவின் சித்தத்துக்குக் கீழ்ப்படுத்தின பிள்ளையாகக் காண்பித்துத் தமது குமார தத்துவமாகிய சிலாக்கியத்தைத் தமக்கென்றல்ல, எனக்கென்று கையாடிச் செபிக்கிருர். தெய்வ நீதிக்குத் திருப்தி உண்டாக்கினவராய்த் தமது சுய ரத்தத்தோடு பிரவேசிக்கும் தமது சொந்தக் குமாரனைப் பிதாவாகிய பராபரன் கேளாதிருப்பது எப்படி.

என் மீட்பர் இவ்வுலகத்தில், அதை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வராமல், எனக்குப் பாவமன்னிப்பைச் சம்பாதிக்க வந்தபடியால், அதற்காகவே பிதா

வை நோக்கிச் செபிக்கிறார். பாவிகளை இரட்சிக்க உலகத்திலே வந்த இந்தத் தேவாட்டுக் குட்டியின் இரத்தம் ஆபேலுடைய இரத்தத்திலும் வாசியானது களைப் பேசி: மன்னியும் என்று கெஞ்சுகிறது. கெத்சேமனே தோட்டத்தில் தமக்காக செபம் செய்கையில், உமக்குச் சித்தமானால் என்று சொன்னவர், இங்கே என் மன்னிப்பைப் பிதாவிடத்தில் கட்டாயமாய்க் கேட்கிறார், பார். ஆ, உன்னத சிநேகமே.

ஸ்தோத்திரிக்கப்பட்ட என் கர்த்தர் ஆருக்காக செபிக்கிறார், ஆத்துமாவே. நீதிமான்களுக்காகவும், பரிசுத்தர்களுக்காகவும் அல்ல; தம்மைப் பாடுபடுத்தி சிலுவையிலறைந்து, தூஷித்துக் கொல்லுகிற தமது பிராண சத்துருக்களுக்காக அல்லவோ செபிக்கிறார். பொய்க்குற்றஞ் சாட்டின யூதருக்காகவும், அநீத தீர்ப்பிட்ட பிலாத்துவுக்காகவும், தம்மைக் கொடுமையாய் நடத்தின சேவகருக்காகவும், தம்மைத் தூஷித்து நிந்தித்த யாவருக்காகவும் வேண்டுதல் செய்கிறார். யூதர்கள்: சிலுவையிலறையும், சிலுவையிலறையும் என்று கூப்பிட்டார்கள். இவரோ: மன்னியுமென்று கூப்பிடுகிறார். பிதாவே, அவர்கள் பாவத்தை அவர்கள் மேல் சுமத்தாதேயும், என் பரிசுத்த இரத்தம் அவர்கள் குற்றத்தைக் கிறுக்கி, உமது கோபத்துக்கும் ஆக்கினைக்கும் அவர்களை நீங்கலாக்கி விடுவிக்கட்டும் என்று செபிக்கிறார்.

தாங்கள் மகிமையின் கர்த்தரைச் சிலுவையிலறைவதாக சேவகர்களுக்கும், பிலாத்துவுக்கும், பிரதான ஆசாரியர்களுக்கும் தெரியாமல் போயிற்று. இவ்வறியாமையும் பெரிய குற்றமே. இதற்காகவே கிறிஸ்து செபித்து, தமது சத்துருக்கள் தங்கள் பாவக் கேட்டையும், இந்தக் கேட்டுக்குத் தப்புவிக்கும் தேவ கிருபையையும் தெளிவாய்ப் பார்க்கும்படி

பிதா அவர்கள் கண்களைத் திறந்தருள விரும்புகிறார். நமது அருமை இரட்சகர் இன்னமும் குணப்படாத உலகத்துக்காகச் செபிக்கிறார். என் அருமை இரட்சகரைச் சிலுவையில் அறைந்த கொலை பாதகன் நானே. எனக்காகவும் அவர் வேண்டுதல் செய்து, நான் அறிந்தும் அறியாமலும் செய்த என் பாவங்களை எல்லாம் கிருபையாய் மன்னித்தருளுவாராக.

இயேசுநாதர் இந்தச் செபத்தைத் தமது சத்துருக்கள் கேட்கவும் விசேஷமாய் தம்முடையவர்கள் மனதில் படவும் செய்கிறார். இயேசுவின் தாயும், அவர் சினேகித்த சீஷனும், அங்கே நின்ற மற்ற ஸ்திரீகளும் இதைக் கேட்கையில் அது அவர்களுக்கு எத்தனை நல்ல பாடம்.

பொல்லாத பாவியாகிய எனக்காக கிறிஸ்துவாகிய நீதிபரர் செபம் செய்து, என் பாவத்தைக் கிருபையாய் மன்னிக்கக் கொள்ள, நான் பிறத்தியாருக்கு அவர்கள் குற்றங்களை மன்னியாதிருப்பதெப்படி. நான் கர்த்தருடைய செபத்தின் ஐந்தாம் மன்றாட்டை நினைவுகூர்ந்து, முந்தின இரத்த சாட்சியாகிய ஸ்தேவானைப்போல் என் சத்துருக்களுக்காகவும் செபித்து, என் அருமை இரட்சகருக்குச் சாயலாய் அவர்கள் குற்றங்களை மன்னிப்பேன்.

## செபம்.

உத்தம பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர் உம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக: பிதாவே, அவர்களுக்கு மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறதின்னதென்று அறியார்கள் என்று விண்ணப்பம் பண்ணினதற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். உம்முடைய பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கிற தேவரீர் உம்மைச்

சிலுவையில் அறைந்த ஏழைப்பாவியாகிய எனக்காக வும், தாங்கள் செய்கிறது இன்னதென்பதை அறியா திருக்கிற எல்லாப் பாவிகளுக்காகவும் விண்ணப்பம் பண்ணியருளும். நான் உம்முடைய பரிசுத்த மாதிரி யைப் பின்பற்றி என் சத்துருக்களைச் சிநேகித்து, என்னைத் துன்பப் படுத்துகிறவர்களுக்காகச் செபம் பண்ணும்படிக்கு எனக்குக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

நான் தேவ சத்தியத்திலே
பிசகில்லாமற் நிற்க
பலமளியும், கர்த்தரே.
விசேஷமாய், மரிக்க
கிடக்கும்போதென் தர்மம் நான்
நம்பாதோனாய், மாசற்ற
உம்மைப் பற்ற
என் மனதை நீர்தான்
நல்லாவியால் திடத்த.

நான் மனதார யாவர்க்கும்
அன்பாய் மன்னிப்பேனாக.
நீர் எனக்கும் மன்னிக்கவும்,
இக்கட்டென் எதிராக
வந்தால், நான் திகிலன்றியே
நிலைக்கிறதற்காக
இன்பமாக
தெய்வீக வார்த்தையே
திடன் தருவதாக. (204, 2. 3.)

---

## 30. செவ்வாய்க் கிழமை.

### வஸ்திரப் பங்கு.

என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங் கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப்போடு கிறார்கள். சங். 22, 19.

சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த பின்பு, அவர் வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள். அங்கியையும் எடுத்தார்கள். அங்கியோ இணையலில்லாமல், மேலே துவக்கி முழுதும் நெய்யப்பட்டிருந்தது. ஆகையால் ஒருவருக்கொருவர்: அதை நாம் துண்டுதுண்டாக்காமல் ஆருடையதாகும் என்று அதன் பேரில் சீட்டுப் போடுவோம் என்றார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போட்டார்கள் என்கிற வேத எழுத்து நிறைவேறும்படியாகத்தானே. இப்படியே சேவகர் அப்போது செய்தார்கள். அவரைச் சிலுவையில் அறைந்தது மூன்றும் மணி வேளையாயிருந்தது. அவர்கள் உட்கார்ந்து அங்கே அவரைக் காத்திருந்தார்கள். மத். 27, 35. 36; மாற். 15, 24; லூக். 23, 34; யோவா. 19, 23. 24.

---

ஆ, நமது இரட்சகரை வாரால் அடித்தபின், அவருக்குச் சிவப்பான அங்கியை உடுத்தினார்கள். அவரைக் கொலைக்களத்திற்குக் கொண்டுபோகுமுன், அந்தச் சிவப்பு அங்கியைக் கழற்றினார்கள். அப்போது அவருக்கு எவ்வளவான வேதனை. பிறகு அவருக்கு அவருடைய சொந்த வஸ்திரங்களை உடுத்துவித்து, கொல்கத்தாவுக்குக் கொண்டுவந்தார்கள். இங்கே அவருடைய திருவஸ்திரங்களைக் களையும் பொழுது கொஞ்சமான வேதனையா இருந்திருக்கும். அச்சமயத்தில் அவருடைய வாரடிக் காயங்களெல்லாம் மறுபடியும் திறந்து இரத்தப் பிரவாகம் புறப்பட்டிராதோ. ஆ, கொடுமையே.

மனுஷனுக்கு வஸ்திரத்தையும், மிருகங்களுக்குத் தோலையும், பட்சிகளுக்கு இறகையும், மச்சங்களுக்குச் செதிளையும், மரங்களுக்குப் பட்டையையும்

கொடுத்தவர் இதோ, வஸ்திரமில்லாமல் தொங்குகிற தைப் பார், மனுஷனே. ஆதாம் பாவத்தினால் நிர்வாணியாய்ப்போய் மகிமையை இழந்து அத்தியிலைகளைத் தைத்துக்கட்டிக்கொண்டான். அவன் பிள்ளைகளாகிய நமக்கு மகிமையின் வஸ்திரத்தைக்கொடுக்கவும், மினுக்கு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு பிலுக்குப் பண்ணுகிற நமது பாவத்தை நிவிர்த்திக்கவும் அல்லவோ இப்படி ஆனார்.

சேவகர் அவர் வஸ்திரங்களை நாலு பங்காக்கி, ஆளுக்கு ஒரு பங்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். நாற்றிசையிலுள்ள ஏழைப்பாவிகளுக்கு உம்முடைய புண்ணிய பலன்கள் சொந்தமாம் என்று விளக்குவிக்கவோ இப்படி நடந்தது, இரட்சகரே. ஆனால், அவர் நீதியில் பங்கு பெறும் பேர்கள் எத்திசையாராயிருந்தாலும், அவர்கள் ஏக பொதுத்திருச்சபையாரென்று காட்டவோ, அவருடைய அங்கி இணையலில்லாமல் மேலே துவக்கி முழுதும் நெய்யப்பட்டிருந்தது.

வஸ்திரங்களைப் பங்கிட்டுக்கொண்ட சேவகர்கள் அவருடைய அங்கி ஆருடையதாகுமென்று அதின் பேரில் சீட்டுப்போட்டதால், தீர்க்கதரிசன வாக்கியம் எவ்வளவு திட்டமாய் நிறைவேறிற்று. வேடிக்கைப் பார்க்கும் வேதபாரகரே, மூப்பானவர்களே, என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு, என் உடையின்மேல் சீட்டுப்போடுகிறார்கள் என்ற (சங். 22, 19) வேதவாக்கியம் உங்கள் கண்கள் காண நிறைவேறுவதை அறிந்தும், சிலுவையில் தொங்குகிற அவரை உங்கள் மேசியாவாக நீங்கள் அங்கிகரியாதிருப்பது எத்தனை ஆச்சரியம்.

ரோம சேவகர்கள் அவர் தப்பிப்போகாமலும், அவருக்கு ஒருவரும் சகாயஞ் செய்யாமலும், அவ

ரைக் காத்திருந்தார்கள். ஆத்துமாவே, நீ உன் அருமை இரட்சகரை உன் இருதயத்தில் மெய்விசுவாசத்தினல் வைத்துக் காத்துக்கொள். அப்போது அவர் உன்னைவிட்டு விலகார். எந்தச் சத்துருக்களும் உன்னண்டை சேரமாட்டார்கள்.

## செபம்.

எனக்காகச் சிலுவையில் அறையுண்ட தேவாட்டுக் குட்டியாகிய இயேசுநாதரே, நான் உம்முடைய சிலுவையினிடம் வந்து நின்று, அவ்விடத்தில் தேவரீருக்குச் செய்யப்பட்ட நிந்தனைகளையும், தேவரீர் நிருவாணியாயும், ஏழையாயும், சிலுவையில் தொங்கினதையும், நான் மன உருக்கத்தோடும் சீவனுள்ள விசுவாசத்தோடும் பார்க்கையில் என் இருதயம் பிளக்க வேண்டியதா யிருக்கிறது. ஆ, குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டியே, உமக்கு வந்த நிந்தை எனக்குப் புகழாகவும், உம்முடைய நிருவாணம் எனக்கு நீதியின் வஸ்திரமாகவும், உம்முடைய தரித்திரம் எனக்கு ஐசுவரியமாகவும் இருக்கிறதென்று அறிந்து, உமக்கு நன்றியறிந்த தோத்திரத்தைச் செலுத்துகிறேன். நான் இவ்வுலகத்தில் மரணமடையும்பொழுது, என் வஸ்திரங்களையும் உடமைகளையும் மற்றவர்கள் எடுத்துக்கொண்டு, மிகவும் அற்பமான வஸ்திரங்களை எனக்குத் தரித்து அனுப்பிவிடுகிறதில் நான் வெறுமையாய் இவ்வுலகத்தை விட்டுப் புறப்படவேண்டுமென்றும் நன்ருய்ச் சிந்தித்து, அதினிமித்தம் அவைகளை வெறுத்து, மிகவும் நன்மையான என்னுடைய நித்திய இரட்சிப்பைக் குறித்தே முக்கியமாய்க் கவலைப்பட எனக்கு அநுக்கிரகம் பண்ணியருளும் சுவாமி, ஆமேன்.

நீர் என்னைச் ஜோடிக்கும் உடை,
நீர் என் அலங்கரிப்பு.
நான் உம்முடைய நீதியை
அணிவதென் வாஞ்சிப்பு.
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்ப்ரமம் எல்லாம்
கனமில்லாத் தரிப்பு. (138, 9.)

---

## 31. புதன் கிழமை.

### மேலெழுத்து.

அவருடைய நாமம் என்றென்றைக்கும் இருக்கும்; சூரியனுள்ளமட்டும் அவருடைய நாமஞ் சந்தான பரம்பரையாயிருக்கும். எல்லாச் சாதிகளும் அவருக்குள் ஆசீர்வதித்துக் கொண்டு அவரைப் பாக்கியமுடையவர் என்பார்கள். சங். 72, 17.

பிலாத்து ஒரு மேல் வாசகத்தையும் எழுதி, சிலுவையின் மீதில் போடுவித்தான். அதில்: இயேசு நாசரேத்தான், யூதருடைய இராசா என்று எழுதியிருந்தது. இயேசு சிலுவையில் அறையுண்ட இடம் பட்டணத்துக்குச் சமீபமாயிருந்ததால் இந்த வசனத்தை யூதரில் அநேகர் வாசித்தார்கள். அது எபிரேயிலும், கிரேக்கிலும், லத்தீனிலும் எழுதியிருந்தது. அப்போது யூதருடைய பிரதான ஆசாரியர்கள் பிலாத்துவுடனே: யூதருடைய இராசா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய இராசா என்று அவன் சொன்னான் என்று எழுதும் என்றார்கள். பிலாத்து: நான் எழுதினது எழுதினதே என்று பிரத்தியுத்தாரஞ் சொன்னான். மத். 27, 37; மாற். 15, 26; லூக். 23, 38; யோவா. 19, 19. 20.

---

இரட்சகர் கொலை புரியப்படும் முகாந்திரம் இன்னதென்று வெளிப்படுத்துகிற வாசகம்: இயேசு

நாசரேத்தான் யூதருடைய இராசா என்பதுதான். இதைப் பிலாத்து துரை பகிரங்கமாய் எழுதுவித்தான். அவன் இதை யூதருக்கும், கிறிஸ்துவுக்கும் நிந்தையாக எழுதினபோதிலும், அது இரட்சகருக்கு மகிமையாகவே பலித்தது. அவர் தம்மை யூதருடைய இராசா என்று சொன்னார் என்று எழுதும்படி, யூதர் கேட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனால், இயேசு நாதர் தம்மைக் குறித்து எப்படி சொல்லுகிறாரோ, அப்படியே அவர் இருக்கிறவராகையால், பிலாத்துவின் வசனம் மாற்றப்படக்கூடாதே போயிற்று.

மேலும், இந்த மேலெழுத்து யூதரை எக்காலத்திலேயும் குற்றப்படுத்தி, அவர்கள் தங்கள் குலத்தில் பிறந்து, தங்களுக்கு நன்மைசெய்த தங்களுடைய இராசாவைக் கொலைபுரிந்த சண்டாளர் என்று சகல பாஷைக்காரருக்கும் தெரிவிக்கத் தக்கதாயிருந்தது. நமக்கோ, இந்த வாசகம் நமக்கு விரோதமாயிருந்த கையெழுத்தைக் குலைத்து, நம்மைத் தேவகோபத்திற்கும் சாபத்திற்கும் நீங்கலாக்கும் விடுதலைச் சீட்டாயிற்று.

அதைப் பிலாத்து மூன்று பிரதான பாஷைகளில் எழுதுவித்தது அவருடைய திருப்பாடுகளும், மரணமும், பெந்தெக்கொஸ்தே நாளில் துவக்கினது போல், சர்வ பாஷைக்காரருக்கும், ஜாதியாருக்கும் அறிவிக்கப்பட வேண்டியதென்பதற்குக் குறிப்பாயிற்று. இப்போது அதின் சத்தம் கேள்விப்படாத பாஷையுமில்லை, பேச்சுகளுமில்லை (சங். 19, 4). அதுகளின் தொனி பூமி எங்கும், அதுகளின் வசனங்கள் பூச்சக்கரக் கடையாந்திரங்கள்மட்டும் புறப்பட்டதே. (ரோம. 10, 18).

ஆ, நான் இந்த மேலெழுத்தை என் விசுவாசக் கண்ணால் உற்றுப் பார்க்கும்பொழுது, அதை எழு

தும்படி பிலாத்துவின் மனதையும், கையையும், இறகையும் நடத்தினவர் பரிசுத்த ஆவியானவர் என்றே தோன்றுகிறது. ஏனெனில் என்னைப்போன்ற நிர்ப்பந்த ஏழைப்பாவிக்கு மகா பெரிய ஆறுதலைக் கொடுக்கும் இவ்வாக்கியத்துக்கு வேறு காரணர் இருக்கக் கூடாது.

ஆத்துமாவே, அதோ, இருகள்ளர் நடுவில் தொங்குகிறவர் ஆர். இயேசு, அதாவது சர்வலோகத்தின் பாவத்தையும் சுமந்து தீர்க்கிற இரட்சகர். அவர் என்னை இரட்சிப்பதற்காக இந்தப் பூமியில் அடிமை வேஷமெடுத்தார். முப்பத்து மூன்றரை வருஷம் இவ்வுலகில் திரிந்தார். இப்பொழுது சிலுவையிலும் ஏறினார். தமது திரு இரத்தத்தை எல்லாம் சிந்துகிறார். சிலுவையில் தொங்கும் என் இயேசுவைச் சீவநாளெல்லாம் மாறாக் கண்ணாய் நோக்கிப் பார்ப்பேனாக. நான் வார்த்தையிலாகிலும் கிரியையிலாகிலும் என்ன செய்தாலும், அதை எல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே செய்வேன் (கொலோ. 3, 17).

அவர் நாசரேத்தான். யூதர்களால் இகழப்பட்ட நாசரேத்தான். நன்மையென்பது வராத நாசரேத்தூரிலிருந்து வந்த சர்வ நன்மை சொரூபி. நாசரேயன் என்று அழைக்கப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டதை நிறைவேற்றின நாசரேத்தான் (மத். 2, 23).

யூத ராஜகுலமாகிய தாவீதின் வமிசத்தில் பிறந்த சரியான இராசா. என்றென்றைக்கும் நிலைநிற்கிற இராச்சியத்தை ஸ்தாபிக்க வந்த தாவீதின் குமாரன். உன் பராபரன் ராசரிக்கம் பண்ணுகிறார் என்று இவரைக் குறித்துத் தான் முன்னறிவிக்கப்பட்டது.

(எசா. 52, 7). எங்கள் நீதியாகிய கர்த்தர் இவரே (எரே. 23, 5. 6). என் சகல சத்துருக்களையும் செயித்து, என்னை நித்திய இராச்சியத்தின் குடியாக்குகிற இவரை, இவர் தாழ்மையின் சிலுவையில் நோக்கிப்பார்த்து, அவருடைய மகிமைக்குப் பங்காளி யாவேனாக.

## செபம்.

தேவாதி தேவனும், இராசாதி இராசாவுமாகிய இயேசுவே, தேவரீருடைய சிலுவை மரத்தின்மேல் இயேசு நாசரேத்தான் யூதருடைய இராசா என்கிற வாசகத்தைப் பிலாத்து துரை எழுதிப் போடுவிக்கும்படி, நீர் இடம்பண்ணினதற்காக உமக்கிஸ்தோத்திரம். நான் எங்கே ஓடுவேன், மா பாதகனானேன் என்று புலம்பித் தவித்து, திக்குதிசை தெரியாதவனாய் இப்பிரபஞ்சத்தில் அலைந்து திரிகிற ஏழைப்பாவியாகிய அடியேனுக்கு, இந்த வாசகமானது ஒரு வழிகாட்டி மரம்போல் வழிகாட்ட இடமாயிற்றே. நான் அதையே நோக்கிப் பார்த்து, உம்மை என் இரட்சகரும், வழிகாட்டியும், இராசாவுமாக அறிந்து அண்டிக்கொள்வேன். நான் உம்மைவிட்டு ஒருக்காலும் பிரியாமல், சீவனிலும் சாவிலும் தரித்திருக்கச் சகாயஞ் செய்தருளும் சுவாமி, ஆமேன்.

உம்மை, ராஜா, விசுவாச
பத்தியாய் பணிகிறேன்,
தாழ்மையோடும் கண்ணீரோடும்
தேவரீரை அண்டினேன்.
நீர் மண்ணான பாண்டமான
என்னை அன்பாய்ப் பாருமேன்.

என்னைச் சுத்த சீர்படுத்த
க்டாட்சம் பண்ணும், கர்த்தரே.

என்னைச் சொந்த ஆடாய்க் கொண்ட—
மெய்ப்பரான உம்மையே
சேர்வேனாக, நீர் அன்பாக
என்னைப் பாரும், இயேசுவே.

தயவோடே நீர் உம்மோடே
ஐசுயமாம் எல்லாருக்கும்
ஈவதான இன்பமான
க்டாட்சம் என்மேல் வரவும்.
யாவும் நீரே, தேவரீரே,
என்னைப் பார்த்து க்டாட்சியும். (213, 1-3.)

---

## 32. வியாழக் கிழமை.

### இரண்டாம் வார்த்தை.

கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: நாம் ஆகாதவனுடைய மரணத்தை விரும்பாமல் ஆகாதவன் தன் வழியை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறோம் என்று நம்முடைய சீவனைக் கொண்டு சொல்லுகிறோம். இஸ்ரவேல் வீட்டாரே, உங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள். நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறீர். எசேக். 33, 11.

தூக்கப்பட்ட குற்றவாளிகளில் ஒருவனும் அவரைத் தூஷணித்து: நீ கிறிஸ்துவானால், உன்னையும் எங்களையும் இரட்சி என்றான். மற்றவனோ பிரத்தியுத்தாரமாக: இந்த ஆக்கினைக்கே உள்ளாயிருக்கிற நீயும் பராபரனுக்குப் பயப்படுகிறதில்லையோ. நாமோ நியாயமாக அதற்கு உள்ளாயிருக்கிறோம். ஏனெனில் நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்கவைகளை அடைகிறோம்; இவரோ அவகுணமானது ஒன்றையும் நடப்பித்ததில்லை என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவுடனே: ஆண்டவரே, நீர் உம்முடைய இராச்சியத்திலே வரும்போது அடியேனை நினைத்தருளும்

என்றான். இயேசு அவனுடனே: மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு என்னோடு கூடப் பரதீசிலே இருப்பாய் என்றார். மத். 27, 44-46; லூக். 23, 39.

---

குணப்படாத உலகத்துக்காகப் பிரதான ஆசாரியராகிய என் இரட்சகர் செபம் செய்தார். உலகமோ அவரைக் கொஞ்சமேனும் மதியாமல், நிந்தித்துத் தூஷணிக்கிறது. நாம் பராபரனுடைய ஆசீர்வாத வார்த்தைகளையும் நித்தியகூடாரங்களில் நம்மை ஏற்றுக் கொள்வாரின் வாழ்த்துதலையும் கேட்கும் பொருட்டு, நமது ஆண்டவர் பிசாசின் பிள்ளைகளுடைய தூஷணிப்பைக் கேட்டுச் சகித்துக்கொள்ளச் சித்தமானார். ஆனால் இந்தத் தூஷணக் கூட்டம் திடுக்கிடத்தக்கதாக ஒரு குணப்படுதலின் பிரசங்கி எழும்புகிறான் பார், ஆத்துமாவே. அவன் பாவத்தில் பிறந்து, பாவத்தில் வளர்ந்து, பாவத்தை நடப்பித்த பாதகனாயிருந்தும், அவன் தன் சகோதரன் பாவத்தைக் கடிந்துகொண்டு, தானும் அவனும் பராபரனுடைய கோபத்துக்கும் ஆக்கினைக்கும் பாத்திரமான பாவிகள் என்று அறிக்கையிடுவதால் தன் குணப்படுதலைத் துவக்கி, நமது அருமை ரட்சகரை நோக்கிச் செய்த விசுவாசமுள்ள செபத்தால் அதை முற்று முடிக்கிறான். ஆ, இது கிருபையின் அதிசயமல்லவோ.

வலதுபாரிசக் கள்ளனே, கைகால்கள் ஆணிகளால் கடாவப்பட்டு நிர்ப்பந்த கோலமாய்ச் சிலுவையில் தொங்குகிற இந்த இயேசு நாசரேத்தானை சர்வலோகத்துக்கும் விசேஷமாய் உனக்கும் ஆண்டவர் என்று நீ எப்படி கண்டு பிடித்தாய். அவருக்கு ஒரு

இராச்சியம் இருக்கிறதென்றும், அவர் உன்னை நினைத்தருள்வதால் உன் துன்பமெல்லாம் நீங்கிப் பேரின்பமெல்லாம் உதயமாகும் என்றும் நீ எப்படி அறிந்துகொண்டாய். ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்துப் பாலகருக்கு வெளிப்படுத்துகிற கருணாகரப்பொருள் இதை உனக்குக் கண்டறியக் கொடுத்தாரோ. ஆம், பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது (மத். 11, 25. 26).

ஆத்துமாவே, இந்தக் கள்ளன் கர்த்தரிடத்தில் இம்மைக்கடுத்த யாதொன்றையும் தேடாமல் மறுமைக்கடுத்ததை மாத்திரம் தேடுகிறான். கர்த்தரிடத்தில் துணிக்கையை மாத்திரம் கேட்ட கானான் ஸ்திரீயைப்போல்: அடியேனை நினைத்தருளும் என்று தாழ்மையாய்க் கேட்கிறான். மேலும், அவன் தன்செபம் கேட்கப்படுமோ என்கிற சந்தேகம் கொள்ளாமல் திட நம்பிக்கையோடு செபிக்கிறான். நீயும் அவனைப் போல் வேண்டிக் கொள்வாயாகில், அவனைப்போல் பாக்கியவானாவாய்.

சனத்தின் தலைவரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் வழிப்போக்கரும் சேவகரும் கள்ளனும் தம்மைப் பரிகாசம்பண்ணித் தூஷித்து நிந்தித்ததற்கு ஒரு வார்த்தையையும் எதிர் உத்தரமாகச் சொல்லாதவர் இந்த ஏழைப்பாவியின் செபத்தைக் கேட்ட உடனே தமது வாயைத் திறந்ததைப் பார். தேவதூதர் புகழ்ந்துபோற்றும் நித்தியானந்த வஸ்துவாகிய இரட்சகரே, உமக்கு என்னைப்போன்ற ஏழைப்பாவியினுடைய பெருமூச்சின்பேரில் அதிக நாட்டம் இருக்கிறாப்போல காணுகிறது. அடியேன் சிலுவையில் அறையுண்ட உம்மையே நோக்கிப் பார்த்து, அநுதினமும் செபஞ்செய்ய மறவேன்.

கள்ளனுடைய விசுவாசத்தின் அறிக்கையும், விசுவாசமுள்ள செபமும் வீண்போகவில்லை. மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய் என்று இரட்சகர் அவனுக்கு மொழிந்தருளினுர். குணப்பட்ட கள்ளன் வேண்டினதையும் நினைத்ததையும் பார்க்க அதிகமானதைக் கர்த்தர் அவனுக்குச் செய்தார். (எபே. 3, 20). நெரிந்தநாணலை முறியாதவரும் மங்கி எரிகிற திரியை அவியாதவருமாகிய கர்த்தர் இந்தப் பாவியின் விசுவாசத்தை ஆணையால் பலப்படுத்தி, பாவத்தால் அடைபட்ட பரதீசின் வாசலை அவனுக்குத் திறந்து, அவனை நாட்படக் காக்கவைக்காமல் அன்றைக்கே அதில் அவனுக்குப் பங்கு அருளுகிறுர். கள்ளனே, நீ இதுவரையில் அடித்த கொள்ளையெல்லாம் இப்போது அடித்தகொள்ளைக்கு ஈடாமோ இணையாமோ.

பிதாவே, நான் எங்கே இருக்கிறேனே, அங்கே நீர் எனக்குக்கொடுத்தவர்களும் என்னுடனே இருக்க வேண்டும் என்றிருக்கிறேன் (யோவா. 17, 24) என்று இயேசுநாதர் பெரிய வியாழன் இரவு செய்த செபத்தின் முதற்பலனை இந்தக் குணப்பட்ட கள்ளனைப் பிதா அவருக்குக் கொடுத்தருளினுர். அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றி, பாதகரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகரானவர்களின் பாவத்தைத் தாமே சுமந்து, பாதகருக்காய் வேண்டிக் கொண்டதற்கு ஈடாக அநேகரை அவருக்குப் பங்காகக் கொடுப்போம்; பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்ளுவார் (எசா. 53, 12) என்ற வாக்குத்தத்தம் இப்பொழுது நிறைவேறத் துவக்கிற்று. ஆத்துமாவே, நீ அவரோடு

கூட இருப்பதிலும் பெரிய பாக்கியம் வேறென்ன இருக்கிறது.

பாவியே, கிரியைக்காரனாயிராமல் ஆகாதவனை நீதிமானாக்குகிறவர் பேரிலே விசுவாசிக்கிறவனுக்கு அவனுடைய விசுவாசம் நீதியாக எண்ணப்படும் (ரோம. 4, 5) என்ற திருவாக்கின் உண்மையை இங்கே கண்டறிந்து குணப்பட்டு உன் இரட்சகரை அண்டிக்கொள். இந்தக் கள்ளனைப்போல் சாகுங் காலத்தில் குணப்பட்டுக் கொள்ளலாம் என்று எண்ணி மோசம்போகாதபடிக்கு மற்றக்கள்ளனையும் நோக்கிப் பார்த்து எச்சரிப்படை, ஆத்துமாவே.

## செபம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, சிலுவையிலே உம்முடைய இராச்சியத்தை ஏற்படுத்தின இராசாவே, தேவரீர் குணப்பட்ட கள்ளனுக்கு நீ இன்றைக்கு என்னுடனே கூட பரதீசிலிருப்பாயென்று திருவுளம்பற்றினதற்காக உமக்கிஸ்தோத்திரம். தேவரீர் ஏழைப் பாவியாகிய என்னையும் கிருபையாய்க் கண்ணோக்கிப்பார்த்து, என் பாவங்களை மன்னித்து, என்னை உம்முடைய இராச்சியத்தில் நினைத்தருளும். தேவரீர் என்னை மெய்விசுவாசத்தில் முடிவுமட்டும் காப்பாற்றி, என் மரணவேளையில் என்னை ஆற்றித் தேற்றி: இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று என் இருதயத்தில் சொல்லியருளும் சுவாமி, ஆமேன்.

ஆகாதவனின் சாவை நாம்
விரும்போம், அவன் பாவமாம்
வழியைவிட்டு நம்மண்டை
மனந்திரும்பி வாழ்வதை
விரும்புவோம் என்றுண்டவர்
மா ஆணையோடே சொன்னவர்.

ஆ, இயேசு ஸ்வாமி, மரணம்
அணுகு முன்னே சீக்கிரம்
நான் உம்மண்டைக்குச் சேர நீர்
சகாயம் பண்ணக் கடவீர்.
நான் சாவுக்கின்றும் என்றைக்கும்
ஆயத்தமாயிருக்கவும். (159, 1. 7.)

---

## 33. வெள்ளிக் கிழமை.

### மூன்றும் வார்த்தை.

சீமெயோன் அவருடைய தாயாகிய மரியாளுடனே: உன்னுடைய ஆத்துமத்தையே ஒரு பட்டையம் உருவிப்போம் என்ருன். லூக். 2, 34. 35.

இயேசுவின் சிலுவையண்டையிலே அவருடைய தாயும் அவருடைய தாயின் சகோதரியும் கிலெயோப்பா மரியாளும் மகதலா ஊர் மரியாளும் நின்றிருந்தார்கள். அப்போது இயேசு தாயையும், அண்டையிலே தாம் சிநேகித்த சீஷனையும் நிற்கக் கண்டு, தம்முடைய தாயுடனே: இஸ்திரியே, அதோ, உன் மகன் என்ருர். பிற்பாடு சீஷனுடனே: அதோ, உன் தாய் என்ருர். அந்நேரம் முதல் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக் கொண்டான். யோவா. 19, 25-27.

---

ஆகாத லோகத்தின் கடன் சீட்டைக் கிழித்து, குணப்பட்ட பாவிக்குச் சுதந்தரம் அளித்தவர் விசுவாசத்தின் வீட்டாருக்கு நன்மை செய்யவும் ஆறுதல் அளிக்கவும் மறப்பாரோ. விசுவாசத்தின் வீட்டாரே, உங்களுக்கு மெய்யாறுதல் தேவையானல், அந்தப் பக்தியுள்ள ஸ்திரீகளும், விசேஷமாய் இயேசுவின் தாயும் யோவானும் செய்ததுபோல், மெய்விசு

வாசத்தோடும் பொறுமையோடும் கிறிஸ்துவின் சிலுவை மரத்தை நோக்குங்கள்.

தன் குமாரனைக் குறித்து வெகு மகிமையான காரியங்களைத் தேவதூதனும் மற்றோரும் சொல்லக் கேட்டவளும், மகா அதிசயமான அற்புத அடையாளங்களை அவர் செய்யக் கண்டவளும், அவர்பேரில் தன் நம்பிக்கையை யெல்லாம் வைத்திருந்தவளுமாகிய மரியாள் அந்தக் குமாரன் சிலுவையில் மகா நிர்ப்பந்தமும் பரிதாபமும் வேதனையுமான மரணம் அடைவதைக் காணும்பொழுது அவள் குடல்கள் எவ்வளவாய்ப் பதறியிருக்கும். சீமெயோன் முன்னறிவித்ததுபோல் அவளுடைய ஆத்துமத்தை ஒரு பட்டையம் உருவிப்போய் இராதோ (லூக். 2, 35). மரியாள் பெண்சாதிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவளும், இஸ்ரவேலின் இஸ்திரிகளில் அனேகர் காத்திருந்தும் பெற்றுக்கொள்ளாத மகிமையைப் பெற்றவளுமா யிருந்தபோதிலும், அவள் துன்பத்துக்கும் துக்கத்துக்கும் நீங்கினவளா யிருந்ததில்லை. துக்க சாகரத்தில் மூழ்கின அவளுக்குப் பரிசுத்த சிலுவையிலன்றி, வேறெங்கும் ஆறுதல் இருந்ததில்லை. சிலுவையை நோக்கிக்கொண்டிருந்த அவளுக்குச் சகல நல்லாறுதலின் ஊற்றாகிய அவள் உத்தம குமாரன் ஆறுதல் அளிக்காதிருப்பாரோ.

நீர் செய்யும் ஒப்பரவாக்குதலின் கிரியையில் இரத்த பாத்தியம் செல்லாதென்று உணர்த்தவோ, அல்லது அவளுடைய துக்கத்தைப் பெருகப் பண்ணுகிருக்கவோ நீர் உமது தாயை: ஸ்திரீயே என்று கூப்பிட்டீர், ஞானமுள்ள கர்த்தரே.

இனி தமக்கும், தாய் மரியாளுக்கும் விசுவாச சம்பந்தமே யன்றி வேறு சம்பந்த மில்லையென்று

காட்ட: அதோ, உன்மகன் என்று கூறினர். இயேசு என்கிற நாமத்துக்கு வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால்கள் யாவும் முடங்கி, நாவுயாவும் இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று பிதாவாகிய பராபரனுக்கு மகிமையாக அறிக்கை பண்ணும் காலம் சமீபித்துவிட்டதல்லவோ (பிலி. 2, 10. 11).

உன் தகப்பனையும் உன் தாயையுஞ் சங்கித்திருப்பாயாக என்று கற்பித்தருளின என்னுடைய ஆண்டவர் என் நிமித்தம் அக் கற்பனையைக் கைக்கொண்டு, எனக்கு முன்மாதிரியாகத் தமது தாயின் பராமரிப்புக்காகக் கவலைப்பட்டு, அவளுக்கு ஒரு தட்சகனை ஏற்படுத்துகிறதைக் கவனி, என் ஆத்துமாவே. நீயும் அவருடைய நன்மாதிரியைப் பின்பற்றி, உன்னைப் பெற்ற தாய் தகப்பன்மாரின் பராமரிப்புக்காகக் கவலைப்பட்டு, அவர்களுக்காகச் செய்யவேண்டிய ஏற்பாட்டை மறவாதே. இதை மறந்து நடக்கிற பிள்ளைகள் உத்தம பிள்ளையாகிய கிறிஸ்துவைத் தரித்துக்கொண்ட கிறிஸ்தவர்கள் அல்ல.

நமது அன்புள்ள மீட்பர் தாம் சிநேகித்த சீஷனை நோக்கி: அதோ, உன் தாய் என்று சொல்லி அவனிடம் தமது தாயை ஒப்புவித்தது எத்தனை பெரிய நேசம். கிறிஸ்தவனே, உன்னைச்சிநேகிக்கிற உன் அருமை இரட்சகரை நீ திரும்பச் சிநேகிக்க வேண்டுமேயானால், அவரை உன் சகோதரரில் சிநேகி. கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு, அவரை விசுவாசித்து, அவரால் சிநேகிக்கப்படுகிற யாவரையும் உன் தாயும் உன் சகோதரருமா யெண்ணிப்பராமரி. நன்மைசெய்கிறதில் இளக்கரியாதிருக்கக் கடவோம். ஏனெனில் தளர்ந்துபோகாதிருந்தோமானல் ஏற்ற காலத்திலே அறுப்போம். ஆகையால், நமக்குக் காலம் இருக்கக் கொள்ள யாவருக்கும், விசேஷமாக விசுவாசத்தின்

வீட்டாருக்கும் நன்மை செய்யக் கடவோம் (கலா. 6, 9. 10).

## செபம்.

அன்புள்ள இயேசுநாதரே, நரசீவ தயாபரரா கிய தேவரீர்: ஸ்திரியே, அதோ, உன் மகன் என்றும், அதோ, உன் தாய் என்றுஞ் சிலுவையில் சொன்ன திரு வார்த்தைகளுக்காக உம்மைத் தோத்திரிக்கி றேன். நான் மெய் விசுவாசத்தினால் ஞானப்பிரகா ரம் உம்முடைய சிலுவையண்டையிலே நின்று, உம் மிடத்தில் ஆறுதலைத்தேடி அடைந்து, தேவரீர் என் னைச் சிநேகித்ததுபோல் நான் பிறரைச் சிநேகிக்க வும், உம்முடைய பிள்ளைகளெல்லாரும் ஒருவருக் கொருவர் செய்யவேண்டிய கடமைகளில் நான் குறைவுபடாதிருக்கவும் எனக்குக் கிருபை செய்தரு ளும் சுவாமி, ஆமேன்.

சிலுவையின் கீழ்த் தவிக்கும்
தம்முடையவர்களை
இப்போதவர் ஆதரிக்கும்
பட்சம் அன்பும் எத்தனை.

நேசர் தயவாய் நம்மோடே
சொல்லும் ஒரு வார்த்தையே
துக்கத்தை எல்லாம் கட்டோடே
தள்ளி, நீக்கிப் போடுமே. (255, 5. 16.)

---

## 34. சனிக் கிழமை.

### நாலாம் வார்த்தை.

என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதேது. என் இரட்சிப்புக் கும் என் கதறுதலின் வார்த்தைக்கும் என் தூரமாயிருக்கிறீர். சங். 22, 2.

ஆறும் மணி வேளையானபோது ஒன்பதாம் மணி வேளைமட்டும் பூமியின் மீதெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. சூரியன் இருண்டுபோயிற்று. ஒன்பதாம் மணி வேளையிலோ இயேசு மகா சத்தமாய்: ஏலீ, ஏலீ, லாமா அசப்தானி என்று கூப்பிட்டார். அது: என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டது ஏது என்கிற அர்த்தமாயிருக்கிறது. அதை அங்கே நின்றவர்களில் சிலர் கேட்டபோது, இவன் எலியாவைக் கூப்பிடுகிறான் என்றார்கள். மத். 27, 45. 46; மாற். 15, 33. 34; லூக். 23, 44. 45.

---

உலகத்தின் வெளிச்சமானவர் மரண அவஸ்தைக்குள்ளானதால் வெளிச்சம் இருளாயிற்றே. தன் சிருஷ்டிகரின் பாடுகளுக்காகச் சூரியன் துக்கங் கொண்டாடி அந்தகாரப்பட்டதோ. (ஒத்: ஆமோஸ் 8, 9. 10). ஒருவரும் சேரக்கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவருக்கு விரோதமாய்ப் பாவத்தை நடப்பித்த எனக்கு நரக இருளில் பங்கிருப்பது நியாயமென்றும், அதன் நிமித்தமே என் பிணையாளி மரணவேதனைப்படுகிறார் என்றும் எனக்குணர்த்தும்படி இப்படியாயிற்றே. அல்லது இந்த இருளானது மெய்யொளிவான இயேசுவுக்கும், இருளின் பிரபுவாகிய சாத்தானுக்கும் நடக்கிற யுத்தத்தின் குறிப்போ.

என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதேது என்று என் அருமை ரட்சகர் மொழிந்ததின் கருத்தை யார் கிரகித்து முடியும். உன்னத கிருபாசனத்துக்கும், நரக பாதாளத்துக்கும் தொலைதூரம் எவ்வளவோ, அவ்வளவு பெரிதாம் இவ்வார்த்தையின் பொருள். தீர்க்கதரிசன சங்கீதமாகிய 22-ம் சங்கீதத்தின் முந்தின வாக்கியமாகிய இந்த வார்த்தையை மொழிந்ததால், அச்சங்கீதத்தை

நிறைவேற்றி முடித்த மேசியா நீர்தாம் என்று யூதருக்கும் எங்களுக்கும் காண்பிக்கத் திருவுளமானீரோ இரட்சகரே.

நீர் எங்களுக்காகப் பிணைப்பட்டு, எங்கள் பாவச் சுமையைச் சுமந்ததால், உமது நேசமுள்ள பிதா உமக்கு நீதியுள்ள பராபரன் ஆனதாகக் காணுகிறது. அவரது உக்கிரத்தின் பாத்திரத்தைக் குடிக்கும்போதும் அவரை உமது பராபரன் என்று சொல்வதால், உமக்குள் அவரை நான் என் பராபரனென்று அறிந்துகொண்டு, என் எல்லா இக்கட்டிலும் அவரிடத்தில் சகாயந் தேடுவேன்.

ஆத்துமாவே, உன் இரட்சகர் கைவிடப்பட்டார் பார். அவர் சகல சந்தோஷத்துக்கும் புறம்பானர், சகல துக்கத்துக்கும் உள்ளானர். தேவ சந்நிதானம் அவருக்கு மறைந்து, சகல ஒத்தாசையும் அவருக்குத் தூரமாயிற்று. தேவதூதரின் துதியை அவர் கேளாமல், பிசாசும் அதின் தூதரும் அவரைத் தூஷிக்கும் தூஷணையை அவர் கேட்க வேண்டியதாயிற்று. அவருடைய பாடுகளிலும் வேதனைகளிலும் அவர் தனித்து விடப்பட்டார், அவருக்குத் துணை நிற்பார் ஆருமில்லை. சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டுப் பிசாசுக்கும் அதின் தூதருக்கும் ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போங்கள் (மத். 25, 41) என்ற தீர்ப்பைக் கேட்டு, பராபரனல் என்றைக்கும் கைவிடப்பட வேண்டியவர்கள் பாவிகளாகிய நாமாயிருக்க, நம்மை அதற்குத் தப்புவிக்கும் பொருட்டுக் கைவிடப் பட்டாரே. இது எத்தனை பெரிய நேசம்.

பிதாவினுடைய நெஞ்சின் நேசக் கிரீடமாகிய அவர் என் பாவத்துக்கு உத்தரவாதஞ் செய்யப்

புகுந்ததின் நிமித்தம் கைவிடப் படுவாரானால், என் பாவத்தைக்குறித்து நான் நினைக்கவேண்டியதென்ன. அதைச் சந்தோஷமும் இன்பமுமாக எண்ணி நடப்பிக்க இடமுண்டா. ஐயோ, நான் அதை முழுமனதாலும் வெறுத்துத் தள்ளுவேனாக.

என் பிணையாளியாகிய இயேசு சிலுவையில் மொழிந்தருளிய நாலாம் வார்த்தையை நான் கேட்கும்போது, அவரை இத்தன்மையாக வாதித்த என் பாவத்தின் கொடுமையைக் கண்டு புலம்பி அழுவேனோ, அவர் எனக்காகப் போர்ந்தபடியே உத்தரவாதம் பண்ணிச் சம்பாதித்த என் இரட்சிப்பின் பூரணத்தைக் கண்டு, மகிழ்ந்து பூரித்து, அவரைச் சங்கீர்த்தனம் பண்ணுவேனோ, அறியேன்.

## செபம்.

பராபரனுடைய ஒன்றான குமாரனே, உம்முடைய பிதா அளவில்லாத சிநேகத்தினால் உம்மை அனாதியாய்ச் சிநேகித்திருந்தும், தேவரீர் சிலுவையில் சொல்லிமுடியாத ஆத்தும வியாகுலத்தை அனுபவித்து: என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதேது என்று கூப்பிட்டதற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். நான் பராபரனுடைய நித்திய கோபாக்கினைக்குப் பாத்திரனாயிருந்தும், உம்முடைய பிதாவும் எங்கள் பிதாவுமானவர் சகல மோசங்களிலும், சோதனைகளிலும், மரண அவஸ்தையிலும் என்னைக் கைவிடார் என்கிற திடநம்பிக்கையை எனக்குக் கொடுத்தருளும். கர்த்தாவே, என்னைக் கைவிடாதிரும், என் பராபரனே, எனக்கு தூரமாயிராதேயும். முதிர்ந்த வயதிலே என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இருப்பீராக சுவாமி, ஆமேன்.

கர்த்தாவை நம்புவாரை
ஓர்க்காலுங் கைவிடார்,
பொல்லாரின் சீறுமாரை
வீணாக்கிப் போடுவார்,
சன்மார்க்கரைப் பலத்த
கையால் தயாபரர்
ரட்சித்துத் தாழ்ச்சியற்ற
அன்பாய் விசாரிப்பார்.

என் இயேசுவை நான் பற்றி
இருக்கிறேன்; அவர்
என் சாபத்தை அகற்றி
விலக்கும் ரட்சகர்.
நான் தப்ப எனக்காக
இரத்தஞ் சிந்தினார்;
அத்தன்மை உண்மையாக
ஆர் என்னை நேசிப்பார். (264, 1. 6.)

---

ஒருசந்தியின் ஆறும் ஞாயிறு.

நிரு. பிலிப். 2, 5-11. சுவி. மத். 21, 1-9.

---

35. திங்கள் கிழமை.

ஐந்தாம் வார்த்தை.

நிந்தை என் இருதயத்தை முறிக்கிறது. மிகவும் பெலக் கேடானேன். யாதொருவன் பரிதாபப்படுவானோ என்று காத்திருந்தேன், ஒருவனும் இல்லை. தேற்றரவு பண்ணுகிறவர்களுக்குக் காத்திருந்தேன், ஆரையுங் காணேன். எனக்குப் பிச்சுண்கத் தந்து, என் தாகத்தில் எனக்குக் காடி குடிக்கக் கொடுக்கிறார்கள். சங். 69, 21. 22.

இதின் பிறகு இயேசு எல்லாம் முடிந்து தீர்ந்தது என்று அறிந்து, வேதஎழுத்து நிறைவேறும்படியாய்: தாகமாயிருக்கிறேன் என்ருர். அங்கே காடி நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்டிருந்தது. உடனே அவர்களில் ஒருவன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியால் நிரப்பி, அதை ஈசோப்புத் தண்டில்கோத்து, அவர் வாயண்டைகொண்டு போய், அவருக்குக் குடிக்கக்கொடுத்தான். மத். 27, 47-49; மாற். 15, 35. 36; யோவா. 19, 28. 29.

---

சிம்சோன் என்ற நசரேய வீரன் மெத்தவும் தாகத் தகனமாகிக் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உம்முடைய அடியான் கையினுல் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்கையில், சுன்னத்தில்லாதவர்கள் கையிலே விழுவேனே என்ருன் (நியா. 15, 18). இதோ, உத்தம நசரேயனுகிய இயேசு மகா பெரிய இரட்சிப்பின் கிரியையை நடப்பிக்கையில்: தாகமாயிருக்கிறேன் என்கிருர். சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கின கர்த்தர்: தாகமாயிருக்கிறேன் என்று மொழிந்ததால், அவருடைய சரீர வேதனை எவ்வளவு கொடிதாயிருந்ததென்று பார், ஆத்துமாவே. என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்துபோய், என் நாவு என் மேல்வாயோடே ஒட்டிக் கொண்டது (சங். 22, 16) என்ற தீர்க்கதரிசன வாக்கின்படியே அவருக்குச் சம்பவித்தது. சகல தண்ணீருக்கும் நீரூற்றுகளுக்கும் ஆண்டவராகிய சீவனுள்ள பராபரனுடைய குமாரன் தண்ணீர் இல்லாமல் வருந்துகிருர். வனாந்தரத்தில் கன்மலையைப் பிளந்து இஸ்ரவேலருக்குத் தண்ணீர் கொடுத்த ஞானக் கன்மலையாகிய கிறிஸ்து: தாகமாயிருக்கிறேன் என்கிருர். நம்முடைய பலவீனங்களுக்காகப் பரிதபிக்கமாட்டாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல்,

பாவந் தவிர எல்லாத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டவர் நமக்கு இருக்கிருர் (எபி. 4, 15) என்றறிந்து, உன் எல்லா வறுமையிலும் தாகத்திலும் பசியிலும் அவரை நோக்கிக் கூப்பிடு.

நீ உன் பராபரனுகிய கர்த்தருக்கும் உன் சகோதரருக்கும் விரோதமாக உன் நாவினுல்செய்த பாவங்களை நிவிர்த்தி பண்ண உன் பிணையாளி நாவறட்சியால் வருந்துகிருர். நித்திய வாழ்வை நாடித் தேடாமல், இவ்வுலகத்தையே சதம் என்று நம்பி, அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்த அந்த ஐசுவரியவான் மரணத்துக்குப்பின் வேதனையின் ஸ்தலத்தில் அனுபவித்த நித்திய நரகதாகம் உனக்கு வராதபடிக்கு, தேவ கோபாக்கினியாலும் உன்னத சிநேக அக்கினியாலும் தகனிக்கப்பட்ட உன் இரட்சகர் தாகமடைந்தார் (லூக். 16, 24). அவரை விசுவாசிக்கிறவர்கள் மோட்சானந்த பதவியில் பசியாயிரார்கள், தாகமுமாயிரார்கள் (அறி. 7, 16).

வேத எழுத்து நிறைவேறும்படியாக இயேசுநாதர்: தாகமாயிருக்கிறேன் என்ருர். எனக்குப் பிச்சுண்கத் தந்து, என் தாகத்தில் எனக்குக் காடி குடிக்கக் கொடுக்கிருர்கள் என்கிற (சங். 69, 22) தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்றச் சித்தமானுர். நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிக்கிறதே என்னுடைய போசனமாயிருக்கிறது (யோவா. 4, 34) என்று சொல்லி, அதைத் தமது மரண அவஸ்தையான நேரத்திலும் நிறைவேற்றுகிறதைக் காணுகிற நீ அவருடைய திருக்காலடிகளைப் பின்பற்றி, எல்லா நேரத்திலும் உன் பரம பிதாவின் சித்தத்தை நிறைவேற்றச் சாக்கிரதையுள்ளவனுயிரு.

தாம் நமக்காகச் சுமந்த பலவீனங்களையும் நோக்காடுகளையும் போட்டுவிட்டு மகிமைக்குள் பிரவேசித்திருக்கிற நமது இரட்சகர் முன்போல் தாகமாயிருக்கிறேன் என்று சொல்ல நிமித்தம் இல்லாதே போனாலும், நீ அவருடைய இரட்சண்யத்தில் பங்குபெற்று, அவரோடு மகிமைக்குள் பிரவேசிக்க வேண்டும் என்கிற தாகம் அவருக்கு இன்னம் இருக்கிறது. ஆகையால், தாகமாயிருக்கிறவன் வரவும், வேண்டும் என்றிருக்கிறவன் சீவதண்ணீரை இலவசமாய் வாங்கவுங் கடவான் (அறி. 22, 17).

மேலும், இரட்சகரை விசுவாசிக்கிற ஏழைகளில் ஒருவன்: தாகமாயிருக்கிறேன் என்று கூப்பிட்டுக் கொண்டு உன்னிடம் ஒத்தாசையைத் தேடி வரும் போதெல்லாம் இரட்சகர் தாமே கூப்பிடுவதாக அறிந்து, அந்தத் தாகத்தைத் தீர்க்கத் தவறாதிரு. தவறினாயாகில், நான் தாகமாயிருந்தேன், நீ என் தாகத்தைத் தீர்த்ததில்லை என்று உன்னைக் குறித்து கர்த்தர் முறையிடும் வேளை வரும்.

கிறிஸ்தவனே, நீ எதன்பேரில் தாகமும் தவனமுமாயிருக்கிறாய். அழிந்துபோவதும், அழிவுக்கு நடத்துவதுமாகிய இவ்வுலகப் பொருட்களின் பேரிலும் சிற்றின்பங்கள் பேரிலும் தாகமாயிருக்கிறாயோ. அப்படி நீ இருக்கவேண்டாம். நீ தாவீது இராசாவைப்போல்: மான் தண்ணீர் நதிகளின்மேல் வாஞ்சையாய்க் கதறுகிறதுபோல் என் ஆத்துமம் சீவனுள்ள தெய்வமாகிய பராபரன்மேல் தாகமாயிருக்கிறது (சங். 42, 2. 3) என்று உன் முழுமனதினாலும் வாஞ்சித்துக் கேள். வற்றாத நீரூற்றாகிய கிறிஸ்து உன்னைத் திருப்தியாக்குவார்.

## செபம்.

அன்பு மிகுத்த இரட்சகரே, வற்றாத ஊற்றே, கிருபாநதியே, பாவியாகிய நான் நித்திய வேதனைகளில் தாகமாயிராதபடிக்குத் தேவரீர்: தாகமாயிருக்கிறேன் என்று சிலுவையில் மொழிந்தருளினதற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். நான் இவ்வுலக காரியங்களின்பேரில் தாகமாயிராமல், உம்முடைய நீதியின்பேரில் முழு இருதயத்தோடும் தாகமாயிருக்க எனக்குக் கிருபை செய்தருளும். தேவரீர் என்னை மெய்விசுவாசத்திலே முடிவு பரியந்தம் காப்பாற்றி எனக்குப் பாக்கியமான மரணத்தை அருளி, நான் பசிதாகமற்றவனாய் சீவ நதியாகிய உமது நன்மைகளை என்றைக்கும் அனுபவிக்கும் பாக்கியத்தை எனக்குக் கிருபையாய்த் தந்தருளும் சுவாமி, ஆமேன்.

தேவனான நீர் ஆக்கினையின் கீழ்
உம்மைத் தாழ்த்தி உத்தரித்து
எங்கள் மீட்புக்காய்த் தவித்து,
தாகம் உண்டென்றீர், தேவனான நீர்.

உம்மைப் பற்றினேன், என்றைக்கும் விடேன்:
உம்மை விசுவாசத்தாலே
நான் தரித்தேன், ஆகையாலே
லோகத்தைநாடேன்,உம்மைப்பற்றினேன்.(143,7.10.)

---

## 36. செவ்வாய்க் கிழமை.

### ஆறும் வார்த்தை.

மீறுதலைத் தவிர்க்கிறதற்கும் பாவங்களைத் துலைக்கிறதற்கும், அக்கிரமத்தை நிவிர்த்தி பண்ணுகிறதற்கும், நித்திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனையையும் தீர்க்கதரிசனத்

தையும் முத்திரிக்கிறதற்கும், பரிசுத்தத்திற்குப் பரிசுத்தமானவரை அபிஷேகம் பண்ணுகிறதற்கும், உன் சனத்தின் மேலும் உன்னுடைய பரிசுத்த பட்டணத்தின் மேலும் எழுபது வாரங்கள் செல்லக் குறிக்கப்பட்டிருக்கின்றன. தானி. 9, 24.

இயேசு காடியை வாங்கின போதோ: முடிந்தது என்று சொன்னார். யோவா. 19, 50.

---

முடிந்தது என்று திருவுளம் பற்றின எங்கள் மீட்பரே, உமக்கு அனந்த ஸ்தோத்திரம். என்ன முடிந்தது ஆண்டவரே, நீர் முடிவற்ற நித்திய வஸ்துவாச்சே. விசுவாசிகளுக்குப் பரிசுத்த ஆவியினால் தெளிவாயிருக்கும் இதன் பொருள் அவிசுவாசமுள்ள லோகத்துக்கு மறைபொருளாயிருக்கும்படி என்ன முடிந்ததென்று தேவரீர் சொல்லாமற் போனீரோ.

இதோ, எருசலேமுக்குப் போய் ஏறுகிறோம். அங்கே மனுஷனுடைய குமாரனைக் குறித்து தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டதெல்லாம் நிறைவேறும் (லூக். 18, 31) என்று நீர் முன்னுரைத்திருந்ததை நிறைவேற்றி முடித்தீரோ. ஈசாக்கு, யோசேப்பு முதலிய முன்னடையாள மனிதராலும், பஷா ஆடு, வெண்கலச் சர்ப்பம், பலி மிருகம் முதலிய முன்னடையாளப் பொருட்களாலும் முன் குறிக்கப்பட்டதெல்லாவற்றையும் முடித்து விட்டீரோ. தாவீது எசாயா தானியேல் முதலிய சகல தீர்க்கதரிசிகளாலும் முன்னறிவிக்கப்பட்ட விசேஷங்களை நீரே நிறைவேற்றி முடித்தீர் என்று நீர் சீவனை விடுமுன் திருவாய் மலர்ந்தருளச் சித்தமானது எத்தனை பெரிய

ஞானம். இதனால் என் சந்தேகமெல்லாம் நிவிர்த்தியாய்ப்போயிற்று.

கர்த்தர் தம்மை நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படுத்தி, அதன் சகல கற்பனைகளையும் குறைவற நிறைவேற்றிவிட்டார். அதன் கணக்கு வழக்கெல்லாம் என் இரட்சகரால் முடிந்து தீர்ந்தது. அதன் சாபம் என்னை இனி தொடர்ந்து பிடிப்பது எப்படி. ஏனெனில், அவர் எனக்காகப் பட்டு உத்தரிக்கவேண்டிய பாடுகளையும் இகழ்ச்சிகளையும் எல்லாம் உத்தரித்து முடித்தார். அடியேனின் பாவங்களுக்காக உத்தரிக்கும்படி ஒன்றையும் மீதிவைக்காமல் யாவையும் அவரே பட்டு அனுபவித்து முடித்துவிட்டார். பொல்லாத யூதருக்குக் கிறிஸ்துவின்பேரில் இருந்த வல்லமை முடிந்தது. இனி அவர்கள் அவருக்கு வருத்துவிக்கக்கூடிய பாடுகள் இல்லாமற் போயிற்று.

ஆலோசனைக்காரர் என்ற திருநாமங் கொண்ட என் கர்த்தர் தமது அநாதி ஆலோசனையின் தீர்மானத்தைக் குறைவற நிறைவேற்றினதால் அல்லவோ முடிந்தது என்று மொழிந்தருளினார். சாலொமோன் இராசா தெய்வாலயத்தைக் கட்டி முடித்தது போலும், நோவா பேழையைச் செப்பனிட்டு முடித்ததுபோலும் என் ஆண்டவர் இரட்சிப்பை நிறைவேற்றி முடித்தார். ஆனபடியால்: வாருங்கள், எல்லாம் ஆயத்தமாயிற்று என்று பெரிய விருந்தின் உவமையிலே சொல்லியதை (லூக். 14, 17) இங்கே சிலுவை மரத்தின்மீதிருந்து உறுதிப்படுத்துகிறார். பாவியே, உன் இரட்சண்யத்துக்கு வேண்டிய யாவையும் கர்த்தர் செய்துமுடித்தார். பாவமன்னிப்போ, நீதியோ, சமாதானமோ, சீவனோ, மோட்சமோ, வேறெதுவோ, யாவும் அவரால் முடிந்திருக்கிறது.

ஆகையால் அவர்: நாம் நமது திராட்சத் தோட்டத்துக்காகச் செய்யாத எந்த வேலையை அதற்கு இனி செய்யலாம் என்கிறார் (எசா. 5, 4).

ஆத்துமாவே, முடிந்திருக்கிற அவருடைய இரட்சிப்பை நீ ஏற்றுக்கொள்ள வேண்டியதேயன்றி நீ வேறொன்றும் செய்யவேண்டியதில்லையே. என்னில் நற்கிரியையைத் துவக்கினவரே, அதை இயேசு கிறிஸ்துவின் நாள் மட்டாக முடிய நடத்திவாரும் (பிலி. 1, 6). அப்போது நான் நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் என்று (2 தீமோ. 4, 7) சொல்லக்கூடியவன் ஆவேன்.

## செபம்.

மனுஷ சாதியின் இரட்சிப்பை உமது பாடுகளால் முற்றுமுடித்த அதிபதியாகிய இயேசு கிறிஸ்துவே, தேவரீர்: முடிந்தது என்று சிலுவையில் சொன்ன மகா பெரிய வார்த்தைக்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். நான் எனக்கு வரும் எல்லா உபத்திரவங்களிலும் சோதனைகளிலும் முடிந்தது என்ற உம்முடைய வார்த்தையினால் பூரண ஆறுதலை அடையவும், கடைசியில் நானும்: முடிந்தது என்று சொல்லி, உம்மை என்றென்றைக்கும் தோத்திரிக்கவும் எனக்குக் கிருபை செய்தருளும் சுவாமி, ஆமேன்.

முடிந்தது என்றுன்னுட
இரட்சகர் விளம்பின
நல்வார்த்தையை மறவாயாக,
அவர் நிறைந்தபடியாக
பாடுத்தரித்த பிறகு
மீட்பாச்சுது. முடிந்தது.

முடிந்தது, அத்துடனே
நான் ஒன்றுங் கூட்டமாட்டேனே.
நீர் செய்ததென் கணக்கில் சேரும்
உம்மாலே நீதி நிறைவேறும்.
தினம் நான் செய்வதும் எல்லாம்
என்னில் உம்மாலேதான் ஆம்.

முடிந்தது என்றுன்னுட
இரட்சகர் விளம்பின
நற்சொல்லைக் கேட்டுச் சீஷனாக
உன் வேலையையும் நீ நன்றாக
முடியச் செய்து தீர்க்க
இயேசுவைப் பின்பற்றுங் கடனை நினை.

## 37. புதன் கிழமை.

### ஏழாம் வார்த்தை.

உம்முடைய கையில் என் ஆவியை ஒப்பு விக்கிறேன்; சத்திய பராபரனாகிய கர்த்தாவே, என்னை மீட்டுவிட்டீர். சங். 31, 6.

அவர் மறுபடியும் மகா சத்தமாய்: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று கூப்பிட்டார். லூக். 23, 46.

இயேசுநாதர் மரிக்கிறார். அவர் தாது விழுந்து போகிறது; கண்ணொளி மங்குகிறது, உடல் துடிக்கிறது; அந்நேரத்தில் அவர் உரத்த சத்தமாய்: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்கிறார். தமது பாடுகளைச் செபத்தோடு துவக்கினவர் செபத்தோடு முடிக்கிறார். என் ஆத்துமாவே, உன் எல்லாப் பாடுகளிலும் உபத்திர

வத்திலும் செபஞ்செய்ய மறவாதே. அதுவே பரம அவிழ்தம்.

கெத்சேமனே தோட்டத்தில் செய்ததுபோல் இங்கேயும், பிதாவே என்று என் கர்த்தர் கூப்பிட்டதால், தாம் பிதாவாகிய பராபரனின் தற்சுபாவத்தின் அச்சும் அவருடைய ரூபுமாயிருந்தும், தம்மைத் தாமே வெறுமையாக்கித் தம்மைத் தாம் தாழ்த்தி, மரணபரியந்தம் சிலுவையினுடைய மரணபரியந்தமே கீழ்ப்படிந்தவரானார் என்பதை நமக்குக் காண்பிக்கிறார். நானும் எல்லாக் காரியங்களிலும் என் மரண நேரத்திலுங்கூட என் பிதாவுக்குக் கீழ்ப்படிவேனாக. ஆத்துமாவே, இயேசுநாதர்: பிதாவே என்று கூப்பிட்டதால் அவர் பிதாவிடத்தில் அநாதியாய்ப் பிறந்த மெய்யான தேவனும், என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றதால் அவர் நமது மாமிசத்தையும் இரத்தத்தையும் எடுத்த மெய்யான மனிதனுமாயிருக்கிறார் என்றறிந்து, அவரைப் பராபரனுக்கும் மனுஷருக்கும் நடுவேயிருக்கிற ஏக மத்தியஸ்தரும் உன் கர்த்தருமாக அங்கிகரித்துப் பற்றிக்கொள்.

பாவம் செய்த மனுஷன் பராபரனுடைய நீதியின்படி தன் சீவனை விட்டு மரணத்துக்குள்ளாக வேண்டியவன். பிணையாளியாக ஏற்பட்ட இயேசுநாதர் பாவமற்றவராயிருந்து, தமது ஆவியைப் பிதாவின் கரத்திலே உற்சாகமாய் ஒப்புக்கொடுத்து, நம்மை மரணத்துக்குத் தப்புவிக்கிறார். கிறிஸ்து நாதர் தமது ஆவியைப் பிதாவின் கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். சீவனுள்ள பராபரனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமல்லவோ (எபி.10,31). ஆகிலும் என் சீவனாகிய இயேசு தமது ஆவியை ஒப்புக்கொடுத்த கைகள் இனி எனக்குப் பயங்கரமாயல்ல, சந்

தோஷமாயிருக்கத் தடை என்ன. பரிசுத்த ஸ்தேவானைப்போல் நானும் என் ஆவியை அந்தக் கைகளில் ஒப்புக்கொடுப்பேனே யல்லாமல் வேறொருவரிடத்திலும் ஒப்புக்கொடேன். ஒரு பிள்ளைக்குத் தாயின் மடியைப் பார்க்கிலும் பிரியமும் நம்பிக்கையுமான இடம் ஒன்றுமில்லாததுபோல், விசுவாசியின் ஆத்துமத்துக்குப் பராபரனிடத்தில் சேர்ந்திருப்பதைப் பார்க்கிலும் அதிகப் பிரியமும் நம்பிக்கையுமான இடம் இல்லை. கிறிஸ்தவனே, இரட்சகர் சிலுவையில் திருவுளம்பற்றிய ஏழாம் வார்த்தை உன் தினசெபமும், விசேஷமாய் உன் கடைசி செபமுமாயிருப்பதாக. நீ உன்னுடைய ஆவியை ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிராதேபோனாலோ, மதியற்றவனே, ஒருவேளை இந்த இராத்திரியிலே உன் ஆத்துமம் உன்னிடத்தில் கேட்டு வாங்கப்படும். அப்போது நீ என்ன செய்வாய் (லூக். 12, 20).

என் பரமபிதாவினுடைய கையானது எனக்குச் சீவனைக் கொடுத்த சர்வ வல்லமையுள்ள கையல்லவோ. துன்பத்துக்கு நீங்கலாக்கும் பிதாவுடைவான கையல்லவோ. கடைசிநாளில் திரும்பவும் என் சீவனை எனக்குக் கொடுக்கும் உண்மையுள்ள கையல்லவோ. ஆகையால் அவரே என் அடைக்கலம், அவரே என் தாபரிப்பு, அவரே என் ஆறுதல். என் மரண நேரத்தில் சாத்தான் என்னைக் கலைத்து, என் ஆவியைத் தன்னிடமாய்ப் பறித்துக்கொண்டு போகாதபடிக்கு, அவர் தமது பரிசுத்த தூதரை என்னிடம் அனுப்பி என் ஆவியை ஒப்புக்கொள்ளுவார்.

## செபம்.

எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, சீவனின் அதிபதியாகிய தேவரீர் உம்முடைய மரணத்தி

ளுல் மரணத்தை ஜெயங்கொண்டு, மகா சத்தமாய்: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்பு விக்கிறேன் என்று கூப்பிட்டதற்காக உம்மைத் தோத்திரிக்கிறேன். தேவரீர் என்னை மரண பயத்தி லிருந்து நீங்கலாக்கி, நான் சாகும்போது என் ஆவியை உம்முடைய பிதாவாகிய என் பிதாவின் க்ளில் ஒப்புவிக்கும்படிக்கு எனக்குக் கிருபை செய் தருளும் சுவாமி, ஆமேன்.

நான் காலம் பண்ணும் நேரத்தில்
அடியேனைத் தற்காரும்,
என் இயேசுவே, நான் போகையில்,
நீரே துணையாய் வாரும்.
என் ஆவியை என் முடிவில்
நீர் உம்முடைய கைகளில்
அன்பாக ஏந்திக்கொள்ளும்.

என் ஆத்துமத்தை இயேசுவின்
கரத்தில் ஒப்புவிப்பேன்.
நான் நித்திரை அடைந்தபின்
திரும்பவும் விழிப்பேன்.
என் மீட்பரானவர் அன்றே
வந்தென்னை மகிமையிலே
அழைத்துக்கொண்டு போவார். (278, 1. 5.)

---

## 38. பெரிய வியாழக் கிழமை.

### கிறிஸ்துவின் மரணம்.

அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றம் போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்தபின், அவர் வித்தைக் கண்டு, நீடிய நாளாயிருப் பார். எசாயா. 53, 10.

இயேசு இவைகளைச் சொல்லி, தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புவித்தார். மத். 27, 50; மாற். 15, 37; லூக். 23, 46; யோவா. 19, 30.

---

ஐயையோ, இதென்ன காரணம். என் ஆசைக்குரிய இயேசுநாதர் மரணமடைந்தாரோ. ஒருநாளும் மரிக்கக்கூடாத நித்திய பிதா சீவன் விட்டாரோ. பாவியாகிய எனது சம்பளத்தைப் பாவமறியாத பரிசுத்தர் வாங்கினாரோ. சபிக்கப்பட்ட ஓநாய்க்காக இடறற்ற ஆட்டுக்குட்டி சீவன் விட்டதோ. மரண பள்ளத்தில் விழுந்த ஆட்டிற்காக மேய்ப்பர் உயிர்விட்டாரோ. சர்வசீவ தயாபரராகிய என் ஆண்டவர் என்நிமித்தம் மாண்டாரோ. ஞானமணவாட்டி பிறக்கும்படி இந்த ஞானமணவாளன் மரணமாகிய அயர்ந்த நித்திரைக் குள்ளானரோ. ஸ்திரீயின் வித்தானவர் சர்ப்பத்தின் தலையை நசுக்குவதில் தமது குதிகால் நசுக்குண்டாரோ (1 மோசே 3, 15). தமது சனத்தை மீட்கும்படி இந்தப் பரம சிம்சோன் உயிர் விட்டாரோ (நியா. 16, 30). கடல் கொந்தளிப்பில் தமது கப்பலைக் காப்பாற்றும்படி இந்தத் திவ்விய யோனா மரணத் திமிங்கலத்தின் வாயில் விழுந்தாரோ. (யோனா. 2, 1).

---

ஆச்சரியம், ஆச்சரியம். சாதாரண மனிதர் மரணத்துக்காகக் காத்திருக்கிறவர்களும், மரணத்தால் கொண்டுபோகப் படுகிறவர்களுமா யிருக்கக்கொள்ள, என் சீவநாயகர் மரணத்தைக் கூப்பிட்டழைத்து, அதன் கையில் தம்மை வலிய ஒப்புக்கொடுக்கிறார். இரு கள்ளருடைய எலும்புகளை முறித்து, அவர்கள் சீவனைப் பலவந்தமாய் வெளிப்படுத்த வேண்டியதாயிருக்க, நமதன்பர் தமதுயிரை உற்சாகமாய் விட்டு

மரிக்கலானாரே. என்னை இரட்சிக்க வேண்டுமென்கிற ஆசையும் ஆவலுமல்லவோ இப்படிச் செய்ய அவரை ஏவிற்று.

அந்திப்பலி நேரமாகிய மூன்றுமணித் திட்டத்தில், என் அருமை இரட்சகர் உயிர் விட்டதால், தம்மைச் சகல பலிகளிலும் நிறைந்தன பலியாகவும், உத்தம பலியாகவும் ரூபித்தார். அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றம்போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்தது (எசாயா 53, 10) என்ற திருவாக்கை நிறைவேற்றி, என் பாவத்தையும் குற்றத்தையும் நிக்கிரகம் செய்யத் திருவுளமானார்.

அன்புள்ள இயேசுநாதர் தமது சீவனை விட்டதால், எனது சாவுக்குச் சாவானார். இதனால் உயிரோடிருக்கும் நாளெல்லாம் மரணபயமாய் அடிமைத்தனத்துக்குள்ளான யாவரையும் அவர் விடுதலை பண்ணினார் (எபி. 2, 15). நீ இந்த நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியிலே புசிக்கிற நாளிலே சாவவே சாவாய் என்ற தீர்ப்பு (1 மோசே. 2, 17.) என் மாமிச தகப்பனாகிய முந்தின ஆதாமால் எனக்கு வந்து பலித்ததே. ஆகிலும் என் கர்த்தராகிய இயேசு மரணமடைந்ததால் அவரை விசுவாசிக்கிற நான் அவருக்குள் பிழைக்கவே பிழைப்பேன் என்று அறிந்து ஆறுதலடைகிறேன்.

அவர் தலையைச் சாய்த்துச் சீவனை விட்டதால், மகா அமைதலாய் மரித்தார் என்பது வெளியாயிற்று. களைத்தவன் படுத்துக்கொண்டு நித்திரைபண்ண தன் தலையைச் சாய்க்கிறதுபோலவும், இரணக்களச் சூரன் தன்னாயுதங்களைக் கீழேவைத்து இளைப்பாறுகிறது போலவும், வயலில் மலர்ந்திருக்கிற புட்பத்தின் இதழ் அரிவாள்படச் சுருங்குவது போலவும் அவர் தமது

தலையைச் சாய்த்து, ஆவியை விட்டுவிட்டார். என் இயேசுவின் முடிவுபோல என் முடிவும் இருப்பதாக. நான் அவரைப்போல் நீதிமானின் மரணத்தையடைய அவர் எனக்குக் கிருபை செய்வாரென்று நம்பியிருக்கிறேன்.

ஒரு சேவகன் அவர் திருவிலாவில் குத்தினதால் புறப்பட்ட இரத்தமும் தண்ணீரும் என் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது. ஏனெனில் இந்தப் பரிசுத்த தண்ணீராகிய ஞானஸ்நானத்தினால், நான் கிறிஸ்துவினுடைய மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் பங்காளியானேன். இதனால் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, மரணமும் பிசாசின் வல்லமையும் நீங்கிப்போய், நித்திய மோட்சத்திற்கு ஆளானேன். அப்படியே அவருடைய திரு இரத்தத்தைப் பரிசுத்த இராப்போசனத்தில் வாங்கி, பாவமன்னிப்பின் நிச்சயத்தை அடைந்தேன். இந்த நிச்சயத்தால் என் வாழ்நாள் சந்தோஷமும், என் முடிவு பாக்கியமுமாயிருக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை.

## செபம்.

சர்வத்திற்கும் வல்ல பராபரனுடைய குமாரனும் எங்கள் ஒன்றான நித்திய பிரதான ஆசாரியருமாகிய இயேசு கிறிஸ்துவே, மாசற்ற உம்முடைய சரீரத்தைச் சிலுவை என்னும் உயர்ந்த பீடத்தில் பலியாக ஒப்புக்கொடுத்து, மரண வல்லமையையுடைய பிசாசை உம்முடைய மரணத்தால் செயிப்பதற்கும், உயிரோடிருக்கும் நாள் எல்லாம் மரண பயத்தினால் அடிமைத்தனத்திற்குள்ளான யாவரையும் விடுதலைபண்ணுவதற்கும் எங்கள் எல்லாருடைய பாவத்திற்காகவும் சிலுவையில் மரித்தீரே. தேவரீர் குற்றமில்லாமல் அடைந்த மரணத்துக்காக நான் எப்போதும்

எவ்விடத்திலும் உம்மைத் தோத்திரித்து அதனுல் ஆறுதலடையும்படி எனக்குக் கிருபை செய்தருளும். என் சீவநாட்களில் எல்லாம் உம்முடைய மரணத்தினுலே தேவரீர் எனக்கு உதவியாயிருந்து, நான் பாவத்திற்குச் செத்து, பூமியிலுள்ள என் அவயவங்களைக் கொன்றுபோடப் பண்ணியருளும். நான் சாகும் நேரத்தில் தேவரீர் என்னிடம் வந்து, என்னை ஆற்றித் தேற்றி, எனக்குப் பாக்கியமான மரணத்தைக் கட்டளையிட்டருளும் சுவாமி, ஆமேன்.

மரிக்குங் கிறிஸ்தின் ஆவியும்,
வதைக்கப்பட்ட தேகமும்
என் தேகம் ஆவி யாவையும்
நன்ருய்க் குணப்படுத்தவும்.

அவர் விலாவால் மிகவும்
பொழிந்த ரத்தம் தண்ணீரும்
என் ஸ்நானமாகி, எனக்கு
உயிர் தரக் கடவது.

என் மரண அவஸ்தையில்
நீர் என்னைத் தேற்றி, மோட்சத்தில்
நான் என்றும் உம்மைத் தொழவே
வரவழையும், கர்த்தரே. (43, 1, 2. 5)

---

## 39. பெரிய வெள்ளிக் கிழமை.

### அடையாளங்கள்.

நானேவெனில் என் மகிமையைத் தேடேன். அதைத் தேடி நியாயந்தீர்க்கிறவர் இருக்கிருர். யோவான் 8, 50.

அப்போது, இதோ, தெய்வாலயத்தின் திரை மேலே துவக்கிக் கீழே மட்டும் இரண்டாகக் கிழிந்தது; பூமியும்

அதிர்ந்தது; கன்மலேகளும் பிளந்தது; கல்லறைகளுந் திறந்து போய், நித்திரை அடைந்திருந்த பரிசுத்தவான் களுடைய அநேகஞ் சரீரங்கள் எழுந்திருந்தன. அவர் எழுந்த பிறகு இவர்கள் கல்லறைகளே விட்டுப் புறப்பட்டு, பரிசுத்த பட்டணத்துக்குள் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள். அவருக்கு எதிராய் அண்டையிலே நின்ற சேர்வைக்காரனுனவெனில், அவர் இப்படிக் கூப் பிட்டுச் சீவனே விட்டதைக் கண்டபோது: மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனும் பராபரனுடைய குமாரனுமா யிருந்தார் என்று பராபரனே மகிமைப்படுத்தினுன். அவ னேடே கூட இயேசுவைக் காத்திருந்தவர்களும் பூமி அதிர்தலேயும் சம்பவித்த காரியங்களேயுங் காண்கையில், மிகவும் பயந்து: மெய்யாய் இவர் பராபரனுடைய சுதனு யிருந்தார் என்ருர்கள். மத். 27, 51-54; மாற். 15, 38. 39; லூக். 23, 45. 47.

---

இயேசுநாதர் தமது சீவனே விட்டவுடனே நடந்த ஆச்சரியமும் அதிசயமுமான அடையாளங் களேப்பார், ஆத்துமாவே. உத்தம பிரதான ஆசாரி யராகிய கிறிஸ்து ஒரேவிசையாய் நித்திய மீட்குதலே உண்டுபண்ணிப் பரிசுத்தத்துக்குப் பரிசுத்த ஸ்தலத் தில் பிரவேசித்ததால், தெய்வாலயத்தின் திரை மேலே துவக்கிக்கீழேமட்டும் இரண்டாய்க்கிழிந்தது. யூதருடைய சடங்குப் பிரமாணம் ஒழிந்தது. நான் இனி பராபரனுடைய மகிமையையும் சிநேகத்தையும் பூரணமாய் அடைந்து அனுபவிக்க யாதொரு தடை யுங் காணேன்.

பூமி அதிர்ந்தது, மாசற்ற ஆண்டவர் தொங்கின பாரச்சிலுவையைத் தாங்க மனமற்ருே,பலத்த சேனு பதியாகிய சாத்தானுக்கும் அவனிலும் பலத்த நமது சேனுபதியாகிய கிறிஸ்துவுக்கும் நடந்த யுத்தத்திற்

குக் குறிப்பாகவோ இவ்வதிர்ச்சி உண்டாயிற்று. பழைய உடன்படிக்கை உண்டான காலத்தில் பர்வதம் எல்லாம் அதிர்ந்ததே. புதிய உடன்படிக்கை ஸ்தாபிக்கப் படுகையில் பூமி அதிராதிருக்குமோ. (ஆகாய் 2, 6). பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து இஸ்ரவேலர் விடுதலையானதற்காகப் பூமி அதிரவேண்டியிருந்தால் (சங். 114, 7), முழு மனித சாதிக்கும் பாவ அடிமைத் தனத்திலிருந்து விடுதலை கிடைக்கும் இந்தச் சமயத்தில் பூமி அதிராதிருப்பது எப்படி.

கன்மலைகள் பிளந்தது. இவர்கள் பேசாமல் இருந்தால் கல்லுகள் கூப்பிடும் என்று கர்த்தர் உரைத்தபடியே இச்சமயத்தில் வாயுள்ள சீஷர் பேசாதிருக்க வாயில்லாக் கற்கள் கூப்பிட்டு (லூக். 19, 40), அவருடைய மகிமையை வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்வின் வார்த்தைகளைக் கேட்டும் அவருடைய குற்றமில்லாத பாடுகளைக் கண்டும் குணப்படாதிருந்த யூதர்களைக் கடிந்துகொள்ள அல்லவோ கன்மலைகள் பிளந்தது. பாவியே, கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் அறிந்த உன் கல்லான இருதயம் பிளவாதிருக்கலாமோ.

கிறிஸ்து தமது மரணத்தினாலே சாவை மேற்கொண்டதால், அவரிடத்திலிருந்து சீவனின் வாசனை புறப்பட்டு, அநேக பரிசுத்தவான்களின் சரீரங்கள் மேல் பட்டதால், அவை உயிரடைந்தன (ஓசேயா 13, 14).

இப்படியே பரலோகம் பூலோகம் பாதாளலோகமாகிய யாவும் சீவன்விடும் கிறிஸ்துவின் தெய்வீக மகிமைக்குச் சாட்சி பகர்வதைக் கண்ட சேர்வைக்காரனும், அவனோடு கூட இயேசுவைக் காத்திருந்த

வர்களும்: மெய்யாய் இவர் பராபரனுடைய குமாரன் என்று சாட்சி கொடுக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அவருடைய திரு முகத்தில் விளங்கின கபடின்மையும், அவருடைய பாடுகளில் எல்லாம் காணப்பட்ட அசாதாரண பொறுமையும், அவர் தமது சத்துருக்களுக்காகவும் செபம் செய்ததில் வெளிப்பட்ட ஒப்பற்ற அன்பும், தம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்த ஏழைப்பாவிக்குக் காண்பித்த கிருபையும் எந்த இருதயத்தை இளகப் பண்ணுதிருக்கும்.

## செபம்.

அதிசயமானவர் என்ற திருநாமம் தரித்த அருமை இரட்சகரே, தேவரீருடைய பிறப்பும், வாக்கும், பாடுகளும், கிரியைகளும் மகா அதிசயமாயிருந்ததுபோலவே, தேவரீர் எனக்காக அடைந்த மரணமும் மகா அதிசயமாயிருந்தது. தேவரீர் மரித்த சமயத்தில், உயிரற்ற சிருஷ்டிகளிடத்திலும் உயிருள்ள சிருஷ்டிகளிடத்திலும் எத்தனை ஆச்சரிய அடையாளங்கள் காணப்பட்டன. ஆண்டவரே, உமது திருப்பாடுகளின் வசனத்தைக் கேட்கும் ஏழைப்பாவியாகிய என் இருதயத்திலும் தேவரீர் அதிசயமானவர் என்கிறதின் உண்மையை நான் எனது இரட்சிப்புக்கென்று கண்டுணர என்னை நிர்விசாரத்தினின்று தட்டி எழுப்பி, என்கல்லான இருதயத்தைப் பிளந்து சதையான இருதயமாக்கி, நான் ஜீவனடையவும், உமக்குச் சத்திய சாட்சியாக நான் விளங்கவும் தேவரீர் எனக்குக் கிருபைசெய்தருளும் சுவாமி, ஆமேன்.

கர்த்தாதி கர்த்தர் இவ்விதம்
மரித்தது பயங்கரம்;
இதோ, பகலில் பொழுதும்
இருள் படும்,
புவி குலுங்கி அதிரும்.

தெய்வாலயத் திரை யெனில்
கிழியும், கல்லறைகளில்
அநேகங்கள் அவ்வேளையே
திறப்பாச்சே,
கற்குன்றுகள் பிளந்ததே.

எச்சிஷ்டியும் அசையச்சே
அசையாயோ, நீ பாவியே;
கற்குன்றுகள் பிளக்கையில்
உன் நெஞ்சுன்னில்
பிளவாதோ, இந்நேரத்தில்.
நீர் எனக்காக மரண
பாதாளத்தில் இறங்கின
தயையை இங்கே நித்தமும்
அங்கென்றைக்கும்
நான் போற்ற என்னை ரட்சியும். (ப. ஞா. 57, 2-4. 13.

---

## 40. சனிக் கிழமை.

### கிறிஸ்துவின் அடக்கம்.

ஆகாதவர்களோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள்; ஆனால் ஐசுவரியவானோடே தம்முடைய மரணத்தில் இருந்தார். எசா. 53, 9.

சாயங்காலமானபோது ஓய்வுநாளுக்கு முன்னான ஆயத்த நாளா யிருந்தது. இதோ, அரிமத்தியா என்ற யூதருடைய பட்டணத்தானாகிய யோசேப்பு என்னப்பட்ட ஒரு மனுஷன் இருந்தான். இவன் ஆலோசனைக்காரனும் நல்ல புருஷனும் நீதிமானுமாயிருந்து அவர்கள் ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதிருந்தான். அவன் தானும் பராபரனுடைய இராச்சியத்துக்குக் காத்திருந்தான். யூதருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க

சீஷனுயிருந்தான். அவன் துணிந்து பிலாத்துவண்டைக் குப் போய், இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொள்ள அவ னிடம் உத்தரவு கேட்டான். ஆனால் பிலாத்து அவர் அப் போதே மரித்தாரோ என்று ஆச்சரியப்பட்டு, சேர்வைக் காரனை அழைப்பித்து: அவர் மரித்து நேரமாயிற்ருே என்று அவனைக் கேட்டான். அதைச் சேர்வைக்காரனுலே அறிந்துகொண்ட பிற்பாடு, சரீரத்தை யோசேப்புக்குக் கொடுக்கக் கட்டளையிட்டான். ஆகையால் அவன் மெல் லிய புடவையைக்கொண்டு இயேசுவினுடைய சரீரத்தை இறக்கினுன். முந்தி இராத்திரியிலே இயேசுவண்டை வந்திருந்த நீக்கொதேமுஞ் சேர்ந்து, கலந்த வெள்ளைப் போளத்தையும் கரிய போளத்தையும் நூறு ருத்தலுக்கு ஏறக்குறைய கொண்டுவந்தான். அவர்கள் இயேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்டு, யூதர் பிரேத அலங்காரம் பண்ணும் முறைமையின்படி அதைக் கந்தவர்க்கங்க ளுடனே கூடச் சீலைகளில் கட்டினுர்கள். அவர் சிலுவை யில் அறையுண்ட இடத்திலோ ஒரு தோட்டமும், தோட் டத்திலே யோசேப்பு கன்மலையில் வெட்டி வைத்திருந்த தும், ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்பட் டிராததுமாகிய ஒரு புதுக் கல்லறையும் இருந்தது. யூதருடைய ஆயத்த நாளானபடியினுலும், அந்தக் கல்லறை சமீபமானபடி யினுலும், அவ்விடத்திலே இயேசுவை வைத்தார்கள். யோசேப்பு கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனுன். ஆயத்த நாளா யிருந்தது. ஓய்வுநாளுந் தொடங்கிற்று. மத். 27, 56-60; மாற். 15, 42-46; லூக். 23, 50-54; யோவான் 19, 28-42.

---

பூமிக்குள் பொன்னும் சமுத்திரத்தில் விலையே றப்பெற்ற முத்துக்களும் மறைந்திருப்பதுபோல், யோசேப்பு, நீக்கொதேமு என்ற பக்தருக்குள் மறைந் திருந்த விசுவாசம் நமது ஆண்டவரின் திருமரணக் காட்சியால் வெளிப்படுகிறது. கர்த்தரின் அற்புதக் கிரியைகளைக் கண்டு, அவருடைய அமிர்த வார்த்தை

களைக் கேட்டதால் உண்டான விசுவாசம் மறைந்திருந்தபோதிலும், சிலுவையில் அறையுண்ட அவரைக் கண்ணோக்கின விசுவாசம் மறைந்திருக்க முடியாது.

ஆகாதவர்களோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள்; ஆனால் ஐசுவரியவானோடே தம்முடைய மரணத்தில் இருந்தார் (எசா. 53, 9) என்ற தீர்க்கதரிசன வாக்கின்படியே யூதர்கள் அவரை ஒரு கொலைபாதகனைப்போல் நடத்திக் கொன்று புதைக்க எண்ணங்கொண்டாலும், அவர்களில் மேன்மக்களான பேர்கள் அவருடைய திருச் சடலத்தை எடுத்து, வெகு மரியாதையாய் அடக்கம்பண்ண ஞானமுள்ள கர்த்தர் இடம் பண்ணினார்.

இயேசு நாசரேத்தானுடைய சீஷனும் சிநேகிதனுமாக வெளிப்படுவது யோசேப்புக்கு அவனுடைய சனத்தார் முன்னிலையில் பெரிய வெட்கமாயிருந்தும், அவன் நிந்தைக்கும் வெட்கத்துக்கும் அஞ்சாமல் துணிந்து பிலாத்துவினிடம் போய் நமதிரட்சகரின் திரு உடலைக் கேட்டான். யோசேப்பே, உனக்கு இம் மட்டும் இருந்த ஆஸ்தியெல்லாம் ஆஸ்தியல்ல. இன்று நீ பகிரங்கமாய்த் தெரிந்தெடுத்துக்கொண்ட ஆஸ்தியே ஆஸ்தி. தெய்வத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாகவே வாசமாயிருந்த (கொலோ. 2, 9) இரட்சகரை நீ தெரிந்துகொண்டதால், நீ எத்தனையான பாக்கியம் பெற்றாய். கிறிஸ்தவனே, நீ உலகத்துக்கு முன் கர்த்தராகிய இயேசுவை உன் பொக்கிஷமாகத் தெரிந்துகொள்ள வெட்கப்படாதே.

மெல்லிய புடவையைக்கொண்டு இறக்கி வளர்த்தப்பட்டிருக்கும் இயேசுவின் சரீரத்தை உற்றுப்பார், மனுஷனே. மகா மகிமைக்குப் பாத்திரமாகிய அவர் சிரசு இரத்தங் காயங் குத்தும் நிறைந்து நிந்தையுற்றிருக்கிறது. சோதிப்பிரகாச சுந்தரவடிவுள்ள அவர்

திருமுகம் அசுத்த உமிழ் நீரால் அழுக்கடைந்து, அடிகளாலும் அறைகளாலும் கன்றி, உயிர் பிரிந்ததினுல் வெளுத்திருக்கிறது. பாவியை நோக்கிப் பார்க்கும் உருக்கமும் இரக்கமும் உள்ள கண்கள் பஞ்சடைந்திருக்கிறது. அமிர்த வார்த்தைகளை எனக்கு ஆறுதலாய் மொழியும் அவர் திருவாய் மூடியிருக்கிறது. ஆசீர்வதிக்கிறதற்குத் தீவரிக்கும் அவர் திருக்கைகள் அமர்ந்திருக்கின்றன. பாதகனைத் தேடிவந்த பரிசுத்த கால்கள் சோர்ந்து கிடக்கின்றன. ஆ, இந்த மாறுதல் நான் என் அவயவங்களில் நடப்பித்த பாதகங்களுக்கு நிவிர்த்தி உண்டாக்கும் படியல்லவோ நடந்தது. இந்த என் நம்பிக்கையை நிச்சயப் படுத்தும்படி என் ஆண்டவரின் திருமேனியில் சிறந்த முத்திரைகள் இருக்கிறதையும் காண்கிறேன். அது அவருடைய ஐந்து காயந்தான். இந்தக் காயங்கள் பஞ்சமா பாதகனுகிய நான் வந்தடையும் அடைக்கலக் கோட்டையல்லவோ. என் மீட்பரின் புண்ணியத்தால் உயிரடைந்த நான் எனக்கு விரோதமாய்ப் போர்செய்யும் சாத்தானை வெல்வதற்காக என் அடைப்பத்தில் வைக்கும் ஐந்து கூழாங்கல் அல்லவோ.

யோசேப்பும் நீக்கொதேமும் கூடி, அவருடைய சரீரத்தில் உள்ள காயங்களிலிருந்து ஓடின இரத்தங்களைக் கழுவி, பிரபுக்கள் முதலியவர்கள் இறந்து போகும்பொழுது அவர்களுடைய சரீரங்களைச் சுகந்தவர்க்கம் இடுகிறதுபோல் அவருக்குஞ் செய்தார்கள். இயேசுநாதர் பிறந்தபொழுது கிழக்கு சாஸ்திரிகள் தூபவர்க்கத்தையும் வெள்ளைப் போளத்தையும் அவருக்குக் காணிக்கையாக வைத்து அவரை வணங்கிக் கொண்டதுபோல், அவர் இறந்த பின்பும் அவருடைய சரீரம் கனமாகக் கல்லறையில் வைக்கப்பட்

டது. இப்படியே, அவர் சீவ... ல் எல்லாம் ஊழியக்காரன் ரூபை அணிந்து, ...ம்நகம் குறைவுகளைச் சகித்துக்கொண்டும், தம்முடைய மரணத்திலே தாவீதின் குமாரனுகிய இராசாவும் கர்த்தருமாக விளங்கி அடக்கம் பண்ணப்பட வேண்டியதாயிற்று.

பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையதாயிருக்க, நரிகளுக்குக் குழிகளுண்டு, ஆகாசத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மனுஷனுடைய குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை (மத். 8, 20) என்று அவர் சொல்லத் தக்கதாக அவர் தம்மைத் தாமே வெறுமையாக்கினதால், ஒரு இரவல் கல்லறையில் வைக்கப்படவேண்டியதாயிற்று. ஆகிலும் இந்தத் தாழ்மையிலும் அவருடைய மகிமை வெளிப்படுவதைப் பார், ஆத்துமாவே. அவருடைய திருச் சரீரம் கற்புடைய சுத்தத்தின் சீர்கலங்காக் கன்னியின் கர்ப்பத்தில் உற்பவித்ததுபோல், அவருடைய திருமேனி ஒருவனும் ஒருக்காலும் வைக்கப்பட்டிராத ஒரு புதுக் கல்லறையில் வைக்கப்படலாயிற்று. எலீசா தீர்க்கதரிசி போன்ற ஒரு பழைய தீர்க்கதரிசியின் எலும்பு பட்டதால் அவர் உயிர்த்தெழுந்தார் என்று ஒருவருஞ் சொல்ல இடமில்லாதே போயிற்று.

நீ மண்ணுக்குத் திரும்புவாய் என்று பாவியான முந்தின ஆதாமுக்குப் போட்ட தீர்ப்பைப் பாவம் அறியாத இரண்டாம் ஆதாம் நிறைவேற்றக் கல்லறையில் வைக்கப்பட்டார். இதனால் பாவியாகிய என் கல்லறையைப் பிரதிஷ்டை செய்தார். ஆகையால் இனி என் கல்லறை என் பள்ளியறை.

## செபம்.

சகல நேசத்திற்கும் பாத்திரராகிய இயேசுவே, தேவரீர் ஏழைப்பாவியாகிய என் நிமித்தம்

உம்முடைய... ...ந்த இரத்தத்தைச் சிந்திச் சீவனை விட்டு விட்டதும... ...ாமல், உம்முடைய திருச் சரீரத்தைக் கல்லறையில் வைத்து அடக்கஞ்செய்வதற்கும் இடங் கொடுத்ததற்காக உமது திருநாமத்திற்கு ஸ்தோத்திரம். உம்மை இத்தனை பாடுபடுத்திக்கொண்றதாகிய என் பாவமும் உம்மோடே கல்லறையில் அடக்கப்பட்டது என்று அறிவேன். தேவரீர் அடக்கம் பண்ணப்பட்டதால் கல்லறைத் தோட்டமெல்லாம் பிரதிஷ்டையாயிற்று. நான் மரித்து அடக்கம் பண்ணப்படப் போகிற குழி சாபத்தின் ஸ்தலமாயிராது. நான் உம்மை விசுவாசிக்கிறபடியினாலே என் இருதயம் பூரித்து, என் மகிமை களிகூர்ந்திருக்கிறது, என் மாமிசமும் பத்திரமாய்த் தாபரித்திருக்கும். என் சரீரம் மகிமையான உயிர்த்தெழுதலுக்குக் காத்திருக்கிறதாய்க் குழியிலே படுத்து நித்திரை செய்யச் சகாயம் பண்ணியருளும் சுவாமி, ஆமேன்.

நான் இயேசுவின் சவத்துடன்
குழிமட்டாகச் செல்பவன்
ஆம், அவரோடே முழுதும்
அடியேனும் மரித்தடக்கமாகவும்.

உம்மோடே புதுச் சிஷ்டியாய்
எழுந்து வாழத் தக்கதாய்
பேய்ச் சாயலான சுபாவமே
என் நெஞ்சிலே அழியவேண்டும், இயேசுவே.

நான் பாவ ஊத்தையை இனி
பொறுத்திருப்பது எப்படி,
அப்பாரத்தைச் சுமந்திரேன்,
அரோசித்தேன்; நான் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன்.

(ப. ஞா. 57, 8-10.)

PRINTED AT THE S. B. PRESS, MADRAS.